29854

# பூர்வச் சக்கரவர்த்தி நாடகம்

பதிப்பாசிரியர்

கோடுமுடி சண்முகப் பிரகதம்

கொங்கு
வெளியீடு

# பூர்வச் சக்ரவர்த்தி நாடகம்

★ ஓலைச்சுவடியில் கிடைத்த தமிழ் இசை நாடகநூல் தெருக்கூத்து வகையிலானது.

★ சுவடியை அளித்தவர் கரூர் வட்டம், கொக்கம்பட்டி என்னும் சிற்றூரைச் சேர்ந்த
உயர்திரு. சின்னமுத்து நாயக்கர்.



★ ஓலைச்சுவடியைப் படித்துப் பெயர்த்துப் பிரித்து எழுதியவர் புலவர் செ. இ ர ா சு அவர்கள். கொங்கு திங்களிதழின் ஆசிரியர். பேரூராதீனப் புலவர், ஈரோடு, சி. எஸ். ஐ. உயர்பள்ளித் தமிழாசிரியர்.

★ நாடக ஆசிரியர்
விசுவகுலம் வெங்கிடா சலப் ............ வாலை கவி கருப்பனேந்திரன்.

★ பாடிய நாள்
தை
பரிதாபி வருஷம், மாசம் திங்கள் மகரம், பனிரண்டாம் தேதி, புனர் பூசம், பூரம்.

★ முத்தாலம்மன் விழாவின் போது இன்னும் மேடையில் நடிக்கப் பெறுகிறது.

# பூர்வச் சக்ரவர்த்தி நாடகம்

—o—

(முதலிரண்டு பாடல்கள் சிதைந்துள்ளன)

## 3

**எழுதியவர்**

வஞ்சினையாய்ச் சூதாடி நரிடி ழந்து
...ரஞ்சிதமாய் முறைமுனிவன் பகர்ந்த வன்மை
விஞ்சுபுகழ் தனிலுதித்த விஷ்வ குலம்
வெங்கிடா சலப்
...வாலைகவி கருப்பணேந்திரன் செப்புகவி
அற்புதமாய்.........முணர்ந்து பஞ்ச
லச்சணமா காவியிலக்கியம்...நன்னூல் ப...

## 4

**அவையடக்கம்**

..............செய் வானற் பாதம்
கும்பிட்டேன் என்சிரசில் கொண்டே னய்யா
தப்பினெனும்யா னுரைத்தபுன்சொல்பிழை எதுகண் டாலும்
தவப்பெரியோர் தான்பொறுத்துக் கொள்வீ ரய்யா
சித்திரமாய் முத்தமொழி மதுர வாக்கியம்
செப்பினேன் கதைவிளங்கச் செப்பி னேனே!

## 5

**காலம்**

செயமுலவு பரிதாபி வருசம் மாசம்
திங்கள்மகரம் பனிரண்டாந் தேதி தன்னில்
நயமுலவு புனர்பூசம்பூர ணத்தில்
நலமுயர்ந்த திதியும்லக்கனம் ஆன நாளில்
புயமிலவு நவநீதிச் சக்ர வர்த்தி
புண்ணியவான் சரிதைதனைப் புகழ்ந்து போற்ற
கயமுக முங்கடவுள் மூலா தாரக்
கணபதிதன் இருசரணம் காப்ப தாமே!

## 6

### அகவல்

### கதைச் சுருக்கம்

சீர்தழைத் தோங்கும் திகழ்கதிர்க் குலத்தில்[1]
பேர்தழைத் தோங்கும் பிரபல ராசன்
புவன மீறேழும் போற்றும்சொல் கோலான்
தவநெறி முறைமை தவறிடா மன்னன்
மன்ன னவர்க்கு மகராசன் மைந்தன்
புண்ணிய வாளன் பூர்வச் சக்ரவர்த்தி
தன்னிக ரில்லாத் தர்மசற் குணவான்
பாருல களந்திடும் பச்சைமால் பத்தரை[2]
சீருடன் போற்றும் செழுமணிக் கார்த்தான்
பைந்தொடி யாள்பெண் பதிவுமா பதியுடன்
மைந்தர்க ளோட வாழ்ந்திடும் நாளில்
சூரியன் குமாரன் துயர்ந்தோ சத்தால்
பாரியும் மைந்தரும் பதிதனை யிழந்து
காரிருள் வனத்தில் கடுகியே சென்று
ஆருமில் லாத[3] அகுதியைப் போல
வனமெலாம் திரிந்து மதியெலாம் மயங்கி

---

1. கதிர்குலம் - சூரிய குலம்.
2. பத்தரை-பதர்த்தரை
3. அகுதி - அகதி

சனியனார் செய்த[1] சரப்பிழை யதனால்
ஆனந்த விடமாய் அன்புடன் இருந்து
மானனை யாளை வஞ்சமாய்ப் பிரிந்து
பாலகர் தனையும் பரிவுடன் தோர்த்து[2]
சீலமா யிடையிற் சிறுகுடி தாங்கி
கோலமாய்ச் சென்று [3]குலைக்களந் தனிலே
கால்கையும் துணிக்கக் கதறியே பதைத்து
சரஸ்வதி கிருபையால் தந்தருள் புரிய
பரதேசி காவலன் பதிதனில் சென்று
பொஷ்ப ரஞ்சனியைப் புகழ்மணம் சூட்டி
கற்பகம் சேர்ந்த கானிலே சேர்ந்து
தேவிதன் அருளால் தெய்வீகம் விளங்கும்
சோபித மாகத் துலங்குமந் நாளில்
பண்புடன் மந்திரி பரதரச் சகனும்
சம்மதாய் வந்து சரணமே புரிய
மைந்தர்க ளதுபோல் வந்துசேர்ந் திடவும்
பைந்தொடி யாள்பெண் பதுவுமா பதியுடன்
சந்தோச மாகத் தானிருந் திடவே
கோளறுஞ் சனியன் கொடும்பகை வளந்தே
ஏழரை வருசம் இயல்பது சரியாய்
முடிந்ததின் பின்னே முனிவர்க ளுடனே
படிந்த செஞ்சடையான் பார்வதி யுடனே
மாயனான் தேவன் வணங்கியே போற்ற
சீலமால் விடைமேல் சிரந்தெழுந் தருளி
பூவாய் றென்னும் புஷ்பவாஞ் சினையை
தேவர்கள் கையால் திருமணம் சூட்டி
கால்கையும் வளர்ந்திட கருணையே பெற்று
சரஸ்வதி தேவி தன்னரு ளாலே
சிகதரச் சகபுரஞ் சென்றர சாண்டு
சுகமுடன் வாழ்ந்திடும் சோபனக் கதையை
நாடக மாக நாவினில் துதித்துப்
பாடினேன் பெரியோர் பாதமதைச் சிரசில்
சூடினேன் எனக்குத் துணையருள் வீரே!

1. சரப்பிழை - தொடர்ந்து செய்யும் தவறு.
2. தோர்த்து - தொத்து - இழந்து
3. குலைக்களம் - கொலைக்களம்

# 7

## விருத்தம்

விந்தைதரும் வடவரையைக் கரங்கொண் டேந்தி
 விளங்குமறை நால்வேதம் ஆறு சாஸ்திரம்
முந்திமகா பாரதத்தை வியாசர் ஓதி
 மொழிந்திடவே தெரிந்தெழுந்து மூலா தாரம்
தொந்திவயிர் கரத்தொடுங்கும் ஈசன் போன்ற
 துதிக்கையென் விளிக்கெதிரே தோன்றக் காட்டி
வந்தென்னது நாவிலுப தேசம் செய்ய
 மகாகண பதிசபையில் வருகின் றானே!

# 8

## விநாயகர் வருகிற தருவு[1]

சதுர்வேதப் பிள்ளையார் வந்தார்
 பிர்ம்மாண்ட ரூப
சதுர்வேதப் பிள்ளையார் வந்தார்

கதிர்வேல் முருகன் வள்ளி
 கணவன் தனக்கு மூத்த
மதிசேரும் பூருவ மிலங்க
 மனவோர் கொம்புந் துலங்க (சதுர்வே)

முந்திப் பரமகுரு
 மூலவித்தாய் முளைத்த
தந்தி முளைக் கடவுள்
 சமையம் அறிந்துதவும் (சதுர்வே)
மகுடாபி டேகம் சூட்டியே—குழைக்கிசைந்த
 மகர குண்டலம் மாட்டியே
சொகுசாய் வெண்ணீர்[2] மூட்டியே-ருத்திராட்சமாலை
 துவடத் தாவடம் பூட்டியே (சதுர்வே)
 புகழ்சேறுபா ரதத்தை
 மகிழ்வாயுன் மேற்பிடத்தை
 துதைசேரவே குறித்து
 [3]சிகமெலாம்தான் பிரித்து (சதுர்வே)

---

1. தருவு-தரு-இசைப்பாடல்
2. வெண்ணீர் - வெண்ணீறு திருநீறு.
3. ஜெகமெல்லாம் பாரித்து

## விருத்தம்

பங்கயஞ்சேர் வாவியிலே ஸ்நானம் செய்து
பண்புயரும் திருநாமம் படைத்துச் சாத்திச்
சங்கையுடன் பூங்காவில் அங்கே சென்று
தார்மருவும் பூந்துளபந் தவிலா வாயும்
இங்கிதமாய்க் குடலையில்மாங் கனியும்
ஏகபரி பூரணமாய் ஏப்ப மிட்டுத்
துங்கமதத் தடக்களிறைப் பூசை செய்ய
சொகுசுடைய வேதியனும் தோன்றினாரே!

# 10

## தருவு

வேதியர் வந்தாரே—பூசை செய்ய
வேதியர் வந்தாரே

ஓதிய மந்திரம் சாஸ்திரப் பொத்தகம்
உச்சித மாய்வெகு கச்சித மாய்க்கொண்டு
சோதி மயமான தாம்பூரச் செம்பு
சொகுசுடன் பூசைகள்[1] அமுசுடன் செய்திட
(வேதியர்)

மார்பிலே முப்புரி நூலும் துலங்கிட
மாமறை வேதியர் தொந்தி குலுங்கிட
சீர்பெறும் வல்லவட் டோங்கி யிலங்கிட
சீசப்பிள் ளையொடு பூசை மகிழ்ந்திட
(வேதியர்)

# 11

## கட்டியக் காரன் விருத்தம்

செந்தமிழுக் கருள்புரியும் திருநன் னாடு
சிகதரக மாநகரில் செங்கோல் தங்கும்
வந்தனைசிந் தனைமறவாக் கீர்த்தி கொண்ட
மன்னன்பூர்வ சக்கிரவர்த்தி வாசல் காக்கும்

---

1. அமுசுடன்-அம்சமுடன்.

சுந்தரம்சேர் பணியிலங்கத் திலதந் தீட்டி
துண்டறீக விளிமிரட்டி சொகுசைக் காட்டி
மந்திரஞ்சேர் புயமிலங்கக் கட்டியக் காரன்
வாகுடனே இச்சபையில் வருகின் றானே!
கட்டியக் காரன்வந்தானே—மகராசன் வாசல்
காரியக் காரன்வந்தானே

## 12

### தருவு

கட்டியக் காரன் வந்தானே—மகராசன் வாசல்
காரியக் காரன் வந்தானே

மடடிலடங் காக் கீர்த்தி
மன்னன் பூர்வச் சக்ரவர்த்தி
இட்டமாய்க் கொலுவை நத்தி
இங்கிதத் துடனே வெத்தி (கட்டியக்காரன்)

—உல்லாசமாக

மந்திர திலதந் தீட்டி
வச்சிரக் கவசம் பூட்டி
விந்தைவி கடம்பா ராட்டி
மீசையை முறுக்கிக் காட்டி (கட்டியக்காரன்)

[1]யெச்சணி வித்தைகள் கொண்டு
யிகழ்ச்சிகளனேகம் முண்டும்
உச்சிதத் தொழில்கள் ரெண்டு
மெச்சிப் புகழை விண்டு (கட்டியக்காரன்)

### வசனம்

அகோ! வாருங்கள். ராசாதிராசன் ராசமார்த்தாண்டன் ராசபர மேஷ்வரன் ராசகோலாகலன் ராசமார்த்தாண்டன் பூர்வச் சக்ர வர்த்தி மகாராசன் கொலுவுக்கு வருகிறார். பராக்கு! எச்சரிகை!

## 13

### விருத்தம்

பருவருளும் செங்கமல வாவி சூழும்
பவுசேகர ரசகனெனும் பாவிக் கான

---

1. யெச்சணி-யக்ஷி.

தருமநெறி தவறாத செங்கோல் தங்கி
அரசாண்டார் பூர்வச் சக்ரவர்த்தி
பருவாதி அடவியர்கள் கவரி வீச
பஞ்சவர்கள் காளாஞ்சி பணிக்கை ஏந்த
துரைகள்பணி மகுடமுடி பளபளென்ன
சொகுசுடன்சிம் மாசனத்தில் தோன்றி னரே!

## 14

### தருவு

தேன்கமுகும் சோலைசிறந்த
சிகதரச் சாபுரியில்
வாங்குசிலை மதன்போல—சிம்மாசன
மண்டப மீதினிலே
தாங்கும் மணிமகுடம்—மருவற்ற
சந்திரன்போல் இலங்க
மாங்குயி லாற்பூர்வ—சக்ரவர்த்தி
வந்து கொலுவிருந்தார்

சித்திரக் குடைபிடிக்க—செய
செயமென்றே படிக்க
யெத்திசை யையாளும்—சக்ரவர்த்தி
யிருந்தான் கொலுவதனில்
கொஞ்சும்கிளி மொழியா ளுங்கூட
குழந்தைகள் இருவருடன்
வஞ்சியெனும் பதுமாவதியுடன்—மா
மண்டபத் தில்இருந்தான்
செஞ்சி மன்மதன்போல்—சிறந்தரன
திவ்வியப்பிர காசமுடன்
ரஞ்சித மாய்க்கொலுவில்—பூர்வச்சக்ர
ராசனும் கொலுவிருந்தான்.

## 15

### வேறு தருவு

ராசராசேஷ்வர கோலாகலன்
ராசமார்த்தாண்டன் வந்தான்

தேச தேசம்புகழும் சிகத ரச்சநகரம்
வாசம் பூர்வ சக்கிரவர்த்தி மகாராசன் ராச

மகனுரும் புனித
சுகமிருங் கனக
புகழ்சிறந் திலங்க
சபையெனும் கொலுவில் (ராச)

தும்புரு நாரதர்
தம்புரு மீட்ட
துந்திமி மேளம்
அதிர்ந்து பாராட்ட
கிம்புறு கின்னரர்
சங்கிதம் கூட்ட
கெடிமன்னர் வந்து
காணிக்கை நீட்ட
கெதியிலங்கும் புய
மதியிலங்கும் நய
சுதியிலங்கும் செய
பதியிலங்கக் கொலுவில் (ராச)

கோடிசந்திரன் போலமுகம் வாடியிலங்க
குழந்தைசூரியன் போல மகுடந்துலங்க
சூடியநறு மலர்சுகந் தனிலிலங்க
தொகுரத்தின கனஞ் செகுணத் திமிதிமி (ராச)

## 16

### விருத்தம்

பூங்குயில் மடவார் போற்றும்
புகழ்ந்திடும் நமது வாசல்
காங்குசை மிகுந்த கட்டியக்
காரனே சொல்லக் கேளும்
பாங்குயர் நமது மந்திரி
பரதரச் சகனை இங்கே
நாங்கியல் பறிந்து போற்ற
நமதிடம் அழைத்து வாராய் !

வசனம்

அகோ! வாரும் பிள்ளாய் கட்டியக் காரா! நம்முட மந்திரியாகிய பரதரச்சகனை அதிசீக்கிரமாக அழைத்துவாரும் பிள்ளாய்!

## 17

### விருத்தம்

சீரிசை புகழும் எங்கள்
சிகதரச் சக நன்னாட்டில்
மீறிய தரும சிந்தை
விளங்கியே குணவிபேகம்
பேர்புகழ் சக்கரவர்த்தி
பிரபலன் கொலுவின் முன்னே
பார்புகழ் சத்யவந்தன்
பரத ரச்சகன் வந்தானே.

## 18

### தருவு

மந்திரியும் வந்துதோன்றினான்—பரதரச்சகன்
மந்திரியும் வந்து தோன்றினான்

சந்திர காவிப் பாகுகட்டி
மந்திர திலதந் தீட்டி
விந்தைசேர் புகழை நாட்டி
விற்பனன திகாயஞ்சூட்டி (மந்திரியும்)

சீதனா முகுந்த வாசு
தேவனே சரண மென்று
வேதபா ராயணபாக்கியம்
விந்தையாயத் தியானங் கொண்டு (மந்திரி)

## 19

### விருத்தம்

செய முலவு கருணைவளம் பொலிந்த நாடு
சிகதரச்ச மாநகரில் சிறந்த கீர்த்தி
நயமுலவுங் கனகமணி யமர்ந்த பீடம்
ரத்னசிம்மா சனப்பதியே ராச ராசே!

புயமிலங்கும் சவுர்யபூர்வ சக்கர வர்த்தி
புண்ணியனே எனையழைத்த புதுமை என்று
தயவுகந்து கிருபைசெய்யும் சாமி நாதா
சரண முங்கள் திருவடிக்குச் சரணந்தானே

**வசனம்**

அகோ வாருங்களய்யா சுவாமி! அடியேனை அழைப்பித்த காரியம் எனக்கு இன்னதென்று திருவுளம்பற்ற வேணுங்களய்யா சுவாமி

## 20

**விருத்தம்**

பண்புறு செயலு ணர்ந்த பரதரச் சகனே கேளாய்
அன்புடன் நமது ராச்சியம் அடங்கலும் சுபிட்சந் தானே
தம்பிரான் கோவி லின்னம் தவிஷ்டனை ஆல யங்கள்
சம்பமாய் நடந்து செய்தை தனைஎனக் கிறைசெய் வாயே.

**வசனம்**

அகோ வாரும் பிள்ளாய் பரத்ரச்சகனே! நம்முடைய தேசங்களிலே விளங்கப் படாநின்ற சகலசிவ தெய்வங்களுக்கும் உயிர்ப் பிராணியிருந்தும் தர்ம நீதியுடனே தேவாலயம் பிரம்மாவாலயம் [1]விஷ்ட்டுவாலயம் முதலாகிய கோயில்தலங்களும் மூன்று தேசிகாலமும் தவிறாமல் அபிஷேகக் கட்டளை நடந்துவருகிறதா! சொல்லும் பிள்ளாய் பரதச்சகனே.

## 21

**விருத்தம்**

அய்யனேபுவனம் அம்பத்தாறுதேசங்கள் எல்லாம்
மெய்யதாய்ச் செங்கோல் நீதம் விளங்கியராசே கேளும்

மைவிளி மடவார் மோகன
மணிவண்ணன் கிருபை யாலே
செய்ததோர் குறையொன் றில்லை
திருவடி சரணம் தானே

---

1. விஷ்ட்டு-விஷ்ணு.

வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி தேவரீர் கிருபாகடாட்சத்தினாலே நம்முடைய தேசங்கள்தோறும் குறையொன்றில்லை. சுபிட்சமாய் இருக்கிறார்களய்யா சுவாமி.

## 22

விருத்தம்

யாரினில் உயர்ந்த கீர்த்தி
படைத்திடும் நமது வாசல்
காரியம் அறிந்து போற்றும்
கட்டிய காரா கேளும்
பூரிய தானம் செய்ய
புனிதமாய் நம்ம தேசம்
சார்பினில் வளரும் ஆண்டி
தவசியை அழைப்பி யாயே!

வசனம்

அகோ வாரும் பிள்ளாய் கட்டியக்காரா அன்னதானம் சொர்ண தானம் பூரிகா தானம் வஸ்திரதானம் முதலாகிய தானதர்மங்கள் செய்யவேண்டிய திருப்பதினாலே ஆண்டி பரதேசிகளை அதிசீக்கிரமாக அழையும் பிள்ளாய்.

**கட்டியக்காரன் :** அப்படியே நல்ல பாக்கியமாச்சுதய்யா சுவாமி.

தருவு

## 23

ஆண்டிகள் தவசிகளும்—பரங்களும்
அகதிகள் மிகவந்து தோன்றினரே
தாண்டவம் புரிந்திடவே—சிதம்பரத்
தவசிகள் மிகவந்து தோன்றினரே
வேண்டிய பதமணிந்து – சடைகளை
விரித்துநின் றோமென வேதுதித்து
(ஆண்டி)

குருவுடன் சீசனுமாய்—பலபல
    கோலங்க ளைய்ஆதி மூலமென்றே
பெருகிய சபைதனிலே—சிவகதை
    பேசிக்கொண் டிருகையை வீசிக்கொண்டே
(ஆண்டி)

வாதமும் வெடிகுளை — சிவ
    வாந்தியும் பெறுவயிறோ தமுதுபோலே
தாதரும் பிறகாலே—கூடியே
    தவளைச்சங் கூதிக் கொண்டே
(ஆண்டி)

## 24

### விருத்தம்

பரதரட் சகனே கேளும்
    பகருவோம் நமது தேசம்
மறையவர் புகழ்ந் திலங்கும்
    வாசமாம் கோவில் முன்னே
சுரதசங் கீத நாட்டியம்
    சொகுசுடன் செய்ய வேண்டி
[1]தரதன ஸ்திரியை மேடை
    தண்மையாய் அழைப்பியாயே!

### வசனம்

அகோ வாரும் பிள்ளாய்! நாடக சாலைப் பெண்களை அதிசீக்கிரமாக அழைத்துவாரும் பிள்ளாய்!

## 25

### தருவு

நாட்டியஞ் செய்தாரே – கொலுவினில்
நாட்டியஞ் செய்தோரே

நாட்டியஞ் செய்தாரே
தீட்டிய வழிமாதர்
பேட்டிய மதன்கா
மேட்டிகள் போலவே (நாட்டியஞ்)

---

1. தரதனஸ்திரி-நாட்டிய மாதர்.

மல்லிகைமுல்லை மறுமலர் சூடி
மங்களஞ்சேர்சுதி சங்கிதம் பாடி
கல்விக்குராசர் சதிர்தின மோடி
கர்த்தன்பூர்வ சக்கரவர்த்தி முன்னோடி (நாட்டியஞ்)

கொஞ்சிய மாங்குயில் குஞ்சனம் போலவே
கோதில்லா மாதர்கள் குனிந்து நின்றாடவே
மிஞ்சியனேகந் தொழில்களி னாலே
மேனகைரம்பை ஊர்வசி போலவே (நாட்டியஞ்)

**வசனம்**

அகோ வாரும் பிள்ளாய் கட்டியக்காரா! நாட்டியம் பார்த்து மகா சந்தோஷமாச்சுது. இந்தப் பெண்களுக்கு வெகுமதி கொடுத்து அனுப்பி வையும் பிள்ளாய்.

**கட்டியக்காரன் :** அப்படியே நல்ல பாக்கியமாச்சுதய்யா சுவாமி.

## 26

**விருத்தம்**

பங்கையே திருவை மேளம்
பச்சைமால் கிருபை யாலே
செங்கையில் சிலைவாள் ஏந்தி
தென்னவர் புகழ்ந்து போற்றி
சங்கையாய் மனைவி யோடும்
தாரணி மகுடம் பூண்டு
இங்கித மாகி ராச்சியம்
இருந்தர சாண்டா ரன்றோ!

**வசனம்**

இந்தப் படிக்கி பூர்வச் சக்கரவர்த்தி மகாராசன் மகா பத்தி முத்தி வைராக்கியத்துடன் ஆறில் ஒன்று கடமை வாங்கி அசையா மணிகட்டிக்கொண்டு துஷ்ட்ட நிக்கிரக சிஷ்ட்ட பரிபாலனம் செய்துகொண்டு இந்தப் பஞ்சக்கோடி பூமண்டலங்களுக்கும் அதிபதியா யிருந்துகொண்டு ராச்சிய பரிபாலனம் பண்ணுகிற காலத்திலே சூரிய குமாரனாகிய சனியேஷ்பர பகவான் வருகிறவிதம் யெப்படியென்றால்

## 27

### விருத்தம்

மந்திரகிரி புயன்பூர் வீக
மனுநெறி தவறி டாத
சுந்திரன் மனைவி மக்கள்
தொகுத்திடும் பதி யிழந்து
அந்திரமான காட்டில்
அருள்வனந் தன்னில் ஓட
சந்திகண் டனந்தன் போல
சனிபக வான்வந் தானே!

## 28

### தருவு

ஆதிவேதியன் போலே
நீதி ராசன்முன் றலே
அன்புடன் சனியனும வந்தான்
சோதனை செய்வேனென் றெண்ணி
நீதிவான் கொலுவை நண்ணி
தீதுறு சனியன் வெகு
சாதுர்ய மயமாகும் (ஆதிவேதியன்)

காதில் குண்டலம் பூட்டி
சோபிக்க நாமந் தீட்டி
பேதிக்க ரூபங்கள் காட்டி
வாதிக்கும் சனியன் கோட்டி (ஆதிவேதியன்)

ஞசையாத விகுமாரன் நான்மாய விநோதவீரன்
ஞாயாதிபதியான ரவிகுல உபகாரன் (ஆதிவேதியன்)

## 29

### விருத்தம்

வந்தவே தியன்தனையே கண்ணால் கண்டு
மன்னன்பூர்வ சக்ரவர்த்தி மகுட வேந்தன்
சிந்தைமகிழ் வாகநமஸ் காரம் செய்து
சிறந்தசிம்மா சனத்திருத்தித் தெண்டம் பண்ணி

எந்தஊர் எங்கிருந்து எங்கே போறீர்
இங்கேவந்த காரியத்தை எனக்கு நன்றாய்
விந்தையுடன் சொல்லுமென்றே ராசன் கேட்க
வேதியனும் வாய்திறந்து விளம்பு வானே

### வசனம்

அகோ வாருங்களையா சுவாமி! பிராமண சந்நியாசியாரே என்று பூர்வச் சக்ரவர்த்தி ராசன் சிம்மாசனத்தை விட்டுக் கீழே இறங்கி பதுமாவதியும் தானுமாக அதிகப் [1]பயங்கரத்துடனே பாதநமஸ்காரம் பண்ணி, தேவரீர்! எந்த ஊர், எந்தத் தேசம், எங்கே இருந்து எங்கே போறீர்? அடியேனுடைய ஆச்சிரமந் தேடி வந்த காரியம் இன்னதென்று தெரியப்படச் சொல்ல வேணுங்களய்யா சுவாமி.

## 30

### விருத்தம்

மன்னவா இவ்வுலக முழுதுங் காத்த
மனுநீதிச் சக்ரவர்த்தி மைந்தா கேளும்
விண்ணமெல்லாம் சுடரொளியாய் அண்ட மெங்கும்
வெந்தனல்போல் சிவந்தெழுந்த வெய்யோன் மைந்தன்
எண்ணிய தொந்தரவு இடுக்கம் செய்வோம்
என்பேரு சனிபகவான் என்று சொல்வார்
உன்னிடத்தில் வேதியன்போல் வந்த சேதி
உண்மையுடன் கேளுமென்றே உரைசெய் வானே.

### வசனம்

அகோ வாரும் பிள்ளாய், பூர்வச் சக்ரவர்த்தி, இந்த மண்டபங் களிலே விளங்கப்படாநின்ற ராசராசர்களையும் சக்கிரவர்த்தி களையும் முதலாகிய, இதுவுமல்லாமல் பிரம்மாவிஷ்ணு ருத்திரன் என்று சொல்லும்படியாயுள்ள திருமூர்த்திகளையும் பேததேகம் செய்யப்பட்டவன் சூரியபகவான் குமாரனல்லவா? என் பேர் சனீஸ்வர பகவான். இப்போது உன்னிடத்திலே வந்திருக்கிற காரியம் என்னவென்றால் உன்னுடைய திரேகத்தில் சார்பாகத்

---

1. பயங்கரத்துடனே-பணிவுடன்.

துயர்ச்சியாக வேணும் ஆனால் இளமையிலே வந்தால் நல்லதோ முதுமையில் வந்தால் நல்லதோ இதற்கு (இதற்கு) வகை சொல் லும் பிள்ளாய் பூர்வச் சக்ரவர்த்தி மகாராசனே.

## 31

### விருத்தம்

வையகந் தனிலே செங்கோல்
விளங்கிய கீர்த்தி யெல்லாம்
அய்யனே உமது பாக்கியம்
அல்லது இனிவே றுண்டோ
வெய்யவன் மகனே என்னை
விரும்பிவே தியன்போல் வந்தாய்
செய்வது இனிமேல் என்ன
திருமுடிச் சரணம் ஐயா

## 32

### வெண்பா

சித்திரமே கண்மணியே திறந்தபது மாவதியே
உத்தமியே கேளாய்என் ஓவியமே—பத்தினியே
இத்தனைநாள் உன்னைவிட்டேன் இளமையிலே தொடுப்ப
னென்று
கற்றதனுக்கு மேலான கலியன்வந் துரைத்தான்
பெண்ணே

### வசனம்

ஆனல், வாரும் பெண்ணே பதுமாவதியே! சூரியன் குமாரனாகிய சனீஷ்வர பகவான்நம்மிட பங்குலே சார்பாக வந்திருப்பதினாலே அவரைச் சரணாகதியடைந்து வருவோம் பெண்ணே

**பதுமாவதி** :—அப்படியே நல்லது பாக்கிய மாச்சுதையா சுவாமி.

## 33

### தருவு

சரணம் சரணம் ஐயா சனிபகவானே—என்னைத்
தற்காத்து ரட்சித்தருளும் சாமிநாதனே

அருணசந் ததியான்ஆதி மூர்த்தியே என்னை
அருள்கொண்டு காக்கின்ற ஐயனே போற்றி (சரணம்)

வேத புராண வடிவேலனே—உன்னை
விரும்பினபேர்க் கருள்தரும் புண்ணியவானே
சூதெனும் கபடறியேனே - வந்து
துணையருள் கிருமைசெய்யும் உனைமறவேனே
(சரணம்)

மூவர்கள் வந்துதான் தப்பினாரே—அண்ட
முனிவரும் தேவருமுனைக் கடந்தாரே
யாவரும் பாக்கியாய் நின்றாரோ எனக்கு
அருள்செய்ய அனுகூல மாகவந்தீரே (சரணம்)

## 34

### விருத்தம்

அய்யனே கேளா யிந்த
அண்டகோ ளங்கள் எல்லாம்
மெய்யதாய் நிறைந்த சூது
விளையாடும் சனியே போற்றி
பைய்யவே நமைத்து யர்ந்து
பலன்பெற வேணு மென்றால்
துய்யதோ ரிளமை தன்னில்
தோன்றுமென் றுரைசெய் தாரே

### வசனம்

ஆனால் வாருங்களய்யா சுவாமிசனியேஷ்வரா! தேவரீர், எங்கள் பங்கிலே சார்பாக வேணுமென்று கிருபை செய்து வந்த படியி னாலே தேவரீர் மனதின் படியே யிளமையிலே வந்து ரெட்சிக்க வேணுமையாசுவாமி.

**சனிபகவான் :** ஆனால் வாரும்பிள்ளாய் பூர்வச்சக்ரவர்த்தி மகா ராசனே நம்மை யிளமையில் வந்து துயச்சியாக வேணுமென்று சொல்ல வந்தாயல்லவா, நீய் மகா தர்ம நீதியோடுங்கூடி ராச்சிய பரிபாலனம் செய்யப்பட்ட நாடு நகரமும் பஷ்சு பண்டாரமும் முதலாகிய பொருள்களையெல்லாம் சேதப்படுத்தி உன்னுடைய சித்தி புத்தி அறிவாகராமெண்ணப்பட்ட மெய்யறிவைத் தவிர்த்

துப் பல பல விதங்களாய் பேதகம் செய்து வைப்போம். அதுவுமல்லாமல் உம்முடைய பங்கிலே ஏழரை வருஷம் சரிபாயிருந்து விளையாடுவோம். நீ வியாகுலப்படாமல் மனதைத் திடப்படுத்திக் கொண்டு இரும் பிள்ளாய். நான் போயி வருகிறேன்.

## 35

### விருத்தம்

வரமென வேயுரைத்த
    பூர்வச் சக்ரவர்த்தி
வலியசிந்தை மனவாக்கில்
    வந்து சாடி
தீப் புரமாய்க் கலந்துடல்கள்
    எங்கும் செய்ய
சிந்தையெல்லாய் பலவிதமாய்ச்
    செய்த பின்னும்
கோப்ப முடன் அக்கினிக்கண்
    பொறிய ரக்க
கொடியசனி யேஷ்பரனும்
    கொடுகோ டென்று
காவிலவன் தனையனுப்பித்
    தச்ச ரூபம்
காட்டியே மறைந்து நகர்
    கடந்திட் டானே

### வசனம்

இந்தப்படி சனிபகவானும் பூர்வச் சக்கிரவர்த்தியைச் சார்ந்து நீதிமார்க்கந் தவறும்படியாய் மிருக சாதிகளைத் திட்டித்து வெள்ளாண்மைப் பயிர்களை அழிக்கும்படி செய்தார் சனிபகவான் என்றவாறு.

## 35

### தருவு

மிருக சந்துகள் பரவுகும்பொடு
    விளைப்புனந் தனில் வந்ததே

கரடிபுலிகள்மான் களும்வெகு
திரள்கடர்ந்து கூடியே
கனதத் திரளாய் சினத்த பன்றிகள்
புனத்தை வந்து சாடியே (மிருக)

துள்ளித் துடந்து மானும் கலையும்
மெள்ள மலையை விட்டி றங்கியே
சுரந்து ரும்புகள் திறைந்து வனத்தில்
யிருந்து வெயிலுக் கிறங்கியே (மிருக)

## 36

### விருத்தம்

மலைமிருகந் திரளாக வந்து கூடி
வளர்ந்திருந்த பயிரளித்த வருத்தங்கண்டு
உலைமெழுகு போலுநகி குடிகள் எல்லாம்
உள்ளமெல்லாம் படபடென உத்தி யாடி
நிலைமைபூர்வச் சக்கிரமன்னன் பதியில் வந்து
சிந்தனையாய்ப் பயிர்கள் எல்லாம் போச்சு தென்று
தலைமுறையில் கண்டதில்லை யிந்த நாட்டில்
தனிமிருகம் சூழ்ந்ததென்று தான்வந்தாரே.

## 37

### தருவு

கூடி யடர்ந்து ராசன் கொலுவில்
குடியானவர் வந்து தோன்றினாரே
நாடி மிருகம் விளைந்த கதிரை
ஔப்பிக்* கெடுத்த சலிப்பினாலே
வாடியே முகங்கள் சோம்பியே தேம்பி
மயக்கமும் [illegible]து தியக்கமதாய் (கூடியடர்ந்து)

## 38

### விருத்தம்

வருந்தியிட்ட வெள்ளாண்மைப் பயிரை எல்லாம்
மடிந்துவீழப் பலமிருகம் வந்து கூடி

---

* ஔப்பி-உழப்பி.

விருந்தெதென வந்தளிக்கும் யிந்த நாட்டிலய்யோ
மிருகபயம் வந்துதெங்கள் விதிகள் தானோ
அருந்தவஞ்சேர் புண்ணியபூர்வ சக்ரவர்த்தி
ஆண்டவனே உன்னிடத்தில் அபயமிட்டோம்
விரைந்தெழுந்து வனம்புகுந்து வேட்டை யாடி
மிருகபயம் தனைவிலக்க வேணு மையா.

வசனம்

ஆனால் வாருங்கள் குடியானமார்களே. நீங்கள் ஒன்றுக்கு மஞ்ச வேண்டாம். உங்கள் இடுக்கண் தீர்த்துத் தருகிறேன். உங்கள் தாவளம் போய்ச் சேருமபிள்ளாய். குடியானமார்களே.

## 39

விருத்தம்

மந்திரி சொல்லக் கேளும்
மனிதரும் நாது தேசம்
நிந்தணை யாகத் தம்ம
நெறிமுறை தவறி னோமோ
சுந்தரத் துளப மாலோன்
சோதனை எதுவோ காணேன்
எந்தனார் மிருகம் வந்த
இடஞ்சலுக் கேது சொல்லாய்.

வசனம்

ஆனால் வாரும் பிள்ளாய் பத்தரட்சகனே நம்முடைய தேசங்களிலே ஏதேதினிலும நீதி மார்க்கந் தப்பி நடந்ததுண்டோ? அல்லது நமது இட்ட குலதெய்வமாகிய ஸ்ரீமன் நாராயணனுடைய சோதனைப்படியோ ஒரு காலங்களிலுமில்லாத அநியாயமாய்ப்போது நடக்கவேண்டிய தென்னை பிள்ளாய் பரதரட்சகனே.

## 40

விருத்தம்

ஆவதும் சிலது காலம்
அழிவது அதிர்ஷ்டம் வீணாய்

போவது பிர்ம்ம தேவன்
பொருந்திய கோல மல்லால்
தேவர்க ளாலும் வெல்ல
சியலுண்டோ இரவி மைந்தா
பாவதா ரிகள்*போல் நம்மை
பற்றிப்பின் துயர்ந்திட்டானே.

வசனம்

ஆனால் வாருங்களய்யா சுவாமி ஆவதென்றும் அழிவதென்றும் யோகமென்றும் தரித்ரமென்றும் அனுபோக விதியானது காரணங்களை நம்முடைய சமுகத்திலே பிராமணன் போல வந்து சனியீஸ்வரன் செய்த கோலமேயல்லது வேறே ஒன்று மில்லையையா சுவாமி.

## 41

### விருத்தம்

சனியனார் சூதென் றாலும்
சதுர்முகன் விதியென் றாலும்
புனிதமாய் இரவி மைந்தன்
பிடித்தபோ தலைத்திட் டாலும்
இனியதோர் குடிகள் கூடி
இட்டவெள் ளாண்மை தன்னில்
பனிமிருக கங்கள் தின்னப்
பார்த்திட லாமோ சொல்வாய்.

வசனம்

ஆனால் வாரும் பிள்ளாய் பரதரட்சகனே! நம்முடைய வனக்கிரி சார்பில் வேட்டை மார்க்கம் செய்ய வேணும் பிள்ளாய்! அய்ம்பத்தாறு தேசத்து ராசாக்களையும் வரும் படியாய் ஒரு திருமுகம் எழுதும் பிள்ளாய்.

பரதரட்சகன் : அப்படியே நல்ல பாக்கியமாச்சுதையா சுவாமி.

---

* பாவதாரிகள்-பாவஞ்செய்தவர்கள்

## 42

### விருத்தம்

அங்கவர் வார்த்தை கேட்க
அழகுள்ள பூணு நூலும்
தங்கியே மார்பில் மின்ன
தலையில் குலலாவு மிட்டு
செங்கையால் தடியும் ஊன்றி
திரேகமும் நடுக்கம் புக
மங்கையத் துடனே நல்ல
மறையவர் வருகின் றாரே.

## 43

### தருவு

அரிஓம் ஹரி நாராயணா
அச்சுதாஅரி கேசவா
நேரிய பல்லுந் துலங்கவே—அய்யர்
மார்பினில் பூணூல் இலங்கவே
சாத்திய நாமந் துலங்கவே—கையில்
தடியும் பொத்தகமும் துலங்கவே
கோர்த்த மணிகள் கழுத்தில் இலங்கவே
கோபாலய்யரும் தோன்றினர்.
பஞ்சுபோலே நரைத்த தாடியும்
பழுத்த பழம்போலே மேனியுமாய்
செஞ்சொல்லு* வார்த்தைகள் பேசிப்பேசியே
திரேகமும் மிக நடுங்கவே (அய்யர்)

### வசனம்

ஆனால் வாருங்கள் கோபாலய்யரே நம்முடைய சிசுதரசபுரத்திலே ஒரு காலங்களிலுமில்லாத அந்நீதமாகக்* குடிகள் இட்ட வெள்ளாண்மைப் பயிர்களிலே மிருக சாதிகள் வந்து பல சேதம் பண்ணுவதுனலே வேட்டை மார்க்கம் போகவேணும். அம்பத்தாறு

---

* செஞ்சொல்லு-இனியசொல்
* அந்நீதம்-அநீதி-கொடுமை

தேசத்து ராசாக்களும் வரும்படியாய் ஒரு திருமுகம் எழுதிய னுப்பிவையும் ஐய்யா மறையோனே !

அய்யர் : அப்படியே திருமுகம் எழுதுகிறேன் அய்யா!

## 44

### ஆசிரிய விருத்தம்

திருமகளுரு கனகசிம்மாசனாபதி
செயசிங்கன் அதுகோ லனும்
திக்குவிசையங் கொண்ட மன்னவன் சிரோமணி
சிகதரச்சக நகரிலே
திரிலோக சந்தியும் நெறிமுறை தவிறாத
செங்கோல் படைத்த நிபுணன்*
திக்கடங் காதபுகழ் கீர்த்திப்பிர தாபனும்
திரிலோக புவன சந்திரன்
மறுமலர் சிறந்திலங்கும் ராசபரமேஸ்வரன்
மகிழ்பூர்வ சக்கிரவர்த்தி
மன்னன்அம் பத்தாறு தேசரா சர்க்கெழுதி
வரவிட்ட தென்ன வென்றால்
வன்மிருக சாதிவெகு கனதிரளாய்வந்து
மண்டியே நமது தேசம்
வாழ்கின்ற குடிகள்பயிர் தழைகின்ற புஞ்சையை
வந்தழித் திடுவ தாலே
கெருவிதமாகவே விரசதிக சீக்கிரம்
கெடிமன்னர் சகலபேரும்
கேட்டவுட னேஎழுந் தோட்டம்நடையாகவே
கெம்பீரமாய் மகிழ்ந்து
கிடிபிடிகந் தாறுதிட முடன்முழக் கியேகிச்
சதுரங்க பத்தியுடனே
கெணிதமொரு நாழிகை நிமிஷமது தறுகாமல்
கெதியொடு மகழ்ந்து வருவீர்
தருமநெறி யொடுநமது ஆக்கினை சக்கரம்*
தப்பியே பயமில்லாமல்

---

- நிபுணன்-வல்லவன்
- ஆக்கினை சக்கரம்-கட்டளை

தனிமிருகம் வந்துபயிர் இனத்துடன் அழிப்பதை
சம்மார மாகவேட்டை
சங்கையாய் நாமன்சென் றிங்கையோ ருபாயமாய்
தரக்காப்ப தேமுறைமை யாம்
சாடையா மிராமலே அனைவோருடன்கூடி
சகலரும் வருக வென்றே

## 45

### விருத்தம்

செயமுலவு மன்னன்பூர்வ சக்ர வர்த்தி
திருமுகத்தைத் தேசமன்னர் சினந்து பார்த்து
பயமிகவே செனித்தவர்கள் சேனை யோடு
பக்கிரவாய்க் கண்டுநடை பயணங்கொண்டு
தயவுடனே நமதுநகர்க் கடுத்த பக்கம்
தளங்களுடன் வந்தார்கள் சகல பேரும்
நயமுலவு வனவேட்டை போகவென்று
நாட்டினர் முரசுபறை சாற்றினரே.

### வசனம்

அந்நேரமே பூர்வச்சக்ரவர்த்தி மகராசன் அம்பத்தாறு தேசத்து ராசராசர்களுக்கும் தெரியும்படியாய் முரசறையவிட்டு சகலமான பரிசனங்களுடனே வேட்டைக் காரரோடும் கூடி திகிரிவனச் சார்பிலே வேட்டைக்குப்போற விதம் எப்படி யென்றால்

## 46

### தருவு

வேட்டைக்குப் புறப்பட்டாரே—கானகந்தேடி
வேட்டைக்குப் புறப்பட்டாரே

நீட்டியம்புகள்படைத்த சிகதரசக நாட்டில்
மேட்டிமை* யுடன்வந்து மிருகந் தனைவதைக்க (வேட்டை)

* மேட்டிமை-மேலான நிலை

தித்தி மல்லாரி முழங்க
சத்துரு* நெஞ்சம் கலங்க
வெத்தி மகுடந் துலங்க
வேந்தன் பூர்வச் சக்ரவர்த்தி (வேட்டை)

## 47

### விருத்தம்

வாசமுறும் புண்யபூர்வச் சக்ரவர்த்தி
மண்டலமெல் லாமரசு கொண்ட வேந்தன்
தேசமன்னர் தலையழைத்து வேட்டை யாடி
திகிரிவனச் சார்பிலங்கே சென்றபோது
விரசுடன் கணையிருந்தே மான்கள் வேங்கை
வெகுதிரளாய் வரக்கண்டு வில்நாண் ஏத்தி
வரச்சகோசர மெனவே கணைகள் பூட்டி
வருத்திட்டார் சரமாறி பொறித்திட்டாரே

## 48

### தருவு

பாங்குடன் வந்த மிருகங்கள் சிங்கம்
பதைத்து நடுநடுங்கி உயிர்களிங்கே
பட்டு விழக்கணை தொட்டாரோ பார்
மன்னர்த் தொடங்கி
மான்மறைபன்றி சிறுபுலிவேங்கை
மதங்கொண்ட யானைகளை
பொல்லாத மத்தகந்தன்னிலே அஸ்த்ரத்தால் குத்தி
அதன்வாய் கிழித்தாரே
விந்தைகிரி மலைச்சார்பிலிருந்திங்கே
வந்த மிருகமெல்லாம்
நிறையுடன் வெட்டித் துணித்துச்
சரிவரக் காவடி கட்டத் துடங்கினரே.

---

* சத்துரு-பகையாகிய விலங்குகள்

## 49

### விருத்தம்

வேந்தனுமற் றசுரர்களும் வனத்தில்வந்து
விசையமோடு புலிகரடி வேட்டையாடி
சார்ந்தமோடு விந்தைநீங்கி அரசரெல்லாம்
சதிர்பெருகும் தளங்களுடன் சகலபேரும்
மாந்தளிரைப் போன்றதிரு மேனியெல்லாம்
மலையருவி வெக்கைப்பட்டு மயங்கி நன்றாய்
சேர்ந்தபூர்வச் சக்ரவர்த்தி ராசன் வாழும்
சிகதரசக மாநகரம் சென்றிட்டாரே.

### வசனம்

இந்தப் பிர்காரம் மூன்றுநாள் வேட்டையாடி தேசாதிபதிகளுக்கெல்லாம் விடுதியமைத்து வைக்கும்படி செய்து பூர்வச்சக்ரவர்த்தி மகராசன் தன் அரண்மனைக்கு எழுந்தருளினன் என்றவாறு.

## 50

### விருத்தம்

விந்தையுடன் மன்னனந்தப் புரத்தில் செல்ல
வேந்தர்களும் சனிதொடுத்த விபரத்தாலே
யிந்தமன்னன் தனக்கேவல் புரிந்து நாமள்
யிறுகடத்தில் வில்லேந்தி யிருக்கலாமோ
சொந்தடிமை யோவிதித்த விதியோ முன்னாள்
சொந்தமுண்டோ யிவன்தனைநாம் துதிக்க என்று
அந்த மன்ன னரசுபுரி நகரி தேசம
அடங்கலும் நாம் கைவசமிட் டாளுவோமே.

### வசனம்

ஆனல் வாருங்கள் தேசாதிபதிகளே நாமளெல்லாரும் மகுடாபிஷேகந் தரிக்கப்படனென்ற றாசாக்களே அல்லாமல் வேறில்லை இவர் நம்மைப்போலே ஒரு ராசாந்தர் நல்லவர் ஆனதால் இவனுடைய நாடு நகரமெல்லாம் சருவ கொள்ளையடித்துக் கொண்டு நம்முடைய தேசங்களுக்கு எழுந்தருளுவோம் வாருங்கள் தேசாதிபதிகளே.

## 51

### விருத்தம்

இந்த வகை முடிந்தகர ரணங்கான் தன்னை
இருசெவியில் பரதரச சனுங் கேட்டு
சிந்தையெல்லாம் நொந்துருகி அய்யோ எந்தன்
தீவினையோ யென்றரசன் முன்னே சென்று
அந்தரங்க மானடந்த விபர மெல்லாம்
அணுவளவு தவறாமல் இனும் சொல்ல
முந்துவிதிப் பயனைவெல்ல ஒருவ ராலும்
முடியாதென் றேயரசன் மொழிந்திட் டானே

## 52

### தருவு

மன்னவர்கள் மனப்சம்மதி யல்லவோ மந்திரி யிந்த
வையகமெங்கும் அரசரவர் செய்வது—மந்திரி
பொன்னவர் போற்றும் சிகதரசாபுரி நாட்டையும் இந்த
பூர்வச் சக்ரவர்த்தியென்ன நம்முட
கோட்டையும்
இன்னும் இருக்கின்ற சொர்ணங்களாம் அந்தக்
கூட்டையும்
அவர்க்கேற்றபடி வெகு நேத்திகிடத்தனக்
கூட்டையும்
பாராளும் மன்னவர்க்குத் துரோகம் செய்யத்
தேட்டமாம்—நம்மிட
பங்கி விருந்திந்த தேசத்தையாள் கண்ணாட்டம்
வீராதி வீரர்கள் வேட்டைக்கு வந்திடும் கூட்டமம்
—நம்மிட
வெத்தி* சிம்மாசனம் பத்திவந்தார் மன நாட்டமாம்
(மன்னவர்)
வத்தாத பாக்கியம் சுத்தமும் வாழ்வுகில்லாதடா—கெடு
வஞ்சகம் சூதுநெஞ் சைப்பிளக் கும்பொல் லாதடா

---

* வெத்தி-வெற்றி

கொற்றவர் மேலென்ன குற்றமுண் டோசம்மா
சொல்லடா—இந்தக்
கோலமெல் லாம்கஷ்ட காலமென் றேமனக்
கல்லடா (மன்னவர்கள்)

## 53

### விருத்தம்

அன்புகுணசீவ னான்அருமை யுள்ளமந்திரியேகேளும்
சம்பமுடன் நமதுதிர வியங்க ளத்தனையும்
தவ்மிருந்து ஆண்டி தவசிக் கெல்லாம்
இன்பமுட னே யளித்து ஆனை சேனை
எல்லார்க்கும் படிகள் இரட்டியாக ஈந்து
பண்புடனே ஒருவருக்கும் குறைவில்லாமல்
பார்த்துநிறை வேற்று எனப் பகர்ந்திட்டாரே!

### வசனம்

ஆனால் வாரும்பிள்ளாய்பரதரச்சகனேநம்முடைய திரவியங்களை யெல்லாம் எடுத்து ஆனைசேனை பவுசு பண்டாரம் முதலானது களெல்லாம் தர்மம் செய்து பின்னையும் ஆளுகளுக்கு ஒவ்வொரு வருஷத்துச் சம்பளம் அதிகமாகக் கொடுத்து அன்னதானம் சொர்ணதானம் முதலான தர்மங்களைச் செய்து உன்னுடைய அரண்மனைக்குப்போம் பிள்ளாய் பரதரசகனே.

**பரதரசகன் :** அப்படியே செய்கிறேனையா சுவாமி.

## 54

### விருத்தம்

மந்திரிக்கு வார்த்தை சொல்லிச் சட்டங் காட்டி
மன்னன் பூர்வச் சக்ரவர்த்தி மகுடவேந்தன்
சந்திரஞ்சேர் பைங்கிளியாள் மனையில் சென்று
சொகுசுடைய பஞ்சணையில்தூங்கும் பெண்ணாள்
செந்திருவை யொத்தமது மாவதிப் பெண்
தேவிதன்னை எழுப்பஅவள் திடுகிட் டேங்கி
ஏந்தவகை என்றறியேன் பிராண நாதர்
ஏதுகுறை எனக்கலங்கி எழுந்திட் டாளே.

வசனம்

அகோ வாருங்களையா சுவாமி! என் பிராண நாதா! என்ன கஷ்ட காலங்களோ தெரியவில்லை இந்த அத்தசாமச் சோத்தியத்திலே வந்து அடியாளை நித்திரையில் எழுப்பவேண்டிய காரணம் என்ன வென்று, அடியாள் என்ன அபசரங்கள்* செய்தேனோ—ஆ—ஒரு அதிசயம் ஒரு சொப்பனம் கண்டேனய்யா சுவாமி.

அரசர்: ஆனால் நீ கண்ட சொப்பனம் சொல்லும் பெண்ணே.

## 55

### விருத்தம்

மானும் ஒரு கலையும் விந்தையாக
　　வனத்தில் ரண்டு குட்டியுடன் வாழும்நாளில்
தானிருந்து வனத்தைவிட்டுக் கானில் சென்று
　　தட்டழிந்து குட்டிகளும் தாயும் வேறாய்
போன இடம் தெரியாமல் அலைந்த வாறும்
　　போலுமொரு கனவுங் கண்ணில் கண்டேன்
தானவனே இதுபுதுமை ஏதோ அய்யா
　　சாற்றுமென்றே மலரடியில் சரணம் செய்தாள்.

வசனம்

அகோ! வாருங்களையா சுவாமி! ஒரு வனத்தில் மானும் கலையுமாக ரெண்டு குட்டிகளுடனே விளையாடிக் கொண்டிருந்து பின்பு அந்த வனத்தைவிட்டு மான் ஒரு காடும் கலை ஒரு காடும்வேறாய்ப் பிரிந்து குட்டியும் தாயும் ஒன்றோடொன்று சேராமல் திக்காலுக் கொன்றாய்த் தெறிபட்டு ஓடிப்போகக் கண்டனையா சுவாமி!

## 56

### தருவு

கண்ணே என் கண்மணியே—என்
　　கற்பகமேபது மாபதியே
பெண்ணே விளக்கொளியே—இளம்
　　பேதையரே பசுங் கோதையரே

---

* அபச்சாரங்கள்-தகாத தீவினைகள்.

அன்ன நடையாளே—எனக்கு
ஆதரவாகிய மாதரசே
சொன்னபடி போலே—இப்ப
தொந்த* வினைப்பயன் வந்ததடி
என்னாசைக் கண்ணாட்டி—நான்
இன்னும் ஒருமொழி சொல்லுறன்கேள்
ஏதோ மதிமயக்கம்—மனம்
எங்குப்புண் ஆறுதே மங்கையரே
சூதாய் விளைந்த வகை—ஒன்றும்
தோற்றியே என்மனம் மாற்றிலையே
மாதே இது சமயம்—இந்த
மாநக ரம்விட்டு நான்நடக்கப்
போறேன் மலையாதே—இந்தப்
புத்திரரும் நீயும் பத்திரமாய்
மூறையுடன் காப்பாற்றி—ஒரு
மோசம் வராமலே நேசமதாய்
சுகமாக வாழ்ந்திரென்று—அந்த
சுந்தரன் இந்த விதமுரைக்க
வகைமோசம் வந்ததென்று—அந்த
மாது மறுமொழி ஏது சொல்வாள்
தகைமுடி யேகளைத்து—நாளை
தண்மையுடன் விட்டுப் பூமியிலே
சுகமோட நானிருக்க இங்கே
சொந்தமுண் டோசொல்லும் எந்தவிதம்
மகனார் இருவரையும்—எங்கே
வைப்ப னென்றுமொழி செப்புகிறீர்
அடியாள் உமைப்பிரிந்து—நான்
அரைச்சிணந் தான்மனம் பொருந்துமோதான்.
கொடிதான பாதகமே எந்தன்
கும்பி கொதித்திட வெம்பியல்லோ
வழிகூடி யேநடந்து என்
மைந்தரும் நானும் வருவோமென்றாள்.
கயிலாளும் கருங்குயிலும் அழகு போன்ற
கனகபதுமா பதிப்பெண் கண்ணீர் சிந்தி

---

* தொந்தம்-முன்னைத் தொடர்பு

முயல்மிருக கணவனையும் வருந்திப் போற்றி
மக்களையும் கண்குருகி வாடி நொந்து
பயணமான கானகத்தில் நீங்கள் செல்லும்
பாதைவழிக் குத்துணையாய்ப் பய்யப்பய்ய
தடமறிய மெல்லமெல்ல நடந்துவாரோம்
சரணமுங்கள் திருவடிக்குச் சரணம் என்றாள்.

### வசனம்

ஆனால் வாரும் பெண்ணே குழந்தைகளும் நீயும் வருகிறோமென்று சொன்னபடியனாலே இனிமேல் காலதாமிசஞ் செய்யக்கூடாது இப்பவும் குழந்தைகளை ஆளுக் கொன்றாய் எடுத்துக் கொண்டு பிறப்படுவோம் வாரும் பெண்ணே பதுமாபதி.

### விருத்தம்

நீதியுடன் மைந்தர்களை ஆளுக் கொன்றாய்
நேரிழையும் மன்னவனும் தோழில் வைத்து
பாதியிர வில்வழியே மெல்ல வந்து
பாதைஒன்றும் காணாமல் பார்த்துப்பார்த்து
கோது குழலாள் பதுமா பதியை மன்னன்.
குடங்கையிலே அரவணைத்து கூடிச் சென்று
சாதுரிய மாய்க் குதிரை லாயம் தாண்டி
சங்கையுடன் நகரம்விட்டுத் தாண்டினாரே.

### வசனம்

சூரியன் குமாரனாகிய சனியேஷ்பரன் செய்த மகிமையினாலே புத்தி பேதகமாகியே ராச துரோகமாகியே நிந்தனைக்குகாமல் எல்லோரும் உள்ப்பட்ட படியினாலே அவர் வனவாசமே கெதியென்று போனார். நாமளும் அவரவர் தேசங்களுக்கு எழுந்தருளுங்கள் தேசாதிபதிகளே

## 59

### விருத்தம்

மந்திரியும் கலையிழுந்த மான்மோ லாகி
மன்னவனைப் பிரிந்துவிட்டு வனங்கள் தோறும்
அந்தரமாய்த் திரிந்தலைந்து தேடித் தேடி
அலுத்தவனும் சலித்து வந்தோர் அடவி தன்னில்

எந்த வகை யோகாணேன் அரசன் போன்று
எவ்விதமோ தடந்தெறிய வில்லை என்று
சிந்தையெல்லாம் நொந்துருகிக் கண்ணீர் வெள்ளம்
தேக்கினான் மனக்கவலை யாக்கினானே

## 60

### தருவு

ராசமன்னன் பிரிந்தவகை
மோசமென்ன—சூதோ
கானறியேன் பாவியிந்த
கானகத்தி லேதோ
தேசமெல்லாம் திரிந்தலைந்து
ராசன்மெலிந் தாரோ
திருவுளமே துணையென்று
தியங்கியத் திரிந்தாரே (ராச)

பாங்கிலுயர் கோகிலமே
பஞ்சவர்ணக் கிளியே—எங்கள்
பதியரசன் போன திசை
பார்த்துச் சொல்வீர்கள்
காங்கிசைகள் மிகுந்து வளர்
கருமாறிகளே-எங்கள்
காட்டழகன் பிரிந்த வழி
காணீர் களோ (ராச)

தென்றிலங்கும் காவிலெங்கும்—சிவந்தவரிக்குயிலே
சிரகடித்து விளையாடும் மரகதமா மயிலே
கானகத்தில் விளையாடும் மானினமே கலையே
கண்டேனென்று என் மொழிக்கு விண்டு சொல் வாயே
சோலைமலை அருகிலெங்கும் துன்பப் படுவதற்கு
சொல்லுங்கள் எனக்கு ஒரு கலவியாகவே
சிறந்தபரி பூரணன் போல்
சிறு வரையும் தோளில் வைத்து
இருவரும் முகம் வாடி ஏகினரே (ராச)

# 61

## விருத்தம்

மாமலரும் செண்பகப் பூக்காவை விட்டு
மந்திரியும் பல்விதமாய் மயங்கிவாடி
தருமநெறி தவறாத பூர்வச் சக்ரவர்த்தி
தான்கண்டு வரவேணும் என்று எண்ணி
வெறுமையொடு காசாயம் தரித்துக் கொண்டு
வேந்தனையும் கண்டெழுந்து வருவோ மென்று
ஒரு மனதாய் *வளிகூடி நெஞ்சம் புண்ணாய்
உகந்திட்டான் உண்மையுடன் நடந்திட்டானே.

## வசனம்

இந்தப்படி பரதரச்சகனும் ஆரண்யமான வனங்களையெல்லாம் திரிந்து தேடியும் காணாமல் மகா வியாகுலத்துடனே ராசனைக் கண்டு வருவதல்லாமல் சும்மா வருகிறதில்லையென்று காயாச வேசந்தரித்துக் கொண்டு தேசாந்திரமாய்ப் போய் விட்டாரென்ற வாறு

# 62

## விருத்தம்

தேசமன்னர் சினந்துறைந்து வெறுமை யாகி
சிகதரசக மாநகரில்ச் செல்வ மெல்லாம்
வாசமுடன் இருந்தபதி தனையி ழந்து
மாதுபது மாபதியும் மைந்த ரோடும்
ஆசையெல்லாம் விட்டகன்று கொடுமை போன்று
அடவியெங்கும் திரிந்தவர்கள் அலைந்து சோர்ந்து
மோசடியாய் வனத்தில்மதி மயக்கம் பூண்டு
மொய்குழலைப் பார்த்தரசன் மொழிகின் றானே.

# 63

## தருவு

தேசம் புகழ்ந் தேற்றும் பெண்ணே
சந்திரசேகரன் பெற்றெடுத்த கண்ணே

---

* வளிகூடி-வழிகூட்டி

மாசில்லாக் கண்மணியே
வரும் விதிதான் இதுவோ பெண்ணே
வஞ்சியரே மோகனமே
மாதுபட்டது மாவதியே பெண்ணே
அன்னமேமுன் செய்தவினை
அன்பாய்வந்து மூண்டுதடி பெண்ணே
கானகம் வனத்தில் பொல்லாக்
கடுந்துயர மாச்சுதடி பெண்ணே
தேனே மடமயிலே குழந்தை
தேடி யழுகுதடி பெண்ணே

## இதுவேறு தருவு

ஒற்றடிப் பாதையிலே—மெள்ளச்
சிற்றிடை நோகாமல்
தத்தை யிளங்குயிலே—என்பின்னே
பற்றடி கண்மணியே!
வெந்திடும் வேனலிலே—மைந்தரொடும்
சிந்தை தடுமாறி
பைந்தொடி ராசகன்னி—இருதயம்
நொந்து மயங்கினளே!
ஆரண்ணி யந்தனிலே—குழந்தைகள்
அழுது பரதவிக்க
பார்மன்னர் தன்னுடனே—மங்கை
பதுமாவதி சென்றனளே!

## 64

## விருத்தம்

மன்னவனும் மங்கையரும் வனாந்த ரத்தில்
மைந்தர்களும் செவியடைத்து மயங்கிச் சோர்ந்து
அன்னங்களு மில்லாமல் களைத்து வாடி
அலைமோதி மனவெறுமை அதுவுண் டாகி
என்னவிதி வசமோவென் றேங்கி ஏங்கி
இருந்திருந்து தள்ளாடி ஏகும் போது
சொன்னசப தஞ்செலுத்தச் சனிய னுந்தான்
தூய்யமறை வேதியன்போல் தோன்றி னாரே

## 65

### தருவு

காட்டிலே வேதியன் போலவே வந்து
காலச் சனியனும் தோன்றினான்
தீட்டியே நாமம் துலங்கவே இந்த
காட்டி லாரும் கலங்கவே

மன்னன் பூர்வச் சக்ரவர்த்தியே
பின்னே வந்த வழிநடம் பத்தியே
சொன்ன சபதங்கள் மூட்டியேவிட்ட
தொந்தத்திலே மனத்தியைக் காட்டிலே

மாட்டிய குண்டலங் காதிலே
தோட்டி வல்லவனோ மாயச் சூதிலே
தாட்டிய வானே கருணைக் காட்டிலே
வனந்தனி லேபிடித் தாட்டுவேன் சனப் பொழுதிலே

மனைவியும் மைந்தரைத் தோற்கவே—இந்த
மன்னனை வேறுகூ றாக்கவே
கண்விழி சிவந்து பரக்கவே—இன்னும்
கவலை யெல்லாம் மனதில் தரிக்கவே!

## 66

### விருத்தம்

கானகத்தில் வந்தமறை யோனைக் கண்டு
கனகமுடி வணங்கி அய்யன் கருதிப் போற்றி,
வினவிசூடும் அடவியிலே வந்த தேது
வேதியரே சொல்லுமென்று வேந்தன் கேட்க
பனுவிகுலம் விளங்கவந்த இரவி மைந்தா
பதிகுலைத்து மயக்கவந்த பாகமென்று
தானவனுக் குதவுகின்ற தன்மை போலும்
சனிபகவான் புனிதமொடு தான்வந் தானே.

### வசனம்

ஆனால் வாருங்களய்யா சுவாமி பிராமணச் சந்நியாசியாரே இந்த அக்கனி கொழுத்திய அடவியிலே ஒண்டியாக வந்த காரணம் என்ன? தேவரீர் எந்த ஊர்? எந்தத் தேசம்? அடியேனுக்குத் தெரியப்படச் சொல்ல வேணுமையா சுவாமி.

## 67

### விருத்தம்

*சொல்லெனவே தானுரைத்த ராச மன்னா*
*சொல்லுகிறேன் கேளுமினித் துலக்க மாக*
*வல்லபுகழ் படைத்திவ யெங்கள் தேசம்*
*வடகாசி வெகுதூரம் அய்யா சொன்னேன்*
*தில்லைவனக் காடுகடந் தப்பா லிந்த*
*தேசவழி யாத்திரைகள் செய்யப் போறேன்*
*கள்ளமில் லைநீங்கள் வருவீ ராகில்*
*காட்டுவழி நோட்டமெல்லாம் காட்டு வேனே*

### வசனம்

*ஆனால், வாரும் பிள்ளாய் ராசனே நாமளிருக்கப் படாரனென்றது வடக்கே வெகுதூரம். காசிதேசம் அவிடம் விட்டு யாத்திரை மார்க்கமாய் வருகுறோம். நீங்களும் யாத்திரைக்காரர் போலே காணுது. அல்லாமலும் ராச வடிவாக வும் தோணுது. இந்த வனவாசத்திலே வந்த காரணம் தெரியப் படச் சொல்லும் பிள்ளாய்.*

## 68

### விருத்தம்

*வேதியரே பிராமணச்சன் னாசி யாரே*
*பெய் கலந்து விளையாடும் எங்கள் தேசம்*
*தீதறியோம் பொய்யுரையோம் கவடொன் றில்லை*
*செகதரச மாநகரம் எங்கள் தேசம்*
*நீதிமொழி தவறினமோ என்ன சூதோ*
*நினைவுதலை ந் தறிவழிந்தோம் நீல வண்ணன்*
*சோதினையை எவராலும் தள்ளப் போமோ*
*துடர்ந்துவந்த தீவினையைத்*
*துடைக்கொண்ணாதே*

### வசனம்

*அகோ வாருங்களய்யா சுவாமி! பிராமணச் சந்நியாசியாரே! எங்களுடைய தேசம் செகதரசகபுரம். தர்ம சிந்தனை யபகரித்*

தோமோ? அதர்ம சிந்தனைக்குள்பட்டு நீதி மார்க்கம் தப்பின படியாலே இந்தவனவாசமே கெதியென்று முடிந்ததய்யா சுவாமி.

அகோ வாரும் பிள்ளாய் ராசமன்னா! இவ்விடம் நாங்கு திசையும் சுத்திப் பதிங்காதவழி விஷ்தீரணத்திற்கு நாடுகள் மனுசர் சஞ்சாரிக்கப்பட்ட தாவுகளும் சமீபங்களில்லை. யானோ யாத்திரை மார்க்கம் போறவன். உங்களுக்காகச் சத்தே தறுகுகின்றால் வெயில் காலம் அதிகமாய் வேனல் பிரவேசிக்கு முன்னமே மெள்ள நடந்து போவோம். வாரும் பிள்ளாய்!

## 69

### விருத்தம்

பசிக்கமுது பொசித்திடுமாம் ஊரா சய்யா
பாலர்களும் வயற்பசித்துப் பறக்கு றார்கள்
கசப்பினிப்பு என்றறியாள் எந்தன் தேவி
காஞ்சிறையைத் தின்றவளும் களைத்து வீழ்ந்தாள்
வசப்படுவ தில்லையய்யா எனக்கா யாசம்
மயக்கமது தெளிந்தவுடன் வாரேன் சாமி
சிசப்படவே கிருபைசெய் தால் உனக்குப் புண்யம்
நீதிமறை வேதியரே நில்லென் றாரே!

### வசனம்

ஆனால் வாருங்களய்யா சுவாமி. நாங்கள் அன்ன ஆகாரம் அறிந்து அஞ்சு நாளாச்சுது. குழந்தைகள் ரெண்டும் வயற்பசியெடுத்துப் பறக்கிறார்கள். கசப்பு இனிப்பு இன்ன விதம் என்று அறியார்கள். பதுமாபதியும் பசியினாலே காஞ்சிரந் தலைகளைத் தின்று களைத்து வீழ்ந்து கிடக்கிறார்கள். எனக்கு ரொம்பவும் மயக்கம் சோபமும் வன்னிக்கையாகுது. சத்தே களை தெளிந்து யெழுந்திருந்து வருகுறோம். என்னை வேண்டி சத்தே தறுகினால் உமக்குச் சுகிர்தமுண்டும் சத்தே நில்லுமய்யா: பிராமணச் சந்நியாசியாரே.

ஆனால் வாரும் பிள்ளாய் ராசமன்னா! இந்தக் குழந்தைக்கும் உன் மனையாளாகிய பதுமாவதியும் இந்தக் கானகத்திலே படுகிற அவதிகளையும் என் கண்ணாலே பார்த்து நானும் மகா வியாகுலத்துடனே உங்களை விட்டுப் போக மனம் வரவில்லை.

ஆனாலொரு காரியம். ஆபத்துக்குப் பாவமில்லை. அதுவு மல்லாமல் இராசர்களுக்கும் பிராமணாளுக்கும் பேதமில்லை குழந்தைகள் இரண்டையும் என் கையிலே கொடுத்து நீங்கள் என் பிறகே மெள்ள மெள்ள நடந்து வாரும் பிள்ளாய்

## 70

### விருத்தம்

இப்படியென் றனக்குமறையோன் சொன்ன சொல்லை
ஏந்திழையும் கேட்டுமனந் திடிந்து புண்ணாய்
கற்பகம்போல் உதவுகரந் தனைப்ப டைத்த
கண்மணிக் குழந்தைகளைக் காட்டுக் குள்ளே
எப்படியோ முகமறியாப் பாப்பான் கையில்
ஈந்துவிட்டு நாமிருவர் எங்கே செல்வோம்
செப்புமென்றே மாதுபது மாப திப்பெண்
தேக்கிலையில் நீரதுபோல் தியங்கினாலே.

### வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி. இந்த ஆருமறியாத காட்டிலே முகமறியாத பிராமணன் கையிலே குழந்தைகளைக் குடுக்கிறது நியாயமாய்க் காணவில்லை. அய்யா சுவாமி.

## 71

### தருவு

மங்கைய ரிப்படிச் சொன்னதைக் காதிலே வாங்கியே
மாமறை தேதியன் கோபித்து அங்கனே தேங்கியே
சங்கைக் குலத்திங்கே பங்கமனத்தையும் பார்த்துமே
உங்கள் தாபந்தமாகிய சோபந் தனைச்சற்றே-தீர்த்துமே
உங்களுக் காக நினைத்ததெல் லாங்கதையாச்சே — என்னை
உற்ற துணையென்று நம்புவதும் வெறும் பேச்சே !
தர்மங்கள் செய்திட அதர்மம் விளைந்தது சதியே — உங்கள்
குழந்தைகள் ரண்டையும் என்தலை மேல்கொள்ள விதியே
உங்கள் பயணத்துக் கென்பயணந்தறுகாது—இங்கே
ஒற்றடிப் பாதை வழிதட முந்தெரியாது.

தங்குவ தில்லை வழிப்பயணம் வெகு தூரம்—
தள்ளி நடந்துசென் றான்மறை வேதியன் றானே !

## 72

### விருத்தம்

தண்மை நெறி தவறாத பூர்வச்சக்ர வர்த்தி
சதுர்மறையோன் தனைப்பணிந்து சரணம்போற்றி
பெண்மதிகொண் டுரைத்த சொல்லைத் தானே நம்பி
பேதகமாய் உன்மனது பேதிக்க லாமோ
தண்மையுடன் உங்கள்மனத் தன்னை போலே
சந்ததிகள் ரெண்டையும்நாம் தாறோ மய்யா
நன்மையுடன் வழிகூடி நடவு மென்றே
ராசனுப சாரமதாய் நவின்றிட் டானே.

### வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி அடியேனுடைய மனையாள் பதுமாபதி சொல்லை வஞ்சகமாக எண்ணி இப்படிக் கெல்லாம் கோபம் செய்வது தர்மம் அல்ல. தேவரீர் மனதின் படியே குழந்தைகள் ரெண்டையும் தாரோம். வாங்கிக்கொண்டு முன்னாலேயே நடங்களய்யா சுவாமி.

## 73

### தருவு

அந்தணன் பிள்ளையைச் சந்தோச மாய்க்கையில்—வாங்கினான்
—,எங்கள்
அய்யன் மனதுகலங்கி கண்ணீர்வடிந்தே—ஏங்கினான்—முந்த
வேவழி காட்டியே பாப்பானும் நடந்திட்டான்—அதை
மோசமென் றெண்ணாமல் ராசனும் பின்னாலே துடந்திட்டான்
காருண்ய மான வனங்களிலே தள்ளித் தள்ளியே—அந்தக்
காட்டு வழியில் கூடியே சென்றிட்டான் துள்ளியே
மன்னனும் அன்னை களையில் மெலிந்துள்ளம் வாடினான்
—இந்த
பாமறையோ னிடம் மைந்தனையும் தந்தோம் வீணிலே
முன்னவர் செய்த பழவினை இப்படிச் சூழ்ந்துதோ—இங்கே
மூண்ட சனியனால் இவ்விடம் வந்துதா னயர்ந்தோம்

பிள்ளையைக் கொண்டு வழிநடந் தேகும்பி ராமணா-இந்தப்
பேதகம் செய்கின்ற சூதறியேனே பிராமணா!
உள்ளத்தில் அன்பு எள்ளவில்லையே பிராமணா- இந்த
ஓட்டமுண் டோநடுக் காட்டினி லேசொல்லு பிராமணா-உந்தன்
பாதந் துணைஎன்று நம்பிவந் தேனய்யா பிராமணா-இந்தப்
பாதகம் செய்வது நீதமோ சொல்லும் பிரமணா!

## 74

### விருத்தம்

மன்னவனும் மனைவியும்கண் ணருகிச் சோர
மயங்கின்று பரதவித்து மறையோன் போன
பின்னடியைத் துடந்துவெகு துருசாய் நாடி
பிலங்குறைந்து மனந்தளர்ந்து பெருமூச் சிட்டு
என்னவிதி வசமோவென் றேங்கி ஏங்கி
இருந்துருகி மெள்ளமெள்ள இரண்டு காலும்
பின்னிநடை தள்ளாடி வழியைக் கூடி
பிராமணர்க்கு அபயமென்று பின்சென் றாரே!

### வசனம்

இந்த விதமாய்ப் பூர்வச் சக்ரவர்த்தி மகாராசனும் அவன் தேவி பதுமாவதியும் வேனல் பொருந்திய கானகத்திலே பிராமணன் கையிலே குழந்தைகளைக் கொடுத்துவிட்டு நடக்க மாட்டாமல் பரதவிக்கிறதைக் கண்டு பிராமணனாகிய சனியேஷ்வரபகவான் சொல்லுகுற விதம் எப்படியென்றால்...

## 75

### தருவு

ஏன்காணும் மன்னவனே — உனக்கு
இந்தப் பைத்தியம் வந்ததென்ன
வாங்காணும் நான்போறேன் — அந்த
மங்கையை மெள்ளக் குடங்கையிலே
பாங்கா யணைத்து என்னை—
பார்த்துக் கொண்டேமனம் தேற்றிக் கொண்டே
நான்போற பாதையிலே — வர
நாட்டமொடுமனம் தேட்டமதாய்

தேம்பாலே யேநடந்து — இந்த
செந்தனல் சூழும் வனங்கடந்து
தீம்பான பாதைவழி — வந்து
சேர்ந்து நடந்திடப் பாந்தமுண்டோ
போம்போம் பொழுதெனக்கு — தர்ம
புண்ணிய ணே அன்னந் தண்ணியுண்டோ
ஆனாலும் சொல்லுகிறேன் — என்னை
அந்திரம் புகவே தந்திரமாய்
தானே வசப்படுத்தி — என்னைச்
சர்ப்பினையாய் மன மெப்பினையாய்
உண்ணாக் குழந்தைகளை — அமு
தூட்டி எடுத்து உபாயமதாய்
தானே சுமப்பதற்க்குதி — வெகு
சங்கட்ட மென்றிங்கே தள்ளிவிட்டீர்
தோணாத என்மதியால் — நான்
தூக்கிச் சுமக்கச் துணிந்தேன் என்றான்
நானோக்கும் பயணம் — அரை
நாழிகை தங்கவும் ஞாய முண்டோ
தேனாறுங் காவைவிட்டு — நான்
சென்ற தடமன்றி நின்று நின்று
மானாளுடன் கூடி — பின்னே
வரவென்று கூறியே மாமறையோன்
காணாம லேமறைந்து — நடுக்
காட்டுக்குள் ளேஓடிப் பூட்டகமாய்
மைந்தர் இருவரையும் — கீழே
வைத்துச் சனியனும் மறைந்துகொண்டான்

## 76

### விருத்தம்

மன்னவனும் தேவியுமாய் வரவும் கண்டு
மைந்தரையும் அன்னடையில் மறுகவிட்டு
என்னசெய்வோம் விதிவசமாய் முடிந்த கோலம்
இப்படியோ ஈஷ்பரனார்கர்ப் பனையோ என்று
வண்ணமுக வேர்வைபட்டுத் தடக்கை நோக்கி
வரும்வழியில் இருகுழந்தை மரத்தின் கீழே

கன்னிவெயி லாலுலர்ந்து பசியால் வெம்பி
கதறியழும் குழந்தைகளை கணில்கண் டாரே.

### வசனம்

இந்தப்படி பதுமாபதியானவள் குழந்தைகளைக் கண்ணிலே கண்டு திடீரென்று ஆவலாய் ஓடிப்போய்க் குழந்தைகளை யெடுத்து மடியின் பேரிலே வைத்துக்கொண்டு புலம்புகிற விதம் எப்படிஎன்றால்...

## 77

### தருவு

பெற்ற வயறெனக்குப் பறக்குதய்யோ - தீயாய்ப்
பிடிக்குதய்யோ — ஆவி - துடிக்குதய்யோ
சற்று நேரம் என்னைவிட்டுத் பிரிந்திடாத — மக்கள்
தயங்குறாரோ - சோம்பி - மயங்குறாரோ
ஆவி சோர்ந்து மெய்யயர்ந்து தரையின் மீதில் - வீழ்ந்து
அறுத்தவாழை யிளங்குறுத்துப் போலே
பாவி இந்தப் பாப்பான் பாதையிலே போட்டு - எங்கே
பறந்திட்டானோ-ஓடி-மறைந்திட்டானோ ?
ஓவியம்போல் பெற்ற தம்பிமாறே பார்த்து
உருகுவேனோ — மேனி - கருகுவேனோ
தீயப்பரமாய் வந்த சனிபகவான் - செய்த
தீங்குதானோ-விதியென்-பாங்குதானோ ?
சிதறிவாடி யெனது கண்ணீரருவிப்பாலன்
தெளித்திட்டானோ - கண்ணை - விளித்திட்டானோ ?
கதறுகிற ஓசைசெவியில் கேழ்க்கிலையோ-என்ன
கர்மந்தானோ - சிவனே - வர்மந்தானோ ?
பதறுதய்யோ ஆவி சிதறுதய்யோ - மனம்
சிவன் படைத்த பிரமதேவரே.

### வசனம்

இந்தப்படி ராசனும் தேவியுமாக அந்த வனவாசத்துலே மகாபரிதாபத்துடனே கூடி பின்னும் பதுமாவதியானவள் சொல்லுகிற விதம் எப்படி என்றால்...

# 78

## தருவு

ஆதிசிவன் செய்ததொரு
அய்யய்யோஎன் பிராண நாதா
நீதியுடன் பெற்றமைந்தர்
நிலைகுலைந்து பதறியிந்த
நாதியில்லாக் காட்டுக்குள்ளே
நாமன் கடின விதிவசமோ
சோதினைப் படியோஎது
சொல்லுவீர்கள் சுவாமிநாதா !

சொல்லுகிறேன் கேளாய் பெண்ணே
சொந்தமாக அந்தவேளை
அல்லலின் துன்பமெல்லாம்
அவன் விதித்த கோலம்தானோ
மெல்லியரே நானுமுந்தன்
வீட்டிலுந்தான் பாலர்களை
வல்லியரே மங்கையரே
வார்த்தைசொல்லக் கேளும் பெண்ணே !

என்கணவா சுவாமிநாதா
ஈன்றெடுத்த மைந்தர் உனை
வங்கணமாய் நடுக்காட்டில்
வழித்துணையாய் வந்தபாப்பான்
கங்கணங் கட்டியே வாங்கி
கபடமாகத் தோளில்தாங்கி
அங்கமாகக் கொண்டு சென்று
பாதைதனில் போட்டானையோ

திங்கள்வத னம்சிறந்த
செல்விபது மாவதியே
செங்கமலத் தோன்விதித்த
தீவினையைத் தள்ளலாமோ
புள்ளையாலே நொந்துருகி
பெற்றவயர் பதறுதய்யோ
கள்ளினாற்றுறச் செய்த
கற்பனைக்கி யென்னசெய்வேன்

துளருகுதே குலையீரல்
சுழலுதே குடல்பதறி
அள்ளுதேயிவ் வேனல்கண்டு
அலருதே குழந்தைரெண்டும்
பேதையே மனம்விடாதே
பிரமதேவன் கோலமிதே
மாதேநின்று மலையாதே
மைந்தர் பாசம்துலையாதே
ஏதிப்படிச் செய்த தெய்வம்
இன்றுமென்ன செய்திடாதா
போதையுண்ட பித்தன்போலே
புலம்பிமன்னன் தரையில் வீழ்ந்தான்.

## 79

### விருத்தம்

கானகத்தில் ஒரு செடியில் நிழலுக் குள்ளே
கதிரவன்போல் மதிமயங்கிக் களைத்து வீழ்ந்தார்
மானனையாள் சந்திரசே கரன்ப யின்ற
மங்கைபது மாபதிப்பெண் மயங்கி வாடி
பானுகுலந் தனில்உதித்த இருவர்களும்
பாலர்களும் அழுதழுது பரிதவித்து
தேனாறுங் கானலிலே அருதி போல
தியங்கினான் கவலைகொண்டு மயங்கி னர்னே.

### வசனம்

இந்தப்படி பதுமாவதியானவள் மகா வியாகுலத்துடனே மதிமயங்கி வீழ்ந்து கிடக்குற நாயகனுடைய திருமுடியைத் தாங்கி மடியின் பேரிலே வைத்துக்கொண்டு சுரபி சுரபி என்குற பாலர்களை முந்தாணியை விரித்து அதின் பேரிலே போட்டுத் தாரைதாரையாய்க் கண்ணீர் விட்டுக் கொண்டு பலபல வசனங் களாகப் புலம்பிக் கொண்டு இருந்தாள் என்றவாறு.

## 80

### விருத்தம்

நத்தவஞ்சேர் வணிகர்குலத் தனில்உதித்த
நவகோடி நிதிபெருகி நறமுற்றோங்கும்

வர்த்தகனாம் செட்டிமன்னன் ஒருவன் அங்கே
வளிதடத்தல் அன்னசத்திரம் வழங்க வேண்டி
கோத்தர்களும் சித்தர்களும் விட்டுக்கூவி
கோதையரும் புலம்புகிற குரலைக் கேட்டு
சத்தமென்ன என்று மெள்ளத் திகைத்துப் பார்த்து
தலைவனாம் தன்னிடத்தே சாற்று வாரே!

**வசனம்**

அகோ வாரும் பிள்ளாய் ஆனந்தா ! இந்த ஆரண்யமான கானகத்திலே கம்மின குரல்களுடனே குழந்தைகள் அழுகுற சத்தம்போலே கேட்கப்படுகிறதென்ன ? ஆனாலதைப் பரிசோதனைபார்த்து வாரும் பிள்ளாய் !

## 81

**விருத்தம்**

சேருவை அனந்தனும் - கூலியாளும்
சித்திரமாய்ப் போயிந்தவனம் செல்லும்போது
பார்வதியும் பரம சிவன்போலே—ரெண்டு
பாலருடன் களைத்துமெத்தப் பசிதள்ளாமல்
தார்புனையும் கதலியிளந் - தண்டுபோலே
தட்டழிந்து கட்டழுகி தரையில்வீழ்ந்து
ஆருமற்ற அகதிகள்போல்—கிடக்கக்கண்டு
ஆனந்தனும் மெய்பதறி ஆடினானே - பின்னும்
அய்யய்யோ இந்தவனத்து வீதன்னில்
அநியாய மிப்படியுமாவதுண்டோ
பெயரளவில் கண்வளரும் - ஆதிமூலம்
பாரளந்த நீலவர்ண பாவம் பாவம்
வையகத்தை ஆளுகின்ற - ராசன்தானோ
மனைவியொடும் வனத்தில்வந்த வகைஎவ்வாறோ ?
தெய்வஞ்சிய விப்படியோ - என்றானந்தன்
திகைத்துவெகு யோசனைகள் செய்கின்றானே.

**வசனம்**

அகோ வாருங்களய்யா சுவாமி இந்த ஆரண்யமான கானகத்திலே குழந்தைகளுடனே யெழுந்தருளிவந்த காரணம் என்ன?

யெந்த ஊர்? யெங்க தேசம்? அடியேனுக்குத் தெரியப்பட்டத் திருவுளம்பற்ற வேணுமையா சுவாமி!

## 82

### விருத்தம்

செப்புகிறேன் உள்ளபடி தம்பிமாரே
 செகதரசக புரம்நா டெங்கள்தேசம்
நட்புடனே கணக்கெழுதிச் சிலகாலம்
 நாங்களுமே கடத்தியந்த நகரில் வாழ்ந்தோம்
இப்பவும் அவ்வூரிலொரு கலகம்வந்து
 இக்கோல மாக்கிவிட்டு தென்னசெய்வோம்
சர்ப்பினையாய் முடிந்ததுவே என்ன செய்வோம்
 தலைவிதியை எவராலும் தடுக்கொண்ணாதே!

### வசனம்

அகோ வாருங்கள் தம்பிமார்களே! இந்த ஆரண்யமான கானகத்திலே நீங்கள் வந்த காரணம் என்னவென்று கேட்டீர்களே! நீங்கள் யெந்தத் தேசம் சொல்லுங்கள் பிள்ளாய்.

## 83

### தருவு

சொல்லுகிறேன் கேளுமய்யா ராச மன்னா—நாங்கள்
சோங்குபெறும் துறைநாடு ராசமன்னா
செல்லவள நாடுகண்டாய் யெங்கள்தேசம்—ஒரு
செட்டிமன்னன் இஷ்டமதாய் இங்கே வாசம்

அந்தமன்னன் றேவுதுரைக கதிகாரி — அவர்க்கு
 ஆறுகோடி கப்பலுண்டு பெருவாரி
யிந்தவனந் தன்னிவந்த தர்மபுத்திரன் — வெகு
 யிஷ்டமுடன் கட்டுகிறான் அன்னசத்திரம்
அந்த நாரயணஞ் செட்டி சத்திரத்தில் — கூலி
 ஆள்வைத்து வேலைவாங்கும் அனந்தன் என் பேர்
எந்தனுட மன்னவனும் சிந்தை தேறியே — நன்றாய்
 ஏதுமொழி கூறலுற்றான் நீதியுடனே

தம்பி அனந்தஉன்னை நம்பினேனே — இப்ப
தண்ணிகொடுத் தாதரித்தால் புண்ணிய மாமே
ஒண்ட நிழல் கண்டறியாக் கானலிலே — இங்கே
ஒத்தையாய்த் தறித்திருக்க மெத்தவருத்தம்
கண்டொரு நகரைநோக்கி நாங்கள் நடக்க - வழி
காட்டினால் சுகிர்தமடா கருணையானந்தா

வசனம்

அகோ வாரும் தம்பி ஆனந்தா! நாங்கள் அன்னந் தண்ணீர் கண்டு அஞ்சு நாளாச்சுது. குழந்தைகளும் பசியினாலே தள்ளாத சோபத்தை அடைந்து இருக்குதல்லவா? கொஞ்சம் சலம் கொண்டு வாரும் பிள்ளாய் ஆனந்தா.

## 84

விருத்தம்

அப்படியே தண்ணீரும் கொண்டு வந்தான்
அன்புடைய குழந்தைகளுக்கு அமுது ண்ட்டு
கற்பகஞ்சேர் முகமிலங்க களைகள் தேத்தி
•காரிளையும் மன்னவனும் கவலை யாத்தி
நட்புடைய தம்பிஅனந் தனே கேளும்
நமக்குமொரு தாவளத்தை நவிலவேணும்
யெப்படியோ நீலவர்ணன் கிருபை யென்று
யிருந்திட்டாள் அன்புபுண்ணாய் யுடைந்திட்டாரே பின்னும்

மன்னர்பணியும் மன்னர்பூர்வ சக்கிரவர்த்தி
மண்டலீகர் கண்டனந்த வனத்தில் நின்று
சொன்னதெல்லாம் இருசெவியில் கேட்டனந்தன்
சூழ்ந்தவிதிப் பயனேவர துலைத்தாரையா
என்னவே மனந்தேத்தி அனந்தனப்போ
யெங்களிருப் பிடத்துக்கேகும் யெந்தன்கோவே
உன்னைவென்றா லுத்தமர்க்கு ஆளோடாளாய்
உமக்குமொரு பங்களிப்போம் உறுதியென்றான்.

வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி! தேவரீருடைய கிருபை கடாச்சத்துனாலே தெரிந்த மாத்திரம் *உள்ளியஞ் செய்து

---

• காரிளை-காரிகை
• உள்ளியம்-ஊழியம்

கொள்கிறேன். அடியேனுடைய தாவளத்துக்கு யெழுந் தருளுங்களய்யா சுவாமி!

அப்படியே போவோம் ஆனந்தா

## 85

### விருத்தம்

சந்திரசே கரன்றன்பயின்ற பசும்பூங் கிள்ளை
தையல்பது மாபதியாள் தயங்கிவாடி
மைந்தர்களைக் குடங்கையிலே தாங்கித் தாங்கி
மன்னவனும் தேவியும்தோள் மாத்திக் கொண்டு
சுந்தரம்சேர் மேனியெல்லாம் வேர்வை சிந்தி
சுடுவேனில அடவியெல்லாம் துலைத்துத் தள்ளி
அந்தமுள்ள செட்டிமன்னன் சத்தி ரத்தில்
அருகாக ஒருவாவி அதுகண் டாரே

## 86

### தருவு

நந்தவனக் காடுங்கண்டார் - அதில்
நல்ல தண்ணீர்த் தீவுங்கண்டார்
அந்தமுள்ள பொய்கைகண்டார் - அவர்
ஆவலாய் நீரள்ளி யுண்டார்
சிந்தையும் தெளிந்துன்ன றாய் - இருபேரும்
தேவியும் ராசனுமொன்றாய்
மைந்தரை இறக்கிவிட்டு — அவர்
வாஞ்சையுடன் முத்தமிட்டு
விந்தையுடல் குளுப்பாட்டி
மெள்ளவிளை யாட்டுங் காட்டி
சுந்திரனைக் களைதேத்தி
சோபநடை தாபமாற்றி
பைந்தொடி அந்தச்சீமாட்டி — அப்போ
பாலகருக் குழதூட்டி
அந்தநிழல் சோலையிலே
ஆனந்த னுதவியாலே

*கூலிக்காரர் கட்டிவைத்த*
*கொட்டகைக்குள் இஷ்டமதாய்*
*பாலித்ததர்ப் போதினையோ*
*பரமசிவன் சோதினையோ*
*தேவிப்போன வேதியன்தான்*
*செய்திடுமோ நீதந்தானே.*
*அரிகரியி தென்னகோலம்*
*அச்சுதனே ஆதிமூலம்*
*நெறிமுறைமை தவறினேனோ*
*நேறுவல னீறுதானோ*
*கரியமுகில் மேனியனே*
*கவலையில் மயங்கினானே*
*அறிவுடனே கானகத்தில்*
*ஆனந்தன்வாழ் சீராமத்தில்*
*தறுகினின்று காகமேறும்*
*தம்பிரானே நம்பினேனே.*

## 87

### விருத்தம்

*அலைகதிரோன் இரவிமைந்தன் சனியன் தேவன்*
*அந்தணன்போல் வந்தவரை அடவி தன்னில்*
*மலையுதிரப் பண்ணிவைத்த கோலம் எல்லாம்*
*மாத்தியானந்தனவர் மனதைத் தேற்றி*
*நிலையுதவி ஆதரித்துக் கூலி யாளும்*
*நித்தநித்தங் கணக்கெழுதி நேசங் காட்டி*
*தலைவனுக்குச் சம்பளத்தை அவர்கொ டுக்க*
*தந்திட வாங் கிக்காலம் தள்ளி னாரே.*

### வசனம்

*இந்த விதமாகப் பூர்வச்சக்ரவர்த்தி மகாராசன் சனியேஷ்பரன் துயர்ச்சியினாலே நாடுநகரம் ராச்சியம் முதலாகிய சகல சம்பத்துக்களையும் இழந்து மனைவி மக்களோடு கூடி வனவாசமே கதியென்று நவகோடி நாராயணன் செட்டி சத்திரத்திலே ஆனந்தன் வசமாயிருந்து கூலியாளுக்குக் கணக்கெழுதிக் காலந் தள்ளிக்கொண்டு யிருந்தான் என்றவாறு.*

அந்நேரமே பெருந் துறை நாட்டுக் கதிபதியாகிய நவகோடி நாராயணன் செட்டி சத்திரம் வேலை பார்க்க வருகுற விதம் எப்படி என்றால்...

## 88

### தருவு

மாரன் பெருகுதுரை வாழ் குபேரன்
*வலுத்தகன் கனயாபாரி தீரன்
நவகோடி நாராயணஞ் செட்டி வந்தாரே
சத்திரம் பார்க்கவென்றே சிங்காரம தாய்
தண்டிகை மீ தேறிச்சித் தன்
நவகோடி நாராயணஞ் செட்டிவந்தாரே

அந்தமான் றேவுதுரைதன் கப்பலாயிரம்தான் நடத்தும்
சேந்த நவகோடி நாராயணஞ் செட்டியார் வந்து
தோன்றினார்.

## 89

### விருத்தம்

சீலமுறு வணிகர்குலந் தனில்உ தித்த
செட்டிமன்னன் சத்திரத்தைச் சிறப்பைக் கண்டு
மேலவரும் சந்தோசம பொங்கிப் பொங்கி
வேலை செயும் சனங்கள்தனை மிகக்கொண் டாடி
வாலைமதன் போலே ஒரு மனித னங்கே
வந்துநின்ற காரணத்தை வகைசொல் லென்றே
காலவும் நீ யெந்தனுக்கு அனந்தா யிப்போ
சங்கையுடன் விபரந்தான் சொல்லு வாயே.

### வசனம்

அகோ வாரும் பிள்ளாய் ஆனந்தா! ஆரோ ஒரு மனிதன் வாலிபமான ரூபத்துடனே வந்திருக்கிறானல்லவா? அவன் எந்த ஊர்? யெந்தத் தேசம்? இன்னாரென்று வகை விபரமாகச் சொல்லும் பிள்ளாய் ஆனந்தா.

---

* வர்த்தகன்,—பெரிய வியாபாரி

## 90

### விருத்தம்

மண்டலத்தில் புகழ்சிறந்த தர்ம வானே
வணிகர்குலந் தனில் உதித்த மன்னா கேளும்
செண்டுமலர் மல்லிகைப்பூங் காவி லங்கு
செகதரச மாநகரில் செல்வ மாக
கண்ட கணக் கெழுதியங்கே வாழும் நாளில்
கலகமுறை யாலுரைக்கக் கடந்து சென்று
பண்டுவிதிப் பயனாலே வந்தார் பாவம்
பார்த்துமொரு சீத்தமுடன் பங்கிட் டோமே.

### வசனம்

அகோ வாருமய்யா வணிகர் குலாதிபதியாகிய செட்டி மன்னா! யிவரைக் கூலியாளுக்குக் கணக்கெழுதும் படியாய் நேமித்து எங்கள் கூலிப் பங்கிலே இவருக்கும் ஒரு பங்கு குடுத்து வருகிறோமய்யா செட்டியாரே.

ஆனால் வாரும் பிள்ளாய் ஆனந்தா! உங்கள் கூலிப் பங்கிலே கொடுக்கிறது நியாயமல்ல. அவருக்கு நாம் வேறே சம்பளம் கொடுத்து வருகிறேன். உங்கள் மனோதரப் படிக்கு நடத்தும் பிள்ளாய் ஆனந்தா.

## 91

### விருத்தம்

விந்தையுள்ள சத்திரத்தில் வந்து நித்தம்
வேலை செய்யும் பெண்களந்த வீறாக மாதர்
அந்தமுள்ள செட்டி மன்னன் வந்தா னென்று
அன்புடனே கும்புகும்பாய் வந்து கூடி
வந்துநின்று பார்த்தனர்வே டிக்கை யாக
மானபர னான் புகழ வணிகன் தன்னை
சுந்தரஞ்சேர் மாதுபதி மாப திப் பெண்
தோகைசுவ றெட்டி விழி துதிக்கின் றாளே
பின்னும்
பேதைபது மாபதியாள் தன்னைக் கண்டு
பித்தனந்தச் செட்டிமகன் பிரமை கொண்டு

காதலுறு மதன்சரம் பட்டு நொந்து
காமவெறி யாலவனும் களைத்து வீழ்ந்து
தாதலரும் வனத்திலெதிர் கண்ட பின்னால்
சரஷ்பதியோ மலர்மகளோ சுகியோ வென்று
பாதகனும் மாதைஎதிர் கண்ட போதே
பஞ்சபூத முங்கலங்கிப் பதறி னாளே.

**வசனம்**

இந்தப்படி நவகோடி நாராயணஞ் செட்டியாரானவன் பதுமாபதியம்மனுடைய ரூப லாவர்ணியங்களை, பிரகாசங்களையும் கண்ணினாலே கண்டு மோகத்தோடுங் கூடி பொலம்புகிற விதம் எப்படி என்றால்

## 92

**தருவு**

இவளாறோ பச்சைப் பசுங்கிளியாள்-மாது
இனியென்னால் முடியாதே துவளுமிடையிவளுக்கு
இருக்குதென்னமோ தோண்டிப் புதைத்து
வைத்த சொர்ணமே அன்னமே
சூடிய பொழுதே இவளாசை கூடிய பொழுதே
மய்ய லாகும்—இவளாறோ

இந்தச் சீமாட்டிபோல எங்கும் அகப்படாதே
ஏதோ நான் பாக்கியமீதே யேகமுற்ற
ரதியிவள் மேலே மையலாகி
இப்படியே மெலிவேனினி நானும்

கும்பஷ்த்த னனியம் ரெண்டும்
செம்பொன் கிரியேயல்லால்
கோடிமன் மதர் பெண்ணே ரதியே
கோமள குயிலேயிவள்
பூமகத் தருகியே வருவாயென்று
இவளருகிலே சென்று
வார்த்தை கொடுப்பேன்
இன்பக் கடலில் மூழ்கி
எப்பத் துயர் விடுவேன்—இது—

ஆதிரமே என்ன கோலம்—இது—காலம்
பாத்திருக்க மாதுபெண்ணே—வெகு புண்யம்
இத்தனை சோதிப்பிரகாசம் உன்மேல்—வெகு நேசம்

தச்சனால் கடைந்தெடுத்து
தாமரைக் கமலமடி
பெண்ணே—எந்தன் கண்ணே.

ஆதியில் விஸ்வகர்மன்
அமைத்த பசுங்கிளியே
மயிலே அன்னக் குயிலே.

இத்தனை சோதிமின்னல்
என்முன்னே நின்றாயடி
பெண்ணே—என் கண்ணே

பாதரவு பார்த்து இப்போ
ஆதரவு சொல்லொண்ணாதோ
மானே—எந்தன் தேனே

இத்தனைதூ ரத்திருந்தென்
இரத்தினம்போல் ஒற்றமாதே
காணேன்—கண்ணில் காணேன்

அக்கினிப் பிரகாசமோ
அகிலிசீதா தேவியோ
அன்பை அறியவில்லை
பெண்ணே—என் கண்ணே

ரதிமோக நாயகியே
ராசராச கன்னியென்
ரதியோ பெண் மதியோ

கொக்கோக சாஸ்திர
குறியென்று எண்ணிநான்
கும்பிட்டேன் நானுன்னை
அன்புசொல் வாயே.

## 93

### விருத்தம்

கற்பிலுயர்ந்த அருந்ததிக்குச் சமதையான
கனகபது மாவதியைக் கண்டு வாடி

சற்பினைகள் செய்யவென்று செட்டி யந்த
சண்டாளன் *வீரகள்ளந் தனிலே மூழ்கி
எப்படியும் இவள்கருத்தை யுறுக்க வென்றால்
இதுதருணம் அல்லவென்று ஏங்கி ஏங்கி
கற்பவிடந் தனையருந்தும் மச்சம் போலே
தட்டழிந்து தன்பதியில் தான்சென் றானே
— பின்னும்

மன்னவரும் தேவியரும் சிலநாள் அங்கே
வாஞ்சையுடன் கணக்கெழுதி வாழும் நாளில்
சொன்னபணி வேலைசெயும் கூலி மாதர்
சுவந்திரத்தின் கூலிதனைத் துயந்து வாங்க
அன்னமெனும் பதுமவல்லி மாதே நாங்கள்
அனைவர்களும் போவதினால் அம்மா தாயே
மன்னரசே உன்கூலித் தவசம் வாங்க
வண்மையுடன் வரவேண்டும் என்று சொன்னார்

**வசனம்**

அகோ வாருமம்மா ! பதுமாபதியே ! நாங்கள் செட்டியார் வீட்டுக்குக் கூலி வாங்கப் போறோம். நீங்களும் கூட வாருமம்மா தாயே !

## 94

**தருவு**

அம்மாமாரே ஆச்சிமாரே—அடி
அரைநாழிகை இருங்களடி பாங்கிமாரே
பிள்ளைக்கமு தூட்டிவிட்டுப்
போட்டுநான் நான்
பிரித்துவிட்டு நீங்கள்போனால்
ஒருத்தி என்செய்வேன்
தன்மையுடன் மெள்ளமெள்ளத்
தங்கைமாரே—பய்ய
தருகில் நின்று போங்களடி
நங்கைமாரே
சீக்கிரம்வா வாவாநாங்கள்
மெள்ளப் பேறோம்—பொழுது

* விரகம்

அந்திபடு முன்னேயிங்கே
வந்து சேர்வோம்

கம்மியே மழைக்குணங்கள்
காணுதே குறி—நாமள்
காலகோல மாய்நடந்து
போவதே சரி
சீக்கிரம்வா என்றுவழி
நோக்கி நடந்தாள்—அங்கே
சென்றுசென்று மெல்லவழி
அன்று கடந்தார்.

பாக்கியவான் பெற்றபிள்ளைக்
கன்னங் கொடுத்து
பசியாற்றிப் பர்த்தாவிடம்
விட்டு வாறேன்.

பொட்டிதலை மேல்வைத்து
எட்டி நடந்தாள்
பூவையர் மலர்சிறந்து
காவு நடந்தாள்

செட்டிமன்னன் ஊரைநோக்கித்
தேடிஓடினாள்—முன்
சென்றமாதர் எதிர்வரக்
கண்டு வாடினாள்

அன்னமேயின் னேரமட்டும்
என்ன சோலியோ—வீட்டில்
அளந்துபோட்டு வைத்திருந்து
உங்கள் கூலியை
நன்னயமாய் வாங்கிவந்து
சேறும் தாயே—இனு
நாங்கள்என்ன செய்வோமம்மா
கூறும் தாயே.

அன்னையேயென் தாயேபொழு
தந்தியாச்சே
ஆதரவா யிருந்ததுணை
முந்திப் போச்சே

பொன்னடி சிவந்துநோகத்
தாங்கித் தாங்கியே—அங்கே
போட்டுவைத்த கூலியை நீ
கேட்டு வாங்கியே

மின்ஒன்டியில் வந்திரம்மா
பாதைதூரம்—நாங்கள்
மெல்லமெல்ல இருந்திருந்து
நாங்கள் போறோம்

என்றுசொல்லிப் பின்வாங்கினார்
கூலிமாதர்—அந்த
ஏந்திழையாள் ஒற்றையாகப்
போகும்போது

கம்மியே இருளடைந்து
மேகஞ் சொரிந்து—மழைக்
காத்துடனே வெடுவெடுத்துத்
தூத்தலுங் கண்டு

விம்மலும் பொருமலுமாய்க்
கண்ணீர் சொரிந்து
வெறுத்துநின்ற மானைப்போல
பினங்கள் பிரிந்து

தர்மபத்தி னிநடந்தான்
வேகத்துடனே—அந்தச்
சதிகாரச் செட்டிகண்டான்
மோகத்துடனே

மென்மேலுஞ் சந்தோஷமா
யெந்தள் யோகமே—செயம்
வீட்டிலுன்னைக் கூட்டிவந்து
விட்டுதே தெய்வம்

## 95

### விருத்தம்

ஆரய்யா இங்கிருக்கும் அண்ண மாரே
அளந்துவைத்த கூலியெங்கே அய்ய மாரே

கூறய்யா யெவ்விடத்தில் இருக்கு திப்போ
கொடுத்தனுப்பும் வணிகர்குலக் கொழுந்தே
கேளாய்
பாரய்யா ஒருபாகப் பொழுது மில்லை
பாலர்களும் பசித்தழுவார் போக வேணும்
ஊரய்யா துலைதூரம் நடக்க மாட்டேன்
உத்தமரே யென்றுமங்கை உரைசெய் வாளே !

**வசனம்**

அகோ ! வாருங்களண்ணமாரே என்னுடைய கூலித்தவசம் அளந்து போட்டுயிருக்குற ...

[47, 48 எண்ணுள்ள இரண்டு ஏடுகள் காணவில்லை]

## 96

செட்டியார் பதுமாவதியாளைப் பெண்டாள முயலுகிறார். பின் அவளை ஒரு அறைக்குள் தள்ளி பூட்டி விடுகிறார். அடுத்து வருவது அவள் புலம்பல்.

**விருத்தம்**

............... ......வயிறு எறிந்து பத்தி
அழுதழுது கண்வழியே அருவி சோர
செங்கமலத் தோன்விதித்த விதியோ என்ன
தீவினையோ திருவளத்தின் செயலோ வென்றும்
மங்கைபங்கா! சீதைமண வாளா! அந்த
வடவாலின் கண்ணுறங்கி வளர்கின் றாயே.

## 97

**தருவு**

தலைநாள் விதியிதுவோ—சிவ
சங்கரா சம்பு சதாசிவனே
விலையான சந்திரமதி—கொண்ட
வேசத்தை யென்னுடன் விதித்தானோ
அலையாப் பதவியென்று—யிந்த
அன்பத் தாறுபுவ னங்களை
மலையாமல் ஆண்டிருந்தோம்—யெங்கள்
மன்ன னிளகும் மகராசன்
குலையேது செய்ததுண்டோ—யென்னைக்
கொண்டபத் தாவும்செங் கோல்தாங்கி

நிலையான சத்தியத்தை— யிந்த
நீணிலந் தன்னில் நிர்ணையமாய்
சிலைவாளுங் கையேந்தி— நாங்கள்
சிகதர சநகர் ஆளையிலே
சனியான பாதகனும்—ஒரு
சங்கர சதாசிவன் பிராமணன்போல்
கனிவாய்வந் தெங்களையும்—அந்த
காலச் சனிதொட்ட தோசத்தினால்
தனியே நகரிழந்து—சில
தங்கு மடமும் தானிழந்தோம்
இனியான மந்திரியும்—போன
தெந்தத் திசையென் றறியோமே
தரையாளு மன்னரிலே—புகழ்
சந்திர சேகரன் றன்வயிற்றில்
குறையாத பாக்கியமும்—நான்
கொம்பனை யாள்வெகு இன்பமுடன்
நிறையாக வேபிறந்து—மனு
நீதி யுடன் பெற்ற பாலகனே
வரை சேருங் கானகத்தில்—வந்து
வஞ்சக மாயொரு மாமறையோன்
தோள் மீதி லேதாங்கி—அவன்
தூக்கிச் சுமந்துகொண் டேகிப்பின்
நாள்தோறுந் தட்டழிந்து—நின்று
நாங்கள் படுந்துயர் காண்பதுண்டோ
கோளான தீய்வனத்தில்—பெற்ற
கும்பி கொதிக்கக் குழந்தைதன்னைத்
தாழ்விலே கிடத்திவிட்டுத்
தப்பியே வேதியன் போனபின்பு
தேளான வெம்பசியால்—மனம்
தேங்கிஉள் ளமெங்கள் சிந்தையெல்லாம்
வீணாய் மெலிந்தலுத்து—அங்கே
வெந்து தணியும் வனங் கடந்து
ஆனாலு மவன்கொடுமை—கூலி
ஆனந்த னா தரவறிந்து
கூலிக் கணக்கெழுதி—அங்கே
குன்னி வயிறு வளக்கயிலே

கேலிக் கிடமாக - யிது
　　கேவல மாச்சுதே திருவுளமே
வானோர் சபையறியத் — தொட்டு
　　மங்கி லியந்தனை யென்கழுத்தில்
கோனாம லேதறித்த — யென்னைக்
　　கொண்டபத் தாவுங் குழந்தைகளும்
தானே பிரித்து விட்டு — யிந்தச்
　　சரப்பினை செய்தானோ செட்டிமகன்
பொய்யேதும் சொல்லாதான் — வெகு
　　புண்ணிய வானென்று யெண்ணி வந்தேன்
அய்யோ படும்பாவி — யிவன்
　　ஆங்காரம் பாங்காடாய்ப் போகாதோ
தெய்வம் இவன்பங்கில் - நின்று
　　சேர்ந்தனு கூலமாய்ச் சார்ந்துதல்லோ
குலையீரல் துள்ளிவிழ வனம்
　　கொம்பி லிருந்துவிழும் மந்திபோல்
தலையில் விதித்தவிதி — யிங்கே
　　தப்புவ தெப்படி யோசிவனே!

## 98

### விருத்தம்

மங்கைபது மாபதிப் பெண் மயங்கி வாடி
　　மதிகுலைந்து சதிகேடாய் வளவுக் குள்ளே
கண்களுமே கலங்கியப்போ கண்ணீர் சிந்தி
　　கட்டழகி தட்டழிந்து கலங்கும் போது
அங்குமொரு பித்தாளைப் பொட்டிருக்க
　　அதிலேபது மாபதிப்பெண் அடங்கிக் கொண்டு
செங்கரத்தில் மேல்பலகை மூடிச் சாத்தி
　　சேயிழையாய் சபதமொழி செப்பு வாளே

## 99

### விருத்தம்

வில்பிடித்த மன்னரிலே யெனக்கு வாய்த்த
　　வேந்தன்மொழி சத்தியமே விரத மானால்

கறபுடைய பத்தினியும் நானுமானால்
கணவன்மொழி தவறாத கன்னி யானால்
யெப்படியும் யிரும்புருக்கா யிதங்க ளாலும்
யெறிகொத்தீய் பொட்டியைப்போட் டெரித்திட்டாலும்
யிப்படியே மறுப்படா திருக்க வேணும்
யீஷ்பரனுக் கபயமென்றே இயம்பி னாளே.

வசனம்

அரிகரி அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனே, அனந்த கோடி சூரியப்பிரகாசா; யெங்களுடைய நாடு நகரம் தேசங்களு மிழந்து ஸ்திரி புருசரும் ஒன்றோடொன்று சேராமல் பிரித்து நுண்பாதகனான செட்டி செய்த சறப்பினைக்குள்ளாகினேன் அல்லவா—யென்னுடைய நாயகன் பேசுகிறதே சத்திய வண்மை யானால் அடியாளும் நாயகன் சொல்லுக்கு ரெண்டகம் செய்யாதவளுமானால் சுருளி முப்பத்தி முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் கோடி ரிஷியீஸ்வராளும் கெருட கெண்கிம புருடர் கெருட காந்துருவர் சித்தியத்தி சந்திர சூரியரும் பூமா தேவியும் ஆகாசவாணியும் சத்தரிஷிகளும் அறிய இந்தப் பொட்டியானது இரும்பு உருக்கு ஆயிதங்களாலும் அக்கினிப் பிரவேசம் செய்தாலும் வின்னப்படாமலிருந்து யென் நாயகன் கைமலர் பட்டவுடனே பொட்டி திறக்க வேணும். யிதுவே சத்தியவாகத்தியம் என்று பதுமாபதியானவள் அந்தப் பழைய மரப்பொட்டிக்குள்ளே தாபமாக அடங்கிக் கொண்டாள் என்றவாறு.

## 100

விருத்தம்

பூட்டிவைத்த கதவின்தாள் திறந்து கொண்டு
புத்தி கெட்ட செட்டிமகன் புலம்பி நின்று
கோஷ்ட்டிமகன் செட்டியவன் மெலிந்து வாடி
கூறுகெட்ட சீறழிவான் கொடிய காமன்
வேட்டை செய்ய நோட்டமதாய் வீட்டுக் குள்ளே
மெல்லியரைக் காணாமல் விரைந்து வாடி
தீட்டுவிழி மாதுநல்லாள் எங்கே என்று
தேடினான் தட்டழிந்து வாடி னாளே.

## 101

### தருவு

இப்படிச் சதிசெய் வாளோ
என் கண்ணைத் தப்பி
இந்த மோசம் பண்ணுவாளோ
கற்பகத் தருவைப் போலே
கண் முன்னே வந்து மாட்டி
எப்படிப் பறந்திட்டாளோ
இந்தவிதிக் கென்ன செய்வேன்
வீட்டுக்குப் பிறகேமாது அப்புறம் போக
வேறே வழி அங்கேஏது
பூட்டுத்தான் திறக்கும் போது—கபடமாக
போய்விட்டாளோ என்னசூது
ஆட்டிய பம்பரம் போலே
ஆடியே கிறுகிறுக்க
பூட்டியே இருகண்ணிலும்
பூச்சாண்டி காட்டி என்னை
(இப்படிச் சதி செய்வாளோ,)

### வசனம்

அகோ வாரும் பிள்ளாய் கூலிக்காரர்களே! மகா சதுர்வேத உபாயங்களினாலே யிந்தப் பெண்ணை வரவழைத்துக் களஞ்சியத்துறையில் தள்ளிக் கதவைச் சாத்தித் தாள்ப்பாள் போட்டு வைத்திருந்தோமல்லவா அவள் போன விதந் தெரிய வில்லை. நீங்கள் களஞ்சியத்துறையிலே போய் பரிசோதினை பார்த்து வாருங்கள் பிள்ளாய்.

## 102

### விருத்தம்

களஞ்சியந் தனிலே சென்று
கவனமாய்க் கூலிக் காரர்
முளைந்துபோய் அந்த மூலை
முடக்குகள் எல்லாம் தேடி

தெளிந்துடா இருட்டுக் குள்ளே
திரும்பியே வருகும் போது
பளங்கிடப் பொட்டி யொன்று
பாரமாய்க் கிடக்கு தய்யா

வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி நாங்கள் எல்லாரும் களஞ்சியத்துக்குள்ளே போய் ஒரு பக்கமாயிருந்து பார்த்து வரும்போது யீசானிய மூலையிலே ஒரு பழைய பொட்டியானது வெகு பாரத்துடனே இருக்குதய்யா சுவாமி. அந்தப் பொட்டியை வெளியிலே தள்ளி விடும். பரிசோதினை பார்க்க வேணும். பிள்ளாய்.

## 103

விருத்தம்

நன்றெனவே சம்மதித்துக் கூலிக் காரர்
நாலாறு பேர்களுமே நலமாய்ச் சென்று
கண்டுவந்த பொட்டிதனை உருட்டிப் பார்த்து
கனபாரங் காணுதையா களவுண் டிங்கே
என்றவர்கள் கனபாரங் கட்டித் தூக்கி
எடுத்துவந்து செட்டிமுன்னே இறக்கி வைத்து
நின்றவுடன் பொட்டிதன்னை அசைத்துப் பார்த்து
நீலியிருப்பாள் எனவேநிச்ச யமென் றானே.

வசனம்

அகோ வாருங்கள் கூலிக்காரர்களே இந்தப் பழைய பொட்டி இவ்வளவு பாரமாயிருக்க வேண்டியதென்ன ? இந்த நீலியாகிய ரெச்சக்காரி இதிலே இருக்குறதற்க்குச் சந்தேகமில்லை. கண்ட கோடாலி கையரிவாள் வாச்சி உளியினாலே ஒரு நிமிஷத்தில் சக்கை சக்கையாய்ப் பிளந்தெரியும் பிள்ளாய்.

அப்படியே நல்ல பாக்கிய மாச்சுதையா சுவாமி.

## 104

விருத்தம்

செட்டிமன்னன் உத்தரவு பெற்றுக் கொண்டு
திட்டமுடனே கூலிக்கார ருஞ்சி னந்து

வெட்டருவாள் கடப்பாரை இருப்பு லக்கை
விரைந்துகண்ட கோடாலி மிகவே வாங்கி
பொட்டி தன்னை வைத்திருக்கு மிடத்தில் வந்து
புனிதமுடன் கைகளினால் புரட்டித் தள்ளி
வெட்டியதை ஒரு நொடியில் தூள்தூ ளாக்கி
விரைந்துசொல்வோம் என்றவர்கள் விளம்பினாரே

## 105

### தருவு

துண்ட றிகையிகையிலே
கண்ட கோடாலி எடுத்துத்
தூக்கினார்—பொட்டியிலே
தாக்கினாரே
கண்டதுண்ட மாகவென்று
நின்றுதட்டினார் கூலிக்காரன்
காட்டினாள்— ஒருத்தன் நின்று
மாட்டினான்
குண்டுபோ விருக்குதெங்கும்
கண்டதுண்டோ அண்ணமாரே
கோறைபட-வில்லையிங்கே
பாருங்க ளண்ணே
நன்றுநன்றே சினந்து
கொண்டுகடப் பாறையினால்
நாட்டினுர்—வெட்டறுவாள்
தீட்டினாரே
வெட்டி வெட்டி யேயுருட்டி
கொட்டியிரு கைசலித்து
மேவினார்—முடியாதென்று
கூவினார்
சிட்டிடுங் தணவிந்த
பொட்டிதனை விட்டெறிந்து
சோதினை யறிவோம்—இவள்
நீதியறிவோம்

மண்டியே செந்தணலில்
ஒண்டியாக வேஅவர்
மாட்டினார்— கூலிக்காரன்
முட்டினாரே
அக்கினியில் வேகாமல்
நிக்கவே பழைய பொட்டி
அதிசயம் என்ன சொல்வேன்
எசமானே.

## 106

### விருத்தம்

மையல்கொண்ட கொடும்பாவி செட்டி மன்னா
மலைபிளக்குங் கடப்பாரை வாங்கித் தாங்கிக்
கையரிவாள் ரம்பம்போட் டறுத்துப் பார்த்தோம்
செய்வதினி யெங்களால் ஆகா தென்று
தியங்கியவர் கூலிக்காரர் செப்பி னாரே.

### வசனம்

ஆனால் வாருங்களய்யா சுவாமி. இரும்பு உருக்கு வாச்சி உளி அம்பு ஆயுதங்கள் ஆனாலும் வெட்டிப் பார்த்தோம். அதற்கு அசையவில்லை. அப்பால் அக்கினி வளத்தி அதிலேயும் தூக்கிப் போட்டோம். அதற்கும் ரணு மாத்திரம் விண்ணப்பட வில்லையையா சுவாமி.

## 107

### விருத்தம்

அக்கினியில் போட்டெரித்தால் வெந்தி டாதோ
அறுத்திழுக்கும் ரம்பத்தால் அறுப டாதோ
கைக்குதவி யாகஒரு குரளிப் பேயைக்
கைவசமாய்ச் செய்துகண்ணைக் கட்டி னாளோ
திக்கிலொரு பெண்ணிவள்போல் கண்ட தில்லை
செகசால வித்தையிலே தெளிந்த கள்ளி
மைக்கிளியாள் தனக்காசை கொண்ட தோசம்
வையகத்தோர் பழிக்கஒரு வசையு மாச்சே

தருவு

அய்யய்யோ எனக்குவிதி ஆன கோலமே
அரிகரிவை குண்டவாசா ஆதி மூலமே

செய்வதினி யேதோஒன்றும் தெரிய வில்லையே
திருவுளமே இதுவுமொரு பெரிய தொல்லையே

என்னசெய்வேன் எந்தலையில் வந்த வில்லங்கம்
இடிஇடித்து எந்தன் மேலே வந்து வீழ்ந்தாப்போல்

வேசியைப்போல் எண்ணிமோகம் விரகந்தனையே நான்
மெல்லியைச் சேரவந்தது துரோகம் போலையே

பஞ்சபாத கங்கள்உண்டோ பரம சிவனே
பாரமெல்லாம் நான்சுமக்க வந்ததீ வினையோ

காமனுக்குக் கண்ணெங்கையோ கண்ட விடம்போல்
கற்புத்தீ யுள்ளவளென்று இப்ப எண்ணாமல்

தாமரையில் தண்ணீர்போல் தத்தழிந் தேனோ
சரப்பினை யறியாமல்நான் கெட்டு நொந்தேனோ

சத்திரங்கள் கட்டிவைத்த தர்மமும் போச்சே
தலையில் விதித்தவிதி இப்படி ஆச்சே

கொத்தர்களே கூலிக்காரத் தம்பி மார்களே
கொடியவினைக் கென்னசெய்வேன் கூறுவீர்களே.

வசனம்

ஆனால் வாருங்கள் கூலிக்காரர்களே. இவளொரு பதிவிரதையென்பதை அறியாமல் காமனுக்குக் கண்ணுக் கண்ட விடமென்று சொல்லுவார்கள். அதுவும் அறியாமல் யிந்தப் பெண்ணைப் பார்த்து நிந்தனை நினைந்தேன் அல்லவா. சிவ சிவனே என்று இந்தப் பொட்டியை வண்டியி லேத்திக் கொண்டு அந்தமான் றேவுதுறைக்கீப் போய் வருகிறேன். நீங்களும் வெளிவிடாமல் அவையடக்கம் பண்ணிக் கொண்டு வேலை செய்யும் பிள்ளாய்.

அப்படியே, நல்ல பாக்கியமய்யா சுவாமி.

## 109

### தருவு

வாசம் வளம்பெருகும் துரை
மாநகர் ஆளுகின்ற
ராசன் இதுவறிந்தா—லினிவெகு
யோசமுண் டாகுமென்றே
பேசும் பசுங்கிளியே—மரகதப்
பேடை மயிலாளே
மாசில்லாப் பத்தினியே—பெட்டியை
வண்டிமே லேற்றினரே

தீ(ய்)புர மாய் நடத்தி—வண்டிதனை
சீக்கிர மாய்க்கடத்தி
காவறி யாருமென்றே—வணிகன்
கடுநடை யாய்—நடந்தான்
பூவையும் பெட்டியிலே—யிருந்து
புலம்பிப் பரதவித்து

தாவி நெடுந்தூரம்—நடந்து
தடங்கொண்டு சென்றானே
செங்கம லஞ்சிறந்த—சார்புனத்தில்
தீர்த்தக் கரையோரம்
சங்கை யுடனேயவர்
ஸ்தானங்கள் செய்தனரே

## 110

### விருத்தம்

கங்கையிலே தலைமுழுகித் தீர்த்த மாடிக்
கவனமொடு பூஜையிலே கண்ணை மூடி
சங்கையுடன் செய்கின்ற தவம்விட் டோடி
சண்டாளன் வணிகன்மனந் தயங்கி யேங்கி
மங்கைநல்லாள் கற்புவினை வளைந்து சாடி
மந்திரிபோய் அந்திரமாய் மயங்கும் போது
துங்கமுடன் விரைந்தோடத் தாங்கித் தள்ளும்
சோனகரும் தான்வந்து தோன்றினாரே

வசனம்

அகோதெப்படியென்றால் அந்தச் சமயத்திலே சார்புனத்தில் தீர்த்தக்கரையிலே வாசம் பண்ணப் பட்டானென்ற சோனகர் வருகுற விதம் யெப்படியென்றால்—

## 111

### சோனகர் தருவு

சோனகர் வந்தாரே—கடற்கரைச்
சோனகர் வந்தாரே
(சோனகர் வந்தாரே)

கீனவர் தன்குலம் மானவ றோடத்துக்
கானவராகிய சோனகர் வந்தாரே
இடையிலே முண்டுகளாய் கறுங்கச்சை
இருத்தி யொருமுழத் துண்டுகளாம்
கடைவிழி வண்டுகளாம் சோனகர்
கருதிய மொழிவெகு னொண்டுகளாம்
பட்டென வெகு திடமொடுஞ் சபையிலே
பவளங்கள் மாணிக்கங் கனங்கொண்டேவிக்கும்
(சோனகர்)

மாணிக்க மரகதமாம்—வயிரங்கள்
மகுடத்துக் கணித்திய வச்சிரமாம்
தோணிக்குச் சரக்கேத்தும் திடமுள்ள
சோனகர் வந்து தோன்றினரே
ஆணிக்கிச் சறியிடும் மாணிக்கங் களுமுத்து
காணிக்கிச் சரியிடை யாகவே
பேணிக்கொண் டேவிக்கும் சோனகர் வந்தாரே (சோனகர்)

## 112

### விருத்தம்

அருளுதயந் தன்னிலே எழுந்தி ருந்து
அனுஷ்டானம் கிருபையெல்லாம் அன்பாய்ச் செய்து
கார்மேக நிறம்படர்ந்த கெவிபா தாளம்
கங்கையெனும் சார்புந்திக் கரையில் வந்து

தர்மமொடு சீருடனே தாங்கித் தள்ளும்
தடம்பெரிய சோனகரே தயவு செய்து
உரிமையுடன் எங்களைஓ டத்தில் வைத்து
ஓட்டுமென்றே செட்டிமன்னன் உரைசெய் தானே.

**வசனம்**

ஆனால் வாரும் பிள்ளாய் சோனகரே, நானொரு பரிவர்த்தகன். நவகோடி நாராயணன் செட்டியென்று சொல்வார்கள். நான் அந்தமான்றேவு துறைக்கிப் போக வேண்டியிருப்பதுனாலே யிந்த வண்டியையும் யென்னையும் ஓடத்திலே வைத்து அக்கரையில் சேர்க்க வேணும் பிள்ளாய் சோனகர்களே

## 113

**கப்பல் தருவு**

யேலயேலோ யேலயேலோ

அலைகதிரோன் உதையமதில்—நித்தம்
அனவோர்களும் காலமெல்லாம்
நிலைபெருகும் சாரபுந்தி—அதில்
நெடும்புனலாய்ப் படர்ந்த கெங்கை
குலைபுரியும் செட்டிமன்னன்—அந்தக்
கொம்பனையாள் பொட்டிதன்னை

## 114

**முடுகு**

கோலாறு வண்டியுடன்
ஓடமதி லேத்தி
கொடுமுடிகள் தகதகென
ஒளிவு தரும் நேத்தி
ஆலோல மென்றதிலே
சிலவிருது சாத்தி
அந்தமான் றேவுதுறைக்(கு)
அதுகண்டு போற்றி (யேலயேலோ)

மேடுபள்ளந் திடங்க ளெல்லாம்—பார்த்து
விலக்கி அங்கே ஓடம்தள்ளும்
சாடிவந்தே மெள்ள மெள்ள—அங்கே
தவித்துவிதங் கரங்கள் துள்ள
நீடுங்கும்பாய்க் கிளை கூட்டி—அங்கே
நீர்மனிதர் தலைக்கூட்டம்

# 115

## முடுகு

நிலையாத் தண்ணியிலே—அலைமோதி ஓட
மலையாம லேமாது—வருவது விசேசம்
அலையாத நங்கூரம்—பிலமாகப் போடும்
அந்தமான் றேவுதுறைக்—கதுகண்டு கூடும்
(யேலயேலோ)

பச்சைநிறத் தவளைகளாம்
பவளக்கொடி நண்டுகளாம்
கொச்சிமறை நீர்ச்சுணங்கள்—அதில்
கோலப்பச்சை நிறத்தலைகள்
யிச்சைகளும் தாராவும்—அதில்
யெங்கில்லாத பறவைகளும்

# 116

## முடுகு

பாசையது குழறியே—பேசி விளையாடி
காசமுடனே யதிக—நேசமுடன் கூடி
ஆசையுடன் ஓடமதில்க் கரு காககீராடி
அந்தமான் றேவுதுறைக் கதுகண்டு கூடி (யேலயேலோ)

# 117

## விருத்தம்

சதாரபுந்திக் கங்கையிலே ஓட மேறித்
தத்தளித்து வருகுதுநீர் தாண்டித் தாண்டி
விரசுடனே ஓடமது நடத்திக் கொண்டு
வெகுதூரம் தண்ணியிலே விரைந்து சென்று

இரவிமகன் கோஷ்ட்டியினால் வழிகள் சுத்தி
எண்ணாது எண்ணிமனம் திடைந்து புண்ணாய்
அரமெலிந்து குரவரகு திறிக்க என்று
அந்தமான் ரேவுகளில் அவன்சென் றானே

## 118

### விருத்தம்

குழந்தைகட்குப் பசிக்கமுது கொடுத்து விட்டு
கொம்பனையாள் போனதென்ன கோலந் தானோ
இளங்கிளியாள் தான்கூலி வாங்கப் போன
யிடத்திலென்ன தீவினையோ என்ன சூது
வணங்கியேகூ லிக்காரர் போன பேர்கள்
வந்தாரோ வரவில்லையோ வகையே தேர்று
உளந்தயங்கிக் கொண்டுநின் றான் அந்த வேளை
உண்மையுடன் அரசனுமே உரைசெய் வானே.

### வசனம்

ஆனால் வாரும் பிள்ளாய் ஆனந்தா. என் கண்மணியாகிய பதுமாபதி கூலி வாங்கப் போனவள் இன்னம் வராமலிருக்குறது என்ன காரணம் பிள்ளாய்—ஆனந்தா.

## 119

### தருவு

பாலகர் ஏங்கி அழுவதைப் பார்தம்பி ஆனந்தா—பிள்ளை
பாலுண்ண வாய்மணம் போகலாமோ தம்பி—ஆனந்தா
கோலங் களும்கஷ்ட காலங்க ளும்தம்பி ஆனந்தா—இந்த
குத்தம் விளைந்த கொடுமைகள் என் சொல்வேன்—ஆனந்தா
எந்த விதமென் றறிந்திங்கே வாதம்பி ஆனந்தா—மைந்தர்
பாவத்தைக் கண்ணாலே பார்க்கப் படுமோ சொல் ஆனந்தா
மைந்தருக் குஅன்னம் கொடுப்பவ ராறிங்கே ஆனந்தா—களை
மாறிப் பொழுதொரு முப்பக லாகுதே ஆனந்தா
சிந்தை தடுமாறி நொந்திட வேதம்பி ஆனந்தா—சற்றே
சீக்கிரம் சென்று திரும்படா நீதம்பி ஆனந்தா.

## 120

### விருத்தம்

கோதில்லா மனக்கவலை கொள்ள வேண்டாம்
கொத்தவனே யுங்கள்மனம் கொதிக்க வேண்டாம்
சேதிவகை விபரமெல்லாம் அறியப் போறேன்
சீக்கிரம்போய் ஒருநொடியில் திரும்பி வாரேன்
பாதகனான் உங்களைஆ தரித்த கோலம்
பலித்துதெந்தன் கைமேலே பலனுங் கண்டேன்
யேதுவகை யானாலுங் கண்டு வாரேன்
யென்றவனுஞ் சென்றுநடந் தேகி னானே.

## 121

### தருவு

சென்றான் அனந்தன் தேடி – மனம்
திடமாய் வழி கூடி
நின்றான் முகம் வாடி — நின்று
நிலையாய் விரைந் தோடி

வணிகர் தெருவெங்கும் சென்று
மயங்கி நின்று — தியங்கி
அணிநேசர் நகர்தனில் வந்த
அவ நீதியை அறியேன்

குலபாதகன் வசிகன் செய்த
கொடுமையது நிசமே
மலைவாகிய விதியே – யிங்கே
வருமோ இந்தச் சதியே – இதை

யாருடன் சொல்லுவோ மென்று
இடிந்தான்-மன–துடைந்தான்.

## 122

### விருத்தம்

அரசனுக்கே யென்னசொல்வோ மென்றா னந்தன்
அஞ்சியஞ்சி மனங்கலங்கி நெஞ்சம் புண்ணாய்

வரமுறையில் லாததுஷ்ட்டர் வணிய னுந்தான்
வந்துநின் று வீதியிலே விம்மி விம்மி
பரவிவிழி அறிவுசிந்தி ஆறுபோ லோட
பரதவித்து நின்றவனும் பறந்திட் டானே.

வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி. அந்தப் பெருந்துறை நாட்டில் வீளங்கப் படா நின்ற வணிகர் வீதிகள் தோறும் போய்த் தேடியுங் கண்ணினாலுங் காணாமல் அம்மாள் போன இடம் இன்னதென் றுந் தெரியவில்லையய்யா சுவாமி.

## 123

### விருத்தம்

செப்புநா ராசமதைப் பழுக்கக் காய்ச்சி
செவிதனிலே விட்டதுபோல் தியங்கிச் சோர்ந்து
மற்புயஞ்சேர் மன்னன்பூர்வ சக்கிர வர்த்தி
மகராசன் கவலையிலே மதிம யங்கி
அப்பணிந்த சடையாளை முக்கண் ணீசர்
ஆனாலும் பிறக்கொடுமை அனீத மாக
இப்படியோ என்தலையில் பிரம தேவன்
யெண்ணாமல் கபடமதாய் எழுதிட் டானே
[பின்னும்]

என்னுயிரே கண்மணியே பதும வல்லி
யென்னையுமுன் குழந்தைதனை யிங்கே விட்டு
உன்னுயிரும் பிழைத்திருக்கு தோசண் டாளி
ஒன்றுபட்டு மனந்தெளிவ துண்டோ பாவி
மின்னரசே நம்மையிந்தக் கான கத்தில்
வேறுகூராய்ப் பிரித்து விட்டார் பிரம தேவன்
யின்னமுந்தான் யென்னசெய்யப் போரா ரென்று
ஏங்கிநான் பெருமூச்சை வாங்கி னானே.

வசனம்

ஆனால் வாரும் பிள்ளாய் ஆனந்தா, யித்தினை காலமும் உன்னுடைய ஆதரவிலே நாங்கள் பிழைத்தோ மல்லவா.

இதுவும் திருவுளத்துக்குப் பொறுக்காமல் ஒன்றோடொன்று சேராமல் பிரித்து விட்டாரல்லவா. இனிமேல் இவ்விடத்திலே யிருந்தால் குழந்தைகளுக்கு மோசம் வருகுறதாய்க் காணுகுது. ஆனபடியினலே யிந்தக் குழந்தைகளை யெடுத்துக்கொண்டு நான் ஒரு திசையை நோக்கிப் போறேன்—பிள்ளாய் ஆனந்தா.

## 124

### விருத்தம்

வணிகர்குலம் தழைத்தபெருந் துறைநன்னாடு
வளஞ்சிறந்த தெருவீதி வழியே சென்று
துணிவுடனே மைந்தர்களைத் தோள்மேல் கொண்டு
சுகமடவர் ஒருகோடி சூழ்ந்து நிற்க
அணிஅணியாய்ச் சாதிவகை விபரஞ் சொல்லி
அந்தணர்கள் சூழ்ந்திருக்கும் அக்கிராரத் தோரம்
மணிக்கெனவே கண்ணீரை வடித்துக் சொண்டு
மகராசன் பரதவித்து வருகின் றானே.

## 125

### தருவு

இந்த நகரில் வந்தனரே—சனி
ஈஸ்வரன் மாய்கையினாலே
யெந்தன் குழந்தைக ளோடு தயங்கினான்
ஏழை அகுதியைப் போலே
பந்தணி பூமுலை மாதே பிரிந்திட்டேன்
பாற்பது மாபதி யாளே
பாலக ரேங்கிப் பரக்கப் பறக்க
பதறுதே என்கும்பி வேளை
எத்திசை யும்புகழ் பெத்தர சாண்டிடும்
சத்திய குலத் தாரே—யிப்போ
என்னைப்போல் பாவியை மன்னர்க்குள் ளாரையும்
எங்கே கண்டுசொல்லு வீரே
நத்திவந் தோர்க்கன்னம் சத்திரம் வைத்திடும் நாட்டில்—
செவியில்

கேட்டதுண் டோசொல் வீரே
பேர்சிறந் தோங்கிய சங்கு முதித்திலும்
பெருந்துறை நாட்டிலுள் ளோரே
பிள்ளை யிரக்கங்கண் டாகிலும் பாவிக்கி
உள்ளதை நீங்கள்சொல் வீரே
மாந்தை நகரவள் கண்ணன் கோத்திரம்
வாழுங் குலத்தில்வந் தாரே
மைந்தரை விட்டுப் பிரிந்தவள் போன
மயக்கத்தைத் தீர்த்திடு வீரே
பாந்த முள்ளவ சீகர் குலந்தனில்
பாங்குடன் வந்துதித் தாரே—யென்
பாதகி போன வழியெது வோவெந்தன்
பாலர் பசித்தழு வாரே
கங்க குலாதிபர் மேழிக் குடையவர்
காராள வமிசத் தாரே — இந்தக்
கால மைந்தர் கலங்கி அழுகுறார்
காரிழை எங்கேசொல் வீரே
முத்திய பூசை மிகுத்திடும் வேத
முதலிக ளேபெரி யோரே—நல்ல
மோகப் பசுங்கிளி யாள்சென்ற பாதையைத்
தாகத்து டன்சொல்லு வீரே
நன்னய மாகவே மண்ணுல கில்வளர்
கன்னடி யத்தம்பி மாரே—யெந்தன
நாயகி போன அபாய மெனக்கு
உபாய மெனக்குச்சொல் வீரே
துங்க மிகுந்த கர்த்தர் வகுத்தர்கள்
துரைகளே நாய்க்க மாரே—இந்தத்
துன்பத்தி லேமனம் புண்பட்டு நோகுது
துயரத்தை மாத்திவைப் பீரே
மங்கள மாய்வளர் தொங்கிய பட்டுநூல்
வர்த்தக ரேசெட்டி மாரே—யெந்தன்
மாங்குயி லாளைப் பிரிந்து புவியில்
வந்த வழிசொல்லு வீரே
சீதரும் புண்ணிய மார்க்கண்ட கோத்திரம்
சேணிய ரேதம்பி மாரே—யெந்தன்
சேயிழை யின்னம் வராமல் இருக்கின்ற
சேதியை நீங்கள்சொல் வீரே

தேவி சவுடம்மாள் பாதந் தெரிசிக்கும்
        தேவர்கள் தன்குலத் தோரே – இந்தத்
தீவினை செய்திடும் பாவிக் கவள் சென்ற
        தாவெது வேசொல்லு வீரே
தேச மிகுந்திடும் கோமுட்டி ஆசாரச்
        செட்டிக ளேதப்பி மாரே – நல்ல
தென்புக மாதர அம்புக ளேசொல்லும்
        சிந்தை மகிழ்ந்துரைப் பீரே
சம்பிர முடன்வெகு கும்பிறோக் கியமது
        கப்பள சோத்திரத் தாரே – இந்தத்
தாவளந் தன்னிலே கோமள மாது
        தருகிலை யோசொல்லு வீரே
கள்ளர் மறவர் அகம்படி யாரெனும்
        தெள்ளிமை யாய்வளந் தோரே – இந்த
கானகந் தன்னிலே மானனை யாளின்று
        போன தடஞ்சொல்லு வீரே
பந்துக ளோடும் சிறந்திடும் வாணிகர்
        பவுசும் பலந்தழைத் தாரே – இந்தப்
பாலகர்க் கன்னம் கொடாமல் அவர்சென்ற
        பாதையை நீங்கள்சொல் வீரே
சங்கீத ராகம் சுரதம் பாராட்டிய
        தாசிக ளேமேளத் தாரே — இந்தச்
சாலை வழியிலே காணீர்க ளோஎந்தன்
        சோலை இளங்குயி லாளை
தேசஞ் சிறந்திட வாசம் பொருந்திய
        தெலுங்க குலத்தில்வந் தோரே— நல்ல
சித்திரம் போலேயென் பத்தினி யாள்பெண்
        உத்தமி யெங்கேசொல் வீரே
திண்ணை கடத்தெரு வெங்கு மிருந்திடும்
        சிறந்தருள் உள்ளநாட் டாரே— இந்தச்
செல்வர் பரக்கப் பரக்கப் பிரிந்தவள்
        சென்ற தடஞ்சொல்லு வீரே
யெண்ணைக் கருஞ்சேலை வெளுக்கின்ற புண்ணியம்
        யேந்திட யேகாலி மாரே
யிந்த வழிமாது வந்ததுண் டோசும்மா
        யெந்தனுக் கேயுரைப் பீரே

சோபித மாய்வளர் நாவித னாம்இந்தத்
தொல்லுல கில்வளர்ந் தோரே—எந்தன்
தோகையர் ஓடி மறைந்திட்ட காரணம்
மாய்கைநீங் கள்சொல்லு! வீரே
வள்ளல்தெய் வேந்திரர் கோத்திரந் தன்னில்
வாழ்ந்திடும் காலாடி மாரே—யிங்கே
மார்க்கம தாய்மைந்தர் தேக்க முடனிங்கே
வந்ததுண் டோசொல்லு வீரே
தெள்ளுந் தமிழ்த்திரு வள்ளுவர் கோத்திரம்
உள்ள பறயனாரே—இந்த
தேசத்தில் உள்ளோர்கள் மோசத்துக் குள்ளதை
வாசத்து டன்சொல்லு வீரே
ஆனந்த னேதம்பி நானுந்தன் பக்கல்
அடைக்கல மாகவே வந்தேன்—இப்ப
அந்திர மாகவே மைந்தனும் நானும்
அனாதி போலநின் றோமே

## 126

### விருத்தம்

மங்கைபது மாபதியைப் பிரிந்து பின்பு
மதிமயங்கிக் கலையிழந்த மான்போ லாகி
தங்கமணிக் குழந்தைகளைக் கையில் தூக்கித்
தலைமேலும் தோள்மேலும் தாங்கிக் கொண்டு
கங்கைபங்கா உமக்கபயம் அபய மென்று
கதறியிரு கண்வழியே கண்ணீர் சோர
பொங்கவனக் காட்டிலொரு திசையை நோக்கி
புண்யபூர்வ சக்கிரவர்த்தி புறப்பட் டாரே.

## 127

### தருவு

யெங்கே சென்றாளோ யென்பிராண நாயகி
யெய்விடம் சென்றாளோ

பொங்கா டறவணிந்த
கங்கா தரன்யெந்தன்
பங்கி விருந்துசினம்
தங்காம லென்னைவிட்டு (யெங்கே)

மலைவாழ் குஞ்சரமே—விண்ணாந்த
மரமே செண்பகமே
கலையே புள்ளினமே—தனித்துவர
விலையோ சொல்லன்னமே
நிலைபோய் மனம்வெறுத்து
கலைபோய் இனம்பிரித்து
பலயோ சினையைவிட்டு
குலைகாரி யென்னைவிட்டு (யெங்கே)

சோலை இளங்குயிலே – வனந்தனில்
சூழ்ந்துவரு மயிலே
காலமும் வந்ததிலே—என்
பாலரு மேங்கையிலே
கோலமனம் வேறுபட்டு
சோலமாய் விசாரமிட்டு
சீலமாய்க் கண்ணீரைவிட்டு
பாலரும் என்னையும்விட்டு (யெங்கே)

பஞ்சவர் ணக்கிளியே – யெனக்கிம்பம்
பாத்தொரு சொல்மொழியே
வஞ்சமில் லாதெளியேன் – மனம்பதறி
வந்ததிங் தவழியே
நெஞ்சமீதி லிரங்க
வஞ்சகமோயி லங்க
தஞ்சமென் றனைப் பிரிந்து
பஞ்சபாதகி மறந்து (யெங்கே)

## 128

### விருத்தம்

கோங்கலரும் வனங்களெல்லாம் அலைந்த லைந்து
குஞ்சரம்போல் குழந்தைகளைத் தோள்மேல் தாங்கி
பாங்குடனே மெய்யறிவு சிந்தி ராசன்
பரதவித்துச் சோடிழந்த பச்சி போல
யேங்கியனம் புண்ணாகி யிடிந்தி டிந்து
யிக்கோல மாகஅயன் எழுதி னானோ
மாங்குயிலாள் தனைப்பிரிந்து விட்ட பாவம்
வஞ்சகமே யென்றரசன் மயங்கி னானே

வசனம்

இந்தப்படி பூர்வச் சக்ரவர்த்தி மகராசனானவன் வனவான மெல்லாந் திரிந்து அலைந்து சலித்து ஆங்காரத் தோடுங்கூடி அடங்காத் துயரத்துனாலே புலம்புகிறவிதம் யெப்படியென்றால்

## 129

### தருவு

இப்படி யோசிவன் கற்பனை யாச்சுதே தெய்வமே — நான்
எந்தத் தடங்கண்டு போகப் போறேனையா தெய்வமே
சர்ப்பினை யாகவ னந்தனில் சிவசங்கரா ஆரைத்
தஞ்சமென் றெண்ணி வழிகடப் பேன்சிவ சஙகரா

சூரியன் மைந்தன் சனிபக வான்தொட்ட தோசமோ — இந்தத்
துன்பக் கடலில் அழுந்துகின் றேன்வன வாசமே
பாரியெ னும்பது மாபதி யை இந்த காட்டிலே — நுண்
பாதகன் விட்டுப் பிரிந்தே னய்யோ மலைக் காட்டிலே

சோடிழுந் தபச்சி ஆலிலை போலொண்டி யாச்சுதே
சுந்தர மேனி அசந்துகீ ரத்தண்டு ஆச்சுதே
சூடிய மதியக் தாடின வாயென்ன வஞ்சமே உடல்
சோர்ந்து களைத்துப் பதறுதென் னசெய்வேன் வஞ்சமே

இப்படி மன்னன் புலம்பிப் பரதவி பாவியால் — சற்றும்
இன்ப மிரக்கமில் லாத சனியனு மாய்கையால்
கற்பினை யாதொரு சூதெனும் சோதனை காட்டினார் — அந்த
குழந்தைகள் ரெண்டையும் கொந்திட வெண்பசி யூட்டினார்

## 130

### விருத்தம்

மொள்ளமூங்கிக் கொடியவனக் காட்டுக் குள்ளே
முள்வழி நடக்கையிலே தடங்கள் தப்பி
மெள்ளமெள்ள நடந்தலைந்து வழிகா ணாமல்
மேடுபள்ளங் கல்கரடுள் வீழ்ந்தெ ழுந்து
சள்ளையென்று அலைமோதித் திரியும் போது
சனிபகவான் இதுவுமொரு சமய மென்று.

பிள்ளைகளுக் கடங்காத பசியை மூட்டி
பிரண்டுபிரண் டழும்படியே பேர்செய் தானே.

## 131

### விருத்தம்

மைந்தர்களும் கொடும்பசியால் யேங்கி யேங்கி
மயக்கமொரு தியக்கமதாய் மறுகிச் சோர்ந்து
வெந்தணலில் விழும்புழு வதுபோல் துள்ளி
வீழுவதை அரசன்கண்டு வேந்த னப்போ
யிந்தவிதிக் கென்னசெய்வேன் தண்ணீர் காணேன்
யிரந்தழுது கொடுக்கவென்றால் யீய்வா ரில்லை
வந்ததெல்லாம் வரட்டுமென்று தள்ளித் தள்ளி
மன்னவனும் புலம்பியங்கே வருகின் றானே.

## 132

### தருவு

ஆங்கார மாய்ப்பசி
தாங்கலை யோசொல்லும் மைந்தர்களே—இந்த
ஆருண்யந் தன்னிலே
அன்னத்துக் கென்செய்வேன் மைந்தர்களே
—நீங்கள்

பாலுண்ணும் வாயாலே
கூழுண்ண வென்றாலோ மைந்தர்களே—இந்தப்
பாழும் வனந்தனில்
கூழுக்கு என்செய்வேன் மைந்தர்களே

நீங்காம லீய்பவர்
ஆரறி வாரடா மைந்தர்களே—உங்கள்
நேசத்தில் தந்த
பாசம்பொல் லாதடா மைந்தர்களே
கோங்கலர் காவைக்
கடந்தொரு ஊர்கண்டால் மைந்தர்களே—உங்கள்
கும்பிக்கு அன்னம்
எடுத்துக் குடுக்குறேன் மைந்தர்களே

துயரள்ளிக் கொண்டே
குலைதுள்ளித் துடிக்குதே மைந்தர்களே
பாங்கான செல்வம்
பதியு மிழந்தோமே மைந்தர்களே
தீங்கு வினையிந்தச்
செயலறி யோமடா மைந்தர்களே — இங்கே
தின்னக் கனிதண்ணீர்
உண்ணக் கிடையாதே மைந்தர்களே
பாம்பு விசமுண்ட
சாம்ப சதாசிவன் மைந்தர்களே — இந்தப்
பாவத்தைக் கண்ணாலே
பார்க்கவிட் டாரடா மைந்தர்களே.

## 133

### விருத்தம்

கொடிதான பாலவனக் காட்டுக் குள்ளே
குழந்தைகளும் குலைபதரிக் கொண்டு துள்ளி
வடிவான நீர்கருகி ஒளிவு மங்கி
மக்கள்படும் பரிதாப வருத்தம் கண்டு
செடிமறவில் ஒண்டிஒண்டித் திரும்பும் போது
செம்மேகம் திரண்டுமழை கிளந்து கம்மி
துடியதிர யிடியிடித்து வருண ராசன்
தூவினான் மழைமாரி தூவி னானே.

## 134

### தருவு

வருண ராசனிது தருண மென்றுவந்து
வளைந்திட்டானே — மாரி — பொழிந்திட்டானே
பொருமி வாடிக் கண்ணீர் பெருகி ஓட
புலம்பினானே — நின்று — கலங்கினானே.

வழியுங் காணோமையா திசையுங்கா ணோம்மைந்தர்
மயங்குறாரோ — சோம்பித் — தியங்குறாரோ
கிளிகள் போலேகொஞ்சி மொழிகள் பேசி அங்கே
கேட்டுவாங்கி — அன்ன — மூட்டுவேனோ;

அருவி மேகம்நின்று பொழிவ தேனோ செய்த
பாவந்தானோ – சிவன்—கோபந்தானோ
இறகு தாழ்ந்து விட்ட பறவை போலே நின்று
ஏங்கியேங்கி—வழி—தாங்கும் போது.
பரவி மேகம்போல பெருகி யாறு நடுப்
பாதையிலே – குறுக்—காவதேனோ
வருதல் கண்டுமெள்ளத் தருகி நின்று மனம்
மலைத்திட்டாரே—மைந்தர்—களைத்திட்டாரே.

## 135

### சந்த விருத்தம்

அலை நட லொலி முறை சலகு மிளிகளொடு
அதிசய பிரளைய மென்னவே
அருவிக ளிலே பல துளியொரு முகவளி
யெனவிழி யெதிர்மட மடெனவே
விசையொடு சிதறியே
மண்டல மென்றிசையும்
தடவரை யதுகிளி
படநிலை பிசகியே
தரையொடு கரைபிறழ
முறையொடு பரவிய
திறைதுறை யெனவெகு
முசிவொடு கசிவுடனே
வசைவெகு மலைபுகழ்
தரவுமே யிதுசனி
மதியொடு சதியெனவே
கிறுகிறுவென வேஅதில்
வெருவியே வரவெதிர்
கெங்கையும் வந்தனரே.

### வசனம்

யிந்த விதமாகப் பூர்வச்சக்கிரவர்த்தி மகாராசன் தன்னுடைய பிராண நாயகியான பதுமாவதியைப் பிரிந்து வனவாசங் களெல்லாம் தட்டழிந்து வருகுற வழியிலே சூரியன் குமாரனான சனியீஷ்பரபகவான் மாய்கையினாலே ஒரு காலங்களிலும்

தண்ணீர் வராத வரட்டாத்திலே அகோரமாகிய சலப்பிரளய மாய்க் குறுக்கே வருகுறதைக் கண்டு குழந்தைகளைக் கீழே யிறக்கிவிட்டு அந்த ஆத்தோரத்துலே யோசினை பண்ணிக் கொண்டு யிருந்தான் என்றவாறு.

## 136

### விருத்தம்

மழைமேகம் திரண்டுவந்து வரிசித்த நாளில்
மடமடென்று மழைகளுமே வரவுங் கண்டு
பிழைமோசம் வந்துதென்று திகைத்து ராசன்
பிள்ளைகளை யிறக்கிவிட்டுப் பின்வெடுவெடென்று
களைமூடி யேமயங்கிச் சிவனே யென்ன
காலகெதி அயன்விதித்த கபட மென்று
வளையமெனக் கொடுபிடுங்கிச் சுருக்குப் போட்டு
மதலையுடன் இருகரத்தில் மாட்டி னானே!

பின்னும் —

இப்படியோர் செடிதனிலே யிழுத்துக் கட்டி
யிறங்கிவந்தே ஆறுதனில் இடைந்து நீஞ்சி
செப்பமொடு வாருதிநீர் தாண்டித் தாண்டி
சிறுவரைஅக் கரையிலொரு செடியில் கட்டி
யெப்பிழைப்புத் தகையுடனே படப மென்று
இறங்கியவர் திரும்பிவரு கையிலே வெள்ளம்
குப்பரவே கால்வாரித் தள்ளும் போது
குலைகுலைந்து மனம்பதறிக் கொதிக்கின் றானே!

## 137

### தருவு

யிந்தஆறு தன்னில்வந்து
யெண்ணாமல் இறங்கினானே
சுந்தனுட்சி யாலோசசன்
கற்பிழையேது செய்யப்போறேன்

கூலியைக் குறைத்தேன் நான்
கொடுமைகளுஞ் செய்தேனோ
ஆளுக்குக் கணக்கெழுதி
ஆனந்த விடமிருந்தேன்

அந்த இடம் தன்னைவிட்டு
மைந்தர்களைக் கூட்டிக் கொண்டு
யிந்த ஆத் துக்கரையில்
யென்னுடைய குழந்தைகளை

மைந்தர்களைக் கொடியில்கட்டி
மாளுதையோ என்னுயிரும்
தங்குமோ தான் எந்தறைவு
தரிப்பதுஎவ் விடமோகாணேன்
சிங்கர் போலே எந்தனாவி
சிரிப்பதுக் கிடமாச்சுதே.

## 138

### விருத்தம்

மடமடெனத் திரண்டுவரும் கங்கை யாற்றில்
மன்னவனும் தள்ளாடி மயங்கிச் சோர்ந்து
திடமுடைய சிந்தைதடு மாறி யங்கே
சியல்குறைந்து வரும்போது சிறந்த கண்ணில்
அடவுடனே வந்ததொரு ஆடு மேய்க்கும்
ஆயர்களும் ஓடிவந்து அய்யோ வென்று
குடவரையில் வரும்புனலில் குதித்து னீஞ்சி
கொற்றவனை யெடுத்தணைத்துக் கொண்டு
வந்தான்!

## 139

### வெண்பா

ஆற்றில்வந்த மன்னவனை ஆயர்களும் வந்தெடுத்து
தேத்திமனந் தன்னைத் திடப்படுத்தி—போற்றியே நீர்
எந்தஊ ரென்றார்நீ ரிந்தவரட் டாறுதன்னில்
வந்தவகை ஏதுசொல்லு மையா.

### வசனம்

அகோ வாருங்களய்யா நீங்கள் யெந்த ஊரு, சொல்ல வேணுமைய்யா சுவாமி.

ஆனால் வந்து கேளுங்கள் அண்ணமாரே! என்னுடைய ஊரும் பேரும் கேட்டீர்களல்லவா? யென்னுடைய தேசம் செகதர சகபுரம், சாதி வருணாசலம் ஆதவன் குலம். எனக்கு ஒரு ஆச்சி ஆடும் ரெண்டு குட்டியுமுண்டு. ஆட்டைக் கள்ளன் கொண்டு போய் விட்டான். குட்டி ரெண்டையும் தூக்கிக் கொண்டு வருகுறபோது யிந்த வரட்டாத்தில் ரெண்டு குட்டிகளையும் யிக்கரையிலே ஒன்றை அக்கரையிலே ஒன்றைக் கட்டி வைத்துப் போட்டு ஆத்திலிறங்கி வருகுறபோது மேல் வெள்ளம் அதிகமா வந்து தள்ளிவிட்டுதய்யா அண்ணமார்களே. யென்பேர் பூர்வக் கோனான் என்று சொல்லுவார்கள்.

## 140

### விருத்தம்

கூத்துவன்போல் வந்தவரட் டாத்தி னோரம்
குட்டியொன்றைக் கட்டி வைத்துக் குதித்து நீஞ்சி
ஆற்றிமனந் தேற்றிஅக் கரையிற் சென்று
அங்குமொரு குட்டியையு மப்படியே கட்டி
வேற்றிடைத்தள் ளாடிக்குட்டி ஏக்க மாகி
வெடுவெடுத்துத் திரும்பிவரு கையிலே வெள்ளம்
கோட்டிருகால் வாரிவெள்ளந் தன்னாச் சய்யா
கோனாரே நிசமதுதான் கூறு வேனே.

### வசனம்

ஆனால் வாரும் தம்பி பூருவக்கோனானே! அனுபோக விதி யானது யாரையும் விடாதல்லவா? ஆகையினாலே நீரெங்கும் போக வேண்டாமையா. உமக்குப் பாலுஞ்சாதமும் கொடுக்கிறோம். இந்தக் குட்டிகளை மேய்த்துக் கொண்டு சுகமேயிரும் தம்பி பூருவக் கோனாரே.

## 141

### விருத்தம்

ஆத்துவெள்ளந் தனிலுழன்று சக்கிர வர்த்தி
ஆயர்குட்டி களைமேய்க்க அடுமை யானார்
பூத்துவிழி நீர்ததும்பக் கரைந்து சோர்ந்து
புண்ணியவான் குழந்தைரெண்டும் போக்கில் லாமல்
பார்த்துவெருக் கெனவிழித்துச் சிறுநீர் பேய்ந்து
பய்யரழுங் குரல்கேட்டுப் பால்மோர் விற்கும்
தேற்றுபுகழ் சிற்றூரு நகரம் வாழும்
செங்கமல இடைச்சிகண்டு தியங்கி னாளே.

### வசனம்

யிந்தப் பிரகாரமாக ஒரு காலமும் தண்ணீர் வராத வரட்டாத்தில் வழியாக செங்கமல இடைச்சியானவள் பால்மோர் விற்க வந்தவள் சுரபி சுரபி யென்கிற பாலர்களைக் கண்டு யிந்த வரட்டாத்தின் கரையிலே யென்ன காரணமோ யிந்தப் பாலர் களைக் கட்டிவைத்து யிருக்குதென்று நாங்குதிசையும் சுத்திப் பார்த்து ஒருவரையுங் காணாத படியினாலே யீஷ்பரர் கர்த்தா வானவர் பால் மோர் விற்க வந்த இடத்தில் பிள்ளைப் பாக்கியம் கொடுத்தாரென்று அதிகச் சந்தோஷத்துடனே ஓடிப்போய் யிரண்டு குழந்தைகளையும் கட்டவிழ்த்து விட்டு வாரியெடுத்து மார்போடணைத்துக் கொண்டாள் என்றவாறு.

## 142

### தருவு

யிடச்சி வந்தாளே - செங்கமல
யிடச்சி வந்தாளே.

யிடச்சி வந்தாள் குடத்தி லேதயிர்
யெடுத்த மைந்தர்க்குக் கொடுத்து வளர்க்க (யிடச்சி)

ஊர்கள்தோறும் பால்கள் தயிர்கள்
மோர்கள் தலையில் ஏத்தியே (யிடச்சி)

## 143

### விருத்தம்

செங்கமல இடச்சிகண்டு பாலர் தன்னை
திருக்கரத்தில் எடுத்தணைத்துத் தேம்பித் தேம்பி
அங்கமெல்லாங் குளுந்துகொஞ்சி முத்தமிட்டு
அப்பனே கண்மணியே யறைந்த தங்கமே
யென்கவலை தீர்க்கவந்த பாலா என்று
யேந்திழையும் யிருகையிலே யெடுத்தணைத்து
கொங்கையின் மீதணைத்துப் பெத்த தாய்போல்
கோதையரும் தன்பதியில் கொண்டு வந்தாள்

—பின்னும்

மன்னவன்குழந்தை செல்வன்வளர்ந்தான் யிடசசி வீட்டில்
கன்னயமாகக் கல்விகருத்துடன் ஆறு சாஸ்திரம்
வின்னமில்லாத நாலுவேதமும் கற்றிருந்து
சொர்னவிக்கிரகம் போலேபாலர் சொகுசுடன்
வளர்கின்றாரே.

### வசனம்

இந்தப்படி பூருவச் சக்கிரவர்த்தி மகாராசன் யிடச்சேரி யிலேயிருந்து பகல் காலங்களிளெல்லாம் குட்டிமேய்த்துத் திரேகம் மெலிந்து காலச்சேபஞ் செய்து கொண்டு வருகுறார் என்றவாறு.

## 144

### விருத்தம்

மண்டமெல் லாம்புகழக் கீர்த்தி கொண்ட
மகராசன் படுத்திருகண் வளரும் போது
அண்டமெல்லாம் நடுநடுங்கப் பிடித்து ஆட்டும்
அருணன்மகன் இதுசமைய மாச்சு தென்று
தெண்டுமுண்டாய்ச் சொர்ப்பனத்தில் பயத்தைக்காட்டி
செவியோரம் வந்து மெள்ளச் சிலுகு முட்டி
பண்டுவிதி முறைப்படியோ பல்லி போல
பலபலெனக் கெடுசகுணம் பகர்ந்திட் டாரே.

## 145

### தருவு

—புலம்பல்—

உறக்கம் விட்டு முழித்து
உளறி அலறிக் கொண்டு
உள்ளிவிதி தானய்யோ சிவனே

பரக்க முழிக்க எந்தன்
பரதேசிக் கோலத்தை
பார்க்கப் படாதோ சனிபகவானே

அறக்கொடுமை பண்ணாதே
பொறுக்க யென்னால் ஒண்ணாதே
அகதிக்குத் துணையார் சொல்லய்யாவே

மறக்கமனம் இல்லாத
மகனைப் பிரிந்துகுலை
பறக்கவிட்டாயோ சனிபகவானே

மூந்திச்செய் காலமோ
இந்தவிதிக் கோலமாய்
முடிந்ததுவோ சனிபகவானே

அந்தக்கார ணந்தானோ
எந்தப்படியோ காணேன்
அருணன் மகனே சனிபகவானே

வந்திடும் ஆபத்தெல்லாம்
வரவரக் கண்டறிவோம்
வறுமம் செய்யாதே சனிபகவானே

## 146

### விருத்தம்

வருகுறியைப் பல்லிசொல்லக் கண்டு மன்னன்
வந்ததெல்லாம் வரட்டுமென்று மனத்தைத் தேற்றி
பெருங்கவலை யின்னமென்ன பாடு தானோ
பேரிழந்தோம் ஊரிழந்தோம் பித்த னானோம்

தரும்பலனைக் கண்டிடையர்க் கடிமை யானோம்
சண்டாளன் நீசரைப்போல் தனித்த பின்பு
முறையில்லாத் தாழ்வுவந்து முடிந்து திப்போ
முன்விதிதான் என்றுராசன் முறைத்திட் டாரே

வசனம்

இந்தப்படி சனியீஷ்பர பகவானானவர் செயசேகர மகா ராசாவினுடைய தேவி திபித வள்ளியுடைய ஆபரணப் பொட்டியை மாயா வினோதமாய்க் கொண்டுவந்து யீச்சங் கந்தையின் பேரிலே சயனங் கொண்டிருக்கிற பூருவச்சக்கிர வர்த்தி மகாராசனுடைய தலைமாட்டிலே வைத்துப்போட்டு சனியீஷ்பர பகவானானவர் மாய்கையாய்ப் பறந்து போய் விட்டார்கள் என்றவாறு

## 147

### விருத்தம்

திபித வள்ளி மாதுகெங்காஷ் தானம் பண்ணி
சிறந்தணிந்த நகைவகையைத் தேடும் போது
யெவ்விதமோ பொட்டிதனைக் காணா தாலே
யேந்திழையும் வந்தரச னிடத்தில் சொல்ல
புவியரசன் இதுவுமொரு கோல மென்று
பொங்கமுடன் தலையாரி மாரைக் கூட்டி
அதிகவிர சுடன்வருக வென்ற போது
அச்சிணத்தில் தலையாரி மார்வந் தாரே.

## 148

### தருவு

—தின தினா தினா -

தடையில் லாமல் துடியும் கொடிய
தலையா ரிகளும் தோன்றினார்

இடையில் வரிந்த கருங்கச் சைகள்
இறுக்கியே மீசை முறுக்கியே
எங்கும் நடுங்கக் கண்கள் சிவந்து
யெக்கோலமும் பெருகியே

தடைய நம்ம கெவுட தேச
தனினான் இவ்வரை களவுமில்லை
நடந்த காரணம் பிரக்க நம்மனை
கடந்து வந்தவர் நாடினார்
செம்மை யுடனே நாம விருக்க
திருடன் வருவ தேதடா
திருடனைக் கண்டு பிடிக்க நமக்குத்
திறமில் லையோ வென்றுமே.

வசனம்.

அகோ சரணஞ் சரணமைய்யா சுவாமி அடியேனை அழைத்த காரியம் யின்னமெதன்று திருவுளம்பற்ற வேணுமையா சுவாமி.

ஆனால் வாரும்பிள்ளாய் தலையாரி மார்களே ஒரு காலங் களிலும்' இல்லாத களவுயிப்போது அனீதமாக நம்முடைய அரண்மனையிலே ஆபரணப் பொட்டி களவு போயிருக்குது. அந்தக் கள்ளனைக் கொண்டுவந்தா லாச்சுது. யில்லா விட்டால் உங்களைச் சித்திரவதை செய்து போடுவேன் பிள்ளாய் தலையாரிமார்களே.

## 149

விருத்தம்

விந்தையுடன் தலையாரி மார்கள் போயி
வேகமொடு வீதியெங்கும் விரைந்து தேடி
பந்தமதைக் கொளுத்தியிரு கையால் வாங்கி
பகல்போல இருளகத்திப் பார்க்கும் போது
வந்தகள்ளன் தடம்போல யிரவி மைந்தன்
மாறாட்டம் பண்ணிவைத்த மாய்கை கண்டு
சந்தேக மறிந்துஅந்தத் தடத்தைப் பற்றி
தலையாரி மார்களங்கே சடஞ்சென் றாரே.

— பின்னும் —

சென்றவர்கள் தடத்துவழி யேது டர்ந்து
சிற்றிடையர் குடிலருகே செல்லும் போது

ஆண்டியதோர் பொட்டிதலை மாட்டில் வைத்து
ஆண்டவனுங் கண்ணுறங்கி அயருங் காலை
கண்டுதலை யாரிகளும் மூக்கு மேலே
கையைவைத்து யிவன்கெட்டிக் காரன் என்று
நின்றுநின்று மலைத்தவர்கள் கூடிக் கூடி
நேசிப்பார் பலவிதமாய் யோசிப் பாரே.

## 150

### தருவு

என்னதுணி கரம் பார்த்தீர் அண்ணமாரே
இவனுட தலைக்குங்கீழ் பொட்டியைப்பாரே
மன்னவன்வீட்டில் அவன் வந்து களவுசெய்தானே
வண்டனைக் கட்டியடி யென்றவன் சொன்னானே
தட்டி யெழுப்பிநீ யாரடாசொல் லென்றதட்டினார்— அந்தச்
சத்தத்திலே அய்யன்மெத்தப் பயந்துவாய் கிட்டினான்
பாசக்கயர் கொண்டு முட்டுடனே கட்டியிறுக்கினார்—அடா
பாதகனே என்றுமோதியே குத்திநொறுக்கினார்
பொட்டியைத்தூக்கி யவன்தலைமேலே வைத்துக்கட்டினார்
—கொண்டு
போவென்று சன்னத்தில்கண்ணீர் விழும்படி தட்டினார்.

அய்யனே கரிய மேனி
அரிகரி நீல வர்ணா
மெய்யனே யெனக்கு அந்த
விருமசண் டாள தேவர்
கையினா லிந்த வேசம்
கபடமா யெழுதி னாரோ
தெய்வமே களவு செய்த
திருடனுக் கிரங்கு வாயே.

### வசனம்

இந்தப்படி தலையாரிமார்கள் பூர்வச்சக்கிரவர்த்தி மகாராசனைக் கள்ளனென்று பிடித்துக் கட்டி அடியென்றும் பிடியென்று மிகுந்த தொந்தரவுகள் செய்யும்போது சரீர

வேதினை பொறுக்கமாட்டாமல் கணங்களெல்லாம் கலங்கி நீர் வடித்துப் புலப்புகிற விதம் யெப்படி யென்றால்

## 151

### தருவு

யிப்படி யென்தலை விதியோ—சனி
யீஷ்பரன் செய்திடும் சதியோ
மூப்பழி யோர்செய்த பாவம்—வந்து
மூண்டது வோயிந்தச் சாபம்

தப்பித மேசெய்த துண்டோ—யெந்தன்
சத்திய வாசகம் றெண்டோ
கற்பில் அருந்ததி யாளே—யிந்தக்
காட்டில் எனைப்பிரிந் தாளே

அப்பணி செஞ்சடை யாளே — மைந்தர்
ஆசையைக் கைமறந் தேனே — இப்படி
சந்திர சேகரன் பெண்ணே — உயிர்
தாங்குமோ சொல்லடி கண்ணே

வந்திடு மோஇந்தச் சூது — யென்ன
வஞ்சக மோதெரி யாது
எந்த விதங்கூறு வேனோ
எப்படி மனந்தேறு வேனோ

அந்திர மாகவிட் டென்னை
பரந்தயச மோகக் கண்ணே
யிந்த அயன்விதித் தானோ
யென்செய்வேன் சங்க ரானே.

### வசனம்

யிந்தப்படி பூர்வச்சக்கிரவர்த்தி மகாராசன் சித்தி புத்தி அறிவாகரம் யெல்லாம் விட்டு நீங்காத் துயரத்தோடுங்கூடிப் புலம்புகுற விதம் யெப்படியென்றால்;

## 152

### தருவு

அய்யோ நான் என்னசெய்வேன் அண்ணமாரேயென்னை
அடிக்காதே மெள்ளயிப்போ நடந்துவாறேன்
பொய்யிந்தப் புலையாட்டடா அண்ணமாரே
பொட்டியைக்கட்டி யடிக்கிறீர் அண்ணமாரே

கையினாலுந் தொடவில்லையே அண்ணமாரே — யிப்ப
கள்ளனென் றடிக்கிறீர்கள் தம்பிமாரே
மெய்நடுங்கி மனம்பதர அண்ணமாரே — சோபம்
வெடுவெடென் று வருகுதைய்யோ தம்பிமாரே

தண்ணியாகி லுங்குடுங்கள் அண்ணமாரே — தகை
தீர்ந்து தெளிந்துவாரேன் அண்ணமாரே
கண்ணுஞ் சுழருதடா அண்ணமாரே — மெத்த
களையா வருகுதடா அண்ணமாரே

என்னசெய்வேன் யேதுசெய்வேன் அண்ணமாரே
எந்தன்விதி இப்படியோ அண்ணமாரே.

## 153

### விருத்தம்

சந்திரசே கரன் ஈன்ற பசுங் கிள்ளை
தையலையு நடுவழியில் தவிர விட்டு
மைந்தரையும் யென்னையும்வே றாக்கி வைத்து
வங்குலைசேர் திருடனென் று மான மும்போய்
விந்தையுள்ள கெவுடந்தணர் வீதி தோறும்
வெகுசனங்கள் வந்துவே டிக்கை பார்க்க
அந்திரமாய் எழுதிவிட்டார் விரம தேவன்
அபையமுனக் கபயமென் று அசைந்திட்டாரே.

### வசனம்

யிந்த விதமாகப் பூர்வசக்கரவர்த்தி மகாராசனை தலையாரிமார்கள் கட்டிப் பிடித்து கொண்டு போய் செயசேகரன் மகாராசனிடத்தில் விட்டார்கள் என்றவாறு

அகோ வாருங்களய்யா சுவாமி ராத்திரி முப்பது நாழிகை யும் கையிலே தீவிட்டி பிடித்துக்கொண்டு வீதிகள் தோறும் பார்க்குற போது யீசானி மூலையிலே ஒரு சிற்றடித்தடம் போச்சுது அந்தத் தடத்தைப் பற்றிப் போற போது அங்கே ஒரு இடைக்கோனார் ஆட்டுத் தொழுவினோரத்தில் ஈச்சங்கந்தை விரித்து யிந்த ஆபரணப் பொட்டியைத் தலைக்கீழே வைத்து தலையைப் பொட்டி மேலே வைத்துச் சற்றும் பயமில்லாமல் உறங்கினான். நாங்கள் தட்டியெழுப்பிக் கட்டிக் கொண்டு வந்தோமையா சுவாமி.

ஆனால் வாரும் பிள்ளாய் சள்ளனே அந்தப் பொட்டியைக் கீழே யிறக்கி வையும் பிள்ளாய்.

(அந்தப் பொட்டியை இறக்கி வைத்த பின்பு அவனுடைய முகக் குறியைப் பார்த்து செயசேகர மகாராசன் சொல்லுகுற விதம் யெப்படியென்றால்)

## 154

### விருத்தம்

சிகத்தினி லேஅனே கம்பேர்
திருடனைக் கண்ணால் கண்டோம்
முகக்குறி இவனைப் பார்த்தால்
முக்காலுந் திருடன் அல்ல
சுகக்குறி இருக்கு திந்த
சுந்தரன் வடிவைக் கண்டு
வகுத்திவன் கள்ள னென்றே
வாயினால் சொல்லொண் ணாதே

—பின்னும்

அந்த மொழி தனையறிந்து—கெவுட தேசம்
அரசனும் செய சேகரனும் அன்பு கூர்ந்து
வந்ததொரு திருடன்முகந் தன்னை நோக்கி
வாருமென்றே கிட்டவர வழைத்து அப்பால்
அந்தமுள்ள தம்பி சொல்லும் பயமில் லாமல்
ஆப்ரணப் பொட்டிகள வாண்ட தென்ன

வந்தவகை யுள்ளதைச்சொல் லென்று கேள்க்க
மன்னவனும் மனம்பதறி மயங்கு வானே.

**வசனம்**

ஆனால் வாரும் பிள்ளாய் நம்முடைய அரண்மனையிலே ஆபரணப் பொட்டியைத் திருடிப்போன கள்ளனென்று கையும் களவுமாய் பொட்டியையும் தலைமேல் வைத்துக் கட்டிக்கொண்டு வந்தார்களல்லவா! நீ நடந்த சமாச்சாரத்தை உள்ள படியே சொல்லும் பிள்ளாய்.

## 155

**தருவு**

என்னென்று சொல்லுவேன் தான்—உமதிடம்
ஏதென்று சொல்லுவேன் நான்.

மன்னவ னேயுந்தன்
மாநகர் தன்னிலே
கன்ன மிட் டுவந்த
கள்ளனைக் கேட்டாக்கால் (என்னென்று)

தூ தாக வந்து
துடர்ந்த சனியனை
சொல்லவோ யென்னாலே
வெல்லவோ அய்யனே
மா தாக வந்து
திருடத் துணிந்ததை
வஞ்சக மாயிடி
வந்து விழுந்ததை (என்னென்று)

கையுங் களவுமாகக்
கண்டு பிடித்தென்னை
கட்டிப் பிடித்துக்
கொண்டு வந் ததும்பின்னே
செய் யும் வகையும்
திருட்னுக் கொப்பந்தம்
தெண்டித்து என்னுயிர்
கண்டிப்ப தேநயம் (என்னென்று)

பொய்யென்று நான் சொல்ல
மெய்யா யிருக்குது
பொட்டியு மென்னிட
சாச்சியா யிருக்குது
மய்ய நிலையாகத்
தெய்வ மிருக்குது
மன்னவ னென்ன
சொல்ல யிருக்குது (என்னென்று)

## 156

### விருத்தம்

மட்டில்லாக் கீர்த்தி கொண்ட
மன்னவா சொல்லக் கேளாய்
பொட்டியைத் திருட வந்த
புலையனான் கள்ள னய்யா
அட்டிசெய் யாம லென்னை
அய்யனே உமது வாளால்
வெட்டியே எறிவா யென்று
வேந்தனும் உரைசெய் தானே.

### வசனம்

ஆனால் வாருமய்யா ராசாவே உம்முடைய பட்டணத்துலே வந்து சற்றும் பயமில்லாமல் ஆபரணப் பொட்டியைத் திருடிக் கொண்டுபோய் யென்னுடைய தலைமாட்டிலே வைத்து நான் படுத்திருக்க தலையாரிமார்களும் தடத்து வழியே கையுங் களவு மாய்யபிடித்துக் கட்டிக்கொண்டு வந்திருக்க நான் சொல்ல வேண்டிய தேது? உம்முடைய மந்திரவாளுக்கு யிரை யிடும் பிள்ளாய் ராசேந்திரா.

## 157

### விருத்தம்

மன்னவனும் திருடனுரை தன்னைக் கேட்டு
மதிமயங்கிச் சொல்வதற்கு வாயில் லாமல்
யென்ன விதிக் கோலமிதோ வந்து சூது
யெப்படியோ யீஷ்பரன்சங் கல்பு மென்று

விண்ணமில்லாப் பெரியோரே சபையுள் ளோரே
வேதியரே சாஸ்திரத்தை விபர மாக
நண்ணையமாய்ப் பார்த்துவிதி முறையைக் கண்டு
நயமதாய் உள்ளபடி நடத்து வீரே.

வசனம்

ஆனால் வாருங்கள் சபையோரே. யிவன் முகக்குறியைப் பார்க்கும்போது திருடன் போலே காணவில்லை. தலையாரிகள் கையுங் களவுமாய்க் கொண்டு வந்ததற்குச் சந்தேகமில்லை. யிது திருவுளச்செயல் யிப்பவும் நீங்களும் தர்மதேவதைக்குப் பொதுவாய் தர்மசாஸ்திரத்திலே உள்ளபடி நடப்பி வையும் பின்னாய்.

## 159

விருத்தம்

தர்மசாஸ் திரங்கள் ஆய்ந்து
சபையுள்ள பெரியோ ரெல்லாம்
நன்மையாய் லக்க னத்தை
நலன்நீதி நெறியி னோடும்
செம்மையாய் உணர்ந்து பார்த்து
செப்புவார் திருட னிந்த
கர்மியைக் கொடுபோய் ஒற்றைக்
காலுங்கை வாங்கு மென்றார்.

வசனம்

ஆனால் வாரும்பிள்ளாய் தலையாரிமார்களே. யிந்தத் திருடனைக் சொண்டுபோல் குலைக்காரன் வசம் ஒப்பிவைத்து மாறுகாலும் மாறுகையும் வாங்கிப் போடும் பிள்ளாய்.

## 160

விருத்தம்

அங்கவர் மனது ரைத்து
அரசனுத் தாரஞ் சொல்ல
பொங்கியே மனங்கொ' தித்துப்
புகழ்தலை யாரி மார்கள்

சிங்கம் போல் பாய்ந்து கள்ளத்
திருடனைப் பிடித்துக் கட்டி
பங்கமாய்க் குலைகள் செய்யும்
பளியர்கை வசஞ்செய் தாரே

—பின்னும்

துலக்கமாய்ப் பெற்ற தாயை
துணிந்திடக் குலைக்கஞ் சாத
கலக்கமாய்ப் பழிகள் செய்யும்
காட்டானை போலே வந்து
பெலக்கவே சத்தம் போட்டுப்
பெருங்கொள்ளிக் கவந்தம் போலே
குலைக்களந் தனிலே துஷ்ட
குலைஞருந் தோன்றி னாரே.

## 161

### தருவு

குலைக்களம் விட்டுப் பழிக்கஞ் சாத
குலைகாரர் வந்து தோன்றினாரே.

கலக்க மாகவே மிரட்டி முளித்து
கரும்பி சாசைப் போலவே
பெலக்க வாய்விட் டலறிச் சபையில்
உலக்கைத் தடியுங் கையுமாய் (குலைக்களம்)

மேகம் போலே கருத்த நிறமும்
வெளிறிச் சிவந்த கண்களும்
விரித்த சுடலைக் கணங்கள் போலே
துரத்தி யகங்கள முறுக்கியே (குலைக்களம்)

கையில் பிடித்த கயறும் கத்தியும்
காலச் சனியன் போலவே
கண்ட மனிதர் பயந்து வெகுவாய்ச்
சண்ட மாருதம் போலவே (குலைக்களம்)

### வசனம்

அகோ சரணஞ் சரணமைய்யா சுவாமி. அடியேனை அழைப்பித்த காரியம் யின்னதென்று திருவுளம்பற்ற வேணுமைய்யா சுவாமி.

## 162

### விருத்தம்

குலையெனுக் கஞ்சி டாத
கொடியபா தகரே கேளீர்
விலை பெற்ற பொருளை யெல்லாம்
வேண்டியே திருடிக் கொண்டு
தலையிலே எடுத்துப் போன
தந்திரக் கள்ளன் தன்னை
மலையாலே ஒற்றைக் கால்கை
மாறுகால் வாங்கு மென்றே—பின்னும்
வெண்பழிக் கஞ்சி டாத
வீரமாய்ப் பஞர் வந்து
கண்முளி பிதுங்கச் சேர்த்துக்
கட்டியே பிடித்துக் கொண்டு
பின்னுமுன் தள்ளி விட்டுப்
பேயடித் ததுபோல் குத்தி
பண்பினா லுயர்ந்த மன்னன்
பதறியே புலம்பு வானே.

## 163

### தருவு

ஆதியி லென்னை அமைத்தசதாசிவ தெய்வமே—யெனக்
கந்திர மாயிடி வந்துதே என் செய்வேன்—தெய்வமே
சாதிவரு ணாசலச் சங்கையும் போச்சுதே—யீஷ்பரா—இந்த
சண்டாள நீசர்கைக் கொண்டாரே யென்னையும்
தெய்வமே
மன்னவன் நானுஞ் செயசேகர நாட்டிலே யீஷ்பரா—வந்து
மாறுகா லுங்கையும் வாங்கல பித்துதே தெய்வமே
சொன்ன சபதம் முடிந்துதை யோசனி யீஷ்பரா—செய்யுந்
தொந்தர வுகண்டு பாத்திரங் காய்சனி யீஷ்பரா
பஞ்சப் பிராணம் கலங்கி யுதறுதே தெய்வமே—ஒரு
பாவமும் நானறி யேன்பரா பரா ஈஷ்பரா

அஞ்சாத வன்குலை யாளரைப் பார்க்கையில் தெய்வமே
—யென்
அங்கம் நடுங்கிப் பதறுதே யென்விதி யீஷ்பரா
பெஞ்சாதி பிள்ளை முகத்தில் முழியாமல் தெய்வமே—யென்
பிராண அழிவு வந்து முடிந்துதோ யீஷ்பரா
எண்சா ணுடம்பெங்கும் பஞ்சாக னோகுதே தெய்வமே
யெனக்
கிப்படி யோஅயன் கற்பினை மூண்டுது யீஷ்பரா

## 164

### விருத்தம்

யிப்படிப் புலம்பி மன்னன்
யேங்கியே கலங்கி வாடி
அற்புத மடவார் சூழ
அணிநகர் வீதி தோறும்
கொப்பெனச் சத்தம் போட்டுக்
குறிப்புடன் அழுகும் போது
மற்பொரு மாதர் கண்டு
மயங்கியே புலம்பு வாரே.

## 165

### தருவு

இந்தமன்னனைக் கள்ளனென்று
சொல்வாரோ—தலையில்
எழுதின விதிப்பயனை இன்று
வெல்வாரோ
அந்த மனம் தானிந்த
கள்ளனுக்குக் காணுமோ—இந்த
அம்புவியில் இவர்கள்
வந்த தென்னமோ
இந்திர தேவரோ
ராசனோ யெந்தத்
தேசத்து மன்னவரோ

கைவளை கழன் று காதலாகுதே—காமனோ
வைகுன்ற மேவு ராமனோயிவர்—இந்த
மையலாகுதே அய்யோமதி மயங்குதே
மால் மருகனோ—இவர்
வேல் முருகனோ.

வசனம்

இந்தப்படி பூர்வச்சக்கிரவர்த்தி மகாராசனைக் கட்டிப் பிடித்துக் குலைக்களத்துக்குக் கொண்டு போகுற போது செய சேகர மகா ராசாவாகிய மகள் புஷ்ப்ப ரஞ்சினியானவள் மதிளெட்டிப் பார்த்துச் சொல்லுகுற விதம் யெப்படியென்றால்.

## 166

விருத்தம்

அதிகாரன் முடிவுனா லேஅவ் வூரு
ராசன் மகள் புஷ்பரஞ் சினிப் பெண்ணாள்
கோதுபடா மன்னன்முகச் குறியைக் கண்டு
கோகிலம்போல் அலறிவீழ்ந்து குலைந்து வாடி
மேதினியில் இப்படியும் புருஷாள் தன்னை
மேவாத பெண்களென்ன விர்ம தேவா
சூதுவிதி யாய்விதித்தான் அய்யோ யிந்தச்
சுந்திரனைக் கள்ளனென்றுஞ் சொல்லு வாரோ.

வசனம்

இந்தப்படி செயசேகரன் மகளாகிய புஷ்ப்ப ரஞ்சினை புலம்பிக் கொண்டு தன் அரண்மனைக்குப் போய்ச் சென்றாள் என்றவாறு.

## 167

விருத்தம்

கட்டிப்பிடித் தேகுலைஞர் அரசன் தன்னைக்
காரணமாய்க் கெவுடுநகர் வீதி தோறும்
கொட்டியிழுத் தெல்லாரும் பரத விக்க
குலைபாதகர் கொண்டுசென்றார் கொடிய பாவி

விட்டியென வேதுடித்துத் துள்ளத் துள்ள
வேந்தனையும் பிடித்தமுக்கி வீர வாளால்
மட்டில்லாத் துயரமொடு குலைக்களத்தில்
மாறுகால் மாறுகையும் வாங்கி னாரே.

## 168

### தருவு

இந்தவிதிக் கென்னசெய்வேன்
யேழைபங்கில் திருவுளமே
வந்துதவ வேணுமையா
மால்மருகா விர்மதேவா
விந்தைகிரி வளர்கின்ற ஈசா—என்
வேதனையைத் தீர்க்கொண்ணாதா கைலாசா
அந்தமதி சூடுகின்ற
அம்பலவர் கிருபை செய்வார்
யெந்தனுட வேதினையை
யெத்தியருள் செய்திடுவாய்
ஊரிழந்தேன் பேரிழந்தேன்
ஓங்குசிம்மா சனமிழந்தேன்
மாறிமொழி பேசிடாத
மந்திரியுந் தானிழந்தேன்
சிறுவயதில் மாலையிட்ட
தேன்மொழியை நானிழந்தேன்
அருமையாய் மைந்தர்களை
ஆத்தருகே தோத்துவிட்டேன்
காட்டிடையர்க் கடுமையாகி
கள்ளனென்று பேரும் பெற்றேன்
மூட்டுடனே மூட்டிருக்கி
முளிபிதுங்கச் சேர்த்துக்கட்டி
தாட்டிகமாய் வீதிதோறும்
தள்ளித்தள்ளி அடித்துக்கொண்டு
கோஷ்ட்டியாக என்னையிந்த
குலைக்களத்தில் கொண்டுசென்று
வாட்டியே யுருக்கும்போது
மதிகுலைந்த விதியைநொந்தேன்

ஆறுசெய்த தீவினையோ
அலறிடுள்ளம் பரதவிக்க
மாறுகாலும் மாறுகையும்
வாங்கினாரே பிரமதேவா.

வசனம்

யிந்தப்படி பூர்வச்சக்கிரவர்த்தியைக் குலைக்களத்திலே கொண்டுபோய் கையும் காலும் சதிர வேதனை செய்யும்போது ஆதிபராபர வஷ்துவை இருதய கமலங்களிலே தியானஞ் செய்குற விதம் யெப்படியென்றால்

## 169

பத்தியம்

அரிகரி வாசுதேவா
நீலமேக சமளவர்ணா
அகிலாண்ட கோடி
விருமாண்ட நாயகா
அனந்தகோடி சூரியப்பிரகாசா
சங்குசக்கராயுதா
சானகி மனோகரா
சருவலோக தயாபரா
நமோ நாராயண சுவாமி.

## 170

தருவு

யீஷ்பராயிந்தக் கெதிகிடைத்ததோ
குலைக்களந்தன்னில்
இந்தவாதைப் படவிதியோ
விதித்தாய்மாயவா
மாசில்லாதொரு சுயம்பிரகாசமாய்
ஈஷ்பரா
அன்னைவயிற்றி லென்னைஅயன்
வகுத்தநேரமோ

நேசமுங்குறைந்து முடவன்போலானேனே
தெய்வமே அய்யோ
வேதினைக்கென்ன செய்வேன்சிவ
சங்கரா
கையும்காலும் இழக்கக் கர்த்தன் விதித்தானோ
மாயவா
வீணில்இழக்க விதியும்சூழ்ந்துதோ
மாயவா
மோசம்விளைந்த கபடமறியேன் நான்
சங்கரா
ராசமகுட முடியுமிழந்தேனே
மாயவா
சிகதரசகனாடு நகருபதியிழந்தேன்
சங்கரா
சந்திரசேகரன்ஈன்ற பூவைஎனக்கு வாய்த்த
தங்கமே
சிந்தைகலங்கி முகங்கள்வாடிப்
புண்ணாகியே
தேம்பித் தேம்பி சோம்பிவீழ்ந்திட்டார்
மன்னனும்

## 171

### விருத்தம்

திடமிழந்து குலைக்களத்தில் அறிவு சிந்தி
திருடனென்று பேரெடுத்தேன் சிவனே யென்று
கடகடென்று மண்மீதில் உருண்டு ராசன்
கண்ணீரும் பெருகிஓடக் கதறும் போது
அடவுடனே நல்லெண்ணை எலுமிச்சங் காயும்
அமுதுபல காரங்கொண் டவையாள் போலே
நடனதரி சனங்காட்டிச் சார தம்பாள்
ராசனிடம் வந்துநின்று நல்கு வாளே.

## 172

### தருவு

கிழவி வந்தாளே — சரஷ்பதிக்
கிழவி வந்தாளே.

கிழவியைப் போலுடல்
தொங்கு முலைகளும் (கிழவி)

அன்னை சரஷ்பதி
மன்னன் படுந்துயர்
ஆத்திவைக் கவந்து
தோன்றினாளே

தாயைப்போ லவெகு
நேயத்து டன்வந்து
சாந்தமாய் ராசனடுத்து
சாதங் கறிவகை
செம்பிலே தண்ணீரும்
தங்கத்தாம் பாளத்தில்
எடுத்துக் கொண்டு (கிழவி)

காயத்துக் கேற்ற
மருந்துகள் நல்லெண்ணை
காலுக்கு வேதுகள்
வேது பிடிக்கவே
காரண மாய்வெகு
பூரண மாகவே
காட்சியும் மோட்சங்கள்
கொடுக்கவே அன்னை (கிழவி)

## 173

### வெண்பா

வேதினையோ என்மகனே (சற்றே) மெய்யறிவு தோன்றிய பின்
மாது சரஷ்பதியை வாழ்த்தியே — ஆதரவாய்
வந்தென்னை ரச்சித்த மனோமணியே யுன்பேரூர்
யெந்தவகை யோசொல் லெனக்கு

### வசனம்

ஆனால் வாருமம்மா தாயே யிந்தக் குலைக்களத்திலே வெட்டுண்ட ஆருமற்ற பாவியிடத்துலே வந்தவகை யின்னதென்று திருவுளம்பற்ற வேண்டுமம்மா தாயே.

## 174

### விருத்தம்

அருமைசேர் எனது மைந்தா
அன்புடன் சொல்லக் கேளும்
பெருமைசேர் உலக மெல்லாம்
பெற்றவள் நான்தா னப்பா
கருமமுன் துயரந் தீர்க்கக்
காரண மாக வந்தேன்
தருமசாஷ் திரங்கள் ஓதும்
சரஷ்பதி யென்பே ரென்றாள்.

### வசனம்

ஆனால் வாருமப்பா மகனே. சகல கலைக்கியானமும் அறிந்து உணர்விக்கப்படாநின்ற நான் சரஷ்பதியாகும். உன் பரிதாபந் தீர்க்க வந்தேன். சற்றே வாய்திறவாய் மகனேயென்று மடியின்பேரிலே தூக்கிவைத்துக் கொண்டு சாதத்தைத் தன் கையிலே அள்ளி ஊட்டினாள் என்றவாறு.

## 175

### விருத்தம்

மன்னவனுக் கமுதூட்டிக் காய மாற்றி
மயக்கமெல்லாந் தீர்ந்தபின்பு மாது சென்றாள்
அன்னகரில் தர்மகுண சீல னான்
ஆனபர தேசிக்கா வலனு மங்கே
பன்னிரண்டு வருசமும் போய் ஒளிந்த கப்பல்
பதிதுறையில் வந்துதென்று பார்க்க வென்று
புண்ணியவான் தயவுகந்த செட்டி மன்னன்
புகழ்பெறவே வந்துநகர் புக்கி னானோ.

## 176

### தருவு

— ஆனந்தக் களிப்பு —

பரதேசிக் காவலனும் வந்தான் — தயவுகந்த
பரதேசிக் காவலனும் வந்தான்

நிறைசேருஞ் சத்தியத்தை
மறவாத புண்ணியவான்
துறைசேருங் கப்பல்கண்டு
ஒருகோடி ரற்றினங்கொண்டு (பரதேசி)

தர்மசற் குணசீலன்
சகலசம் ராச்சியபூமன்
கருணைகடாட்சியநாமன்
கனக்காபி நயசோமன் (பரதேசி)

## 177

### விருத்தம்

வந்தபர தேசிக்கா வலனு மங்கே
வஞ்சகமாய் நடந்தவர லாறுங் கேட்டு
யெந்தவகை ராசமனு நீதி தப்பி
யிப்படியே நடத்திவிட்ட தென்ன சூதோ
அந்தவகை நாமறியோம் விரம தேவா
அவரவர்க்கு அமைத்தபடி யல்லால் வேறே
தொந்தமுண்டோ நாமிருந்து நடந்த தல்லால்
சோதினையை யெவராலும் துடைக்கொண்ணாதே

### வசனம்

அந்நேரமே பரதேசிக் காவலன் செட்டியார் வந்து வந்த அலுப்பைப் பாராமல் பல்லாக்கு யேறிக்கொண்டு குலைக்களத்திலே போய் ராசனுடைய முகக்குறியைக் கண்டு யிவரெந்தத் தேசத்து ராசாவோவென்று மகாவிசாரத்துடனே அந்த ராசனைத் தூக்கிப் பல்லாக்கிலே வைத்துக் கொண்டு தன் அரண்மனையிலே வந்து சேர்ந்தார்கள் என்றவாறு.

## 178

### விருத்தம்

திருடனென வந்தமக ராசன் தன்னைச்
செட்டிப்பர தேசிக்கா வலனுந் தேற்றி

யிரவுபக லுபசரித்து வணங்கிப் போற்றி
யின்பமொடு சயனமதுக் கிசைவாய் மெத்தை,
பரதலகா ணியும்வெகு அழகாய் வைத்து
பள்ளிகொள்ளு மெனவசியன் பணிந்து போற்றி
உறவுபிரி யாதவங்கண மதாக வென்று
உகந்திட்டார் புகழ்ந்துமனம் கிளந்திட் டாரே

### வசனம்

யிந்த விதமாகப் பூர்வச்சக்கிரவர்த்தி மகாராசனை பரதேசிக் காவலன் அரமணையிலே போய்ச் சேர்த்தான் என்றவாறு.

## 179

### உம்பரச மாமுனி வருகுற

### விருத்தம்

கொம்புசுழி மேன்மேலும் வாசி வீட்டில்
குறிகமசி வாயமெனக் குறித்து ஞானம்
பண்புடனே சிவதவங்கள் செய்யும் மூர்த்தி
பரவெளியில் கெவுணமொடு பார்க்கும் போது
அம்புதரும் செகதரசற் நகரில் வந்த
அபகேடு சனியனால் என் றறிந்து கொண்டு
உம்பரச மாமுனிவன் கண்ணை மூடி
யோகசா தனைவிளங்கி யுணர்கின் றானே.

### வசனம்

யிந்தப்படி உம்பரச மாமுனிவரானவர் கெவுண மார்க்கமாய்ப் பரந்து சிகதரசகபுரம் மய்யமாய்ப் வருகுறபோது பட்டண மெல்லாம் மனுஷ சஞ்சாரமில்லாமல் குடிவாங்கிப்போனது கண்டு யிதுவுஞ் சனியன் செய்த சூதென்று யிந்த மகராசனுக்கு இப்படி ஆபத்து வரலாமோ என்று யிவர்கள் துன்பத்தை மாற்றி வைக்கவேணும் சுரபி சுரதாபி யென்று பாலர்களிருக்கின்ற சித்தூர்ப் பட்டணத்துக்கு வருகுறவிதம் எப்படி யென்றால்

## 180

### தருவு

சிரித்தான்முக் கண்ணன்போல
சிவந்த சடைகள் ஆட
உரித்தபிலித் தோலும்போற்றி
உம்பரச முனிதோன்றினார்
கையில் கமண்டலமும்
கவிந்தமாத் திரைக்கோலும்
மெய்யிலேமுப் புரிநூலும்
விந்தையாய் முனிதோன்றினார்
காலிலே பாதக்குறடும்
கவசகுண் டலமாட
மார்பிலேஉத் திராட்சம்பூண்ட
மாமுனி யும்தோன்றினார்

### வசனம்

சித்தூரிலே செங்கமலம் யென்கிற யிடச்சி வீட்டிலே வளர்கிற சுரபி சுரதாபி யென்குற ராசகுமாரர்கள் முனியீஷ் பாராளைக் கண்டு தெரிசனஞ் செய்குறவிதம் எப்படி யென்றால்

## 181

### தருவு

முனிநாதா சரணம் — வேதாந்த
முனிநாதா சரணம்
கனியே சதுர்மறை
முனியே எமதிடம்
தனியே உரைசெய்வீர்
மனமே உகந்துநீ (முனிநாதா)

பதமே அருள்செய
மதமே கருணைபெற
புதமே தெரிசிக்க
நிதமே கிருபைசெய (முனிநாதா)

அனையே சரணமென்
றுனையே தினந்தொழ
முனையே வித்தகற்
பினையோ அரகரா (முனிநாதா)

## 182

### விருத்தம்

சித்தூரில் நகரில் வாழும் சிறந்த மங்கை
செங்கமல இடச்சிதன்பால் சென்ற மைந்தர்
கர்த்தரென்று உம்பரச முனிவர் தம்மை
கண்டுதொழு தடிபணிந்து கதறிப் போற்றி
(சுத்த) சுந்தர சமையமெனச் சிறந்த சோதி
சுவாமியுங்கள் திருவடியைப் பணிந்து கொண்டோம்
சித்தமெங்கள் பாக்கியமென சரணஞ் செய்து
தெரிசித்தார் உபதேசம் அறிவித் தாரே

### வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி முனிநாதரே. ஆனால் தேவரீர் அடியேங்கள் இடமாக யெழுந்தருளி வந்த காரணம் யின்ன விதமென்று திருவுளம்பற்ற வேணுமையா சுவாமி

ஆனால் வாரும் பிள்ளாய் பாலகர்களே நாம் அந்தரத் தியானமாய் கெவுண சாதகம் செய்துகொண்டு வருகுறபோது யிந்தச் சித்தூர் நகரத்துலே உங்களைக் கண்டோம். நீங்களும் விபேகமுள்ள பாலகர்களானபடியாலே உங்களிடம் வந்தோம் பிள்ளாய் பாலகர்களே.

## 183

### விருத்தம்

புவனமீ ரேழு மொன்றாய்
புகழ்தொறும் நொடியில் சுற்றி
கெவுணசா தகமே செய்யும்
கெருவித முனியே கேளாய்

நவரச மிகவே தந்த
நல்மொழி வசன மாக
தவமருள் கிருபை செய்வீர்
சரணமென் றடியில் வீழ்ந்தார்.

வசனம்

சுரபி சுரதாபி யென்கிற ராச குமாரர்களுக்கு உம்பரச மகாமுனிவர் உபதேசஞ் செய்து விபூதி பஞ்சாச்சரமுங் கொடுத்து அருளிச்செய்தார் என்றவாறு

## 184

விருத்தம்

வேதமா முனியே அய்யா
விரிசடை முடியு னங்கி
பாதமே துணையென் றெண்ணிப்
பாலரும் பணிந்து சொல்வார்
ஆதர வாக இப்போ
அடியரைக் காத்து நீங்கள்
பூதல மீதில் வாகை
புனிதமாய் அருள்செய் வாயே.

வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி முனிநாதரே சகல லோகங் களிலேயும் தேவரீர் அறியாத காரணங்களில்லை. யிந்தலோகங் களிலே விளங்கப்படா நின்ற ராசாக்களிலே புண்ணிய புருஷா ளுடைய சரித்திரங்களை ரகசியப் பொருளாக யெங்களுக்குக் கதைப் பிரசங்கமாகச் சொல்ல வேணுமையா சுவாமி.

அப்படியே சொல்லுகுறேன் கேளுங்கள் பாலர்களே.

## 185

தருவு

கேளுங்கள் பாலர்களே—கதைசொல்லக்
கேளுங்கள் பாலர்களே.

ளும் புவியர சாளுந் தயாபர
நீதி யழிந்திடும் சேதியை நான்சொல்ல (கேளுங்கள்)

காசினி யன்பத்தி யாறுல கேழுக்கும்
கர்த்தன்பூர்வச் சக்கிர வர்த்தியென்றாசன்
செம்மச் சனியன் துயர்ந்து நடுங்கவே
திகைத்துப் பிடித்து விடுங்கறபி னைக்கதை (கேளுங்கள்)

மாதுடன் மன்னரும் மன்னனுங் கூடியே
மாநக ரம்விட்டு கானகம் சென்றது
சூதுடன் வேதியன் கைக்குள் ளகப்பட்டு
தொந்தர ருமெத்த வந்து விளைந்ததை (கேளுங்கள்)

மைந்தரை அந்தணன் வந்து பிடிக்கவும்
மாய்மையாய்ச் சென்று வழிகளில் போடவும்
சிந்தை கலங்கியே ராசனும் தேவியும்
செல்வரைக் கண்டங்கே தேடிப் பிடித்ததை (கேளுங்கள்)

ஆனந்தன் என்றொரு மனிதனை அடைந்ததும்
அங்கவர் பின்சென் றவர்கள் பிழைத்ததும்
தானந்த மங்கையை மன்னன் இழந்ததும்
சந்ததி ரெண்டையும் தோளில் சுமந்ததை (கேளுங்கள்)

பஞ்சைகள் போலே வனத்தில் திரிந்ததும்
பாலர்க ளைமல்லாட் டத்தில் பிரிந்ததும்
அஞ்சாமல் வெள்ளத்தில் அய்யன் குதித்ததும்
ஆத்துலே போம்பொழு தங்கம் பதைத்ததை (கேளுங்கள்)

ஆட்டிடை யர்வந்து கூட்டி யெடுத்ததும்
ஆத்தி யவர்மனம் தேத்தி எடுத்ததும்
மூட்டிய காலில் சனியன் தொடுத்ததும்
மோசமாய்க் கள்ளனென் றாக்கினை பட்டதை (கேளுங்கள்)

## 186

### விருத்தம்

உண்மையுட னெங்களுக்குக் கதைப்பிர சங்கம்
ஓதிவைக்க மெய்யறிவை உகந்து கேட்டோம்

கண்வழியே அருவிவெள்ளம் வருவ தேனோ
காரணமோ யிந்தமனக் கவலை ஏதோ
தண்மையுள்ள மைந்தர்களே புண்ய வான்கள்
சரித்திரத்தை விரித்துரைத்த தன்மை யாகி
புண்ணியருங் கவலைகருங் கண்ணீர் சிந்தி
பொறிகலங்கி நெறிசிதறும் புகழுள் ளோர்க்கே

வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி, முனியீஷ்பரனே யிந்தக் கதைப் பிரசங்கம் நீங்கள் சொன்ன மாத்துரத்துலே யெங்களுக்கு உடம்பெல்லாம் .படபடத்து ரெண்டுகண் வழியே தண்ணீர் வரும்படியான காரணத்தைச் சொல்லவேணுமையா சுவாமி.

ஆனால் வாரும்பிள்ளாய் பாலர்களே. யிந்தப் பூமியின் கண்ணிலே யாராமொருவர் புண்ணியவான்களுடைய சரித்திரத்தை அன்பு வைத்துக் கேட்டார்களோ அவர்களுக்கு யிரண்டு கண் வழியே ஆனந்தக் கண்ணீரானது தாராளமாய் வரும். அதுவுமல்லாமல் யின்னங் கொஞ்ச நாளையிலே தெய்வீகம் விளங்கப் போகுது. அந்த ராசாவிடத்தில் நீங்களும் போய் சேவிக்கப் போறீர்கள். அப்போது நான் சொன்ன கதைப் பிரசங்கம் உங்களுக்கு நன்றாய்த் தெரிய வரும் பிள்ளாய் பாலர்களே.

விருத்தம்

மைந்தர்களுக்கு உப்பரசர் கதைப்பிர சங்கம்
வகுத்துரைத்து மெஞ்ஞானம் மகிழக் காட்டி
விந்தைதருஞ் சித்தூரு நகரம் விட்டு
வெதுவைசன் னாசியைப்போல் வேசங் கொண்டு
இந்துநுதல் தனக்கழகாய் வெண்ணீர் சாற்றி
ஏகபரி பூரணமாய் யிறைவன் போலே
வந்துஅந்த மன்றேவு தனிலே சென்று
வணிகரையுங் கண்டாரே வதிஷ்டர் பாரே.

வசனம்

அகோ வாரும் பிள்ளாய் பிராமணச் சன்னியாசியாரே நீங்கள் யெந்தத் தேசம் அடியேனிடத்தில் எழுந்தருளி வந்த காரணம் சொல்லுமைய்யா சுவாமி.

## 188

### விருத்தம்

காசிநதி அருணகிரி கும்ப கோணம்
கங்கையெனும் துங்கபத்திரி கருணை பெறும்
சேதுவெனும் தனுக்கோடி ராம லிங்கம்
செகநாதர் கோகரணம் திருப்பூ ராணி
ஓதுசிவ தலமகிமை கண்டு தீர
உகந்தாடி இங்கேவந்தோம் உம்மைக் கண்டோம்
நீதியுடன் நாமுரைத்தோம் செட்டி மன்னா
நிச்சயமென் றேமுனிவர் நிகழ்த்தி னாரே.

### வசனம்

ஆனல் வாரும் பிள்ளாய் செட்டிமன்ன நம்முடைய ஆச்சிரமத்துக்கு எழுந்தருளும் பிள்ளாய்.

ஆனல் வாருங்களய்யா சுவாமியிந்த றேவுதுறையிலே தேவரீர் பரமேஷ்பரனைப் போல வந்தீர்களல்லவா. நானும் பொட்டியை வைத்துக்கொண்டு பிரமைபிடித்தவர்களைப்போலே காத்துக் கொண்டிருக்கிறேன். யிந்தப் பிரகாரம் பிரமை நீங்கும்படியாய் ஒரு புண்ணியக் கதையைச் சொல்லுமையா சுவாமி.

ஆனால் வாரும்பின்ளாய் செட்டிமன்னா கதையைச் சொல்லுகிறேன் பிள்ளாய்.

## 189

### தருவு

மன்னர் புரங்களும் வணிகர் குலாதிபரே கேளாய் —இந்த
மண்டல மெங்கும் ஒருகுடைக் குள்நெடு நாளா
தென்னவர் போற்றும் சிகதர செகநகர் நாட்டில்—யோக
சிம்மாச னத்தில் இருந்து மகுடங்கள் சூட்டி
நன்னய மாக யிருந்தர சாட்சிகள் பெற்று
மகராசன் பூர்வச் சக்கிர வர்த்தியென் றெல்லோரும் வாழ்த்த
பொன்னுல காளும் தெய்வேந்திரன் போலவே வாழ்ந்தான்-பாவி
பொல்லாத காலச் சனியனும் வந்து சூழ்ந்தான்

நாடுநகரம் நவமணி மேடையும் போச்சே—மனம்
நஞ்சுண்ட கெண்டையைப் போலெ மயங்கவும் ஆச்சே
சோடி பிரியாத மந்திரி யைவிட்டுப் பிரிந்தான்—அந்தச்
சுந்திர னுமப்போ அந்திர மாய்க்கண்ணீர் சொரிந்தான்
காருண்ணிய மானவ னாந்திரத்தில் நடந்தாரே—அந்தக்
கன்னியும் மைந்தரும் பின்னுட னேதுடர்ந்தாரே
நீடுங் கயல்விழி மாதுடன் மன்னனுங் கூடி—மாயன்
நீலவர் ·ணன்செய்த கோலமென் றேமுகம் வாடி

மைந்தரை யாளுக்கொன்றாய்சுமந் தேகிச்சென் றாரே—வழி
மார்க்கந் தெரியாமல் மன்னன் திகைத்து நின்றாரே
அந்தணன் போலவே சூரியன் மைந்தன்வந் தானே—அந்த
அய்யனும் பிள்ளையைத் தரவென்று சொல்லத்தந் தானே
விந்தையாய்க் காட்டில் மறைந்துகொண் டேவழிகூட—நல்ல
மெல்லிநல் லாளுங் கணவனும் பின்துடர்ந் தோட
சந்தோச மாய்வெகு தூரங் கடந்துபறந் திட்டான் - அந்தச்
சந்ததி ரெண்டையும் கீழேவைத் தோடிமறைந் திட்டான்

சிந்தை கலங்கியே மைந்த ரிடம்வந்து சேர்ந்தார்—ஆதி
தெய்வமே யென்றுஞ் செங்கீரைத் தண்டுபோல் சோர்ந்தார்
அவ்வனத் திலொரு அந்தண னும்வந்து காத்தான்—அந்த
அன்னமெ னும்பது மாபதிப் பெண்ணையும் தோர்த்தான்
மைந்தரை ஆத்தில பிரிந்துவிட் டப்புறம் போனார்—ஆயர்
மாதவ னார்குலத் தோருக் கடிமையும் ஆனார்
மைந்தர்சித் துரி டச்சி கவலையைத் தீர்த்தார்—அந்த
மன்னனும் ஆட்டுக்கிடையிலே குட்டியை மேய்த்தார்
கர்த்தர் துரோகியென் றேஒரு கால்கையும் வாங்க—கயர்
கட்டுண்டு கள்ளனைப் போலே பரதவித்தேங்க
யித்தினை துன்பம்விளைந் ததுவும்சனியன் சூதே—யிந்த
யேழரை நாட்டான் தொடுத்ததி னாலிந்த வாதே.

வசனம்

ஆனால் வாரும்பிள்ளாய் செட்டிமன்னா இந்தச் சூரியன் குமாரனான சனியேசுவர பகவான் துயர்ந்த காலங்களிலே அரிஅர பிரமாதிகளையும் அதல விதல படுத்திப் போடுவான். இன்னஞ் சில நாளைக்குப் பிறகு தெய்வீகம் விளங்கப் போகுது.

அப்போது நீ போனால் உன் பிரமை தோஷந் தீரும் பிள்ளாய் செட்டி மன்னா நமது ஆச்சிரமத்துக்கு யெழுந்தருளும் பிள்ளாய் செட்டியாரே.

## 190

### விருத்தம்

வணிகருக்கும் மைந்தருக்கும் கதைப்பிர சங்கம்
மகத்துவத்தை விரித்துநன்றாய் வகையாய்ச் சொல்லி
சனகமதி லெழுந்திருந்து கவனங் கொண்டு
தடமுனியும் கெவுடநகர் தனிலே சென்றார்
மணிசிறந்த பரதேசிக் காவ லன்தான்
மலையருகே வரும்போது மகிமை யாக
அணிசிறந்த மன்னன்பூர்வச் சக்கிர வர்த்தி
அய்யனையுங் ககனமதாய் அருள்செய் வாரே.

### வசனம்

பரதேசிகாவலன் செட்டியானவன் உம்பரச மாமுனிவரைக் கண்டு அநேக உபசாரங்கள் செய்து ஆசனத்துலே இருந்து கொண்டு சொல்லுகுற விதம் எப்படியென்றால்,

## 191

### விருத்தம்

தாரணியில் யீரேழு லோக மெங்கும்
தண்மையுடன் வெகுகோடி தலங்கள் சுற்றி
பூரணமாய் ஆதிசிவன் போலே வந்தீர்
புரிதவழும் விரிசடையும் புலித்தோல் கொண்டு
காரணமாய் வந்தவகை சொல்லு மையா
கற்பினையாய் எங்களுக்குக் கருணை செய்து
பாருமென்னைக் காருமென்று சரணஞ் செய்து
பரதேசிக் காவலனும் பகர்ந்திட் டானே.

### வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி வேத மாமுனியே, இந்த லோகாதி லோகங்கள் எல்லாம் விளங்கப்படானின்ற காரண மகிமை நீங்கள் அறியாததல்லவே இப்போது என்னிடத்துலே

அண்டக்கலப் பொருளாக வந்திருக்குற ராசனுக்குக் கருமந்துலை கிறபடியாய் எனக்கு மெய்யறிவு தோன்றும் படியாயும் ஒரு புண்ணிய கதை சொல்லு மய்யா சுவாமி.

## 192

### தருவு

கேளும் பரதேசிகனே—தயவுகந்து
கேளும் பரதேசிகனே

நீளும் புவன மன்பத்தாறும்
புகழ்ந்திடவே
ஆளும் பூர்வச் சக்கிரவர்த்தி
அயன்கதையை (கேளும்)

வாசனை துளப மணியீசனைத்
தினம்பணியும்
தாசனை ஏழரை நாட்டுச்சனியன்
பிடித்தகதை (கேளும்)

சத்தியந் தவற லாச்சு
வெத்திசேர்செங் கோலும் போச்சு
பத்தியாய் மனைவி தீச்சு
பார்வனவே போக லாச்சு (கேளும்)

மாயமா யிரவி மைந்தன்
தாயகம தாக வந்து
நேயமாக மைந்தர் நொந்து
உபாயமாகக் கொண்டு கந்து (கேளும்)

அந்தவனந் தன்னில் ஓடி
மைந்தரையுங் கண்டு வாடி
விந்தையா னந்தனைத் தேடி
வந்தவர் பிழைத்து நாடி (கேளும்)

பேதை பதுமா வதியை
சூதுனாலே செட்டிமகன்
காதலுடன் கொண்டு சென்றான்
நீதியற்ற பாவியவன் (கேளும்)

செங்கமலை வாழுகின்ற
சித்தூர் நகர்தனிலே
சங்கையுடன் அங்கேமைந்தர்
இங்கிதமாய் வாழுகின்றார் (கேளும்)

நாற்றிசையும் போற்றுமன்னன்
ஆத்துவெள்ளம் தன்னில்முழ்க
பாத்திடையர் கண்டெடுத்து
சேத்தடுமை கொண்டகதை (கேளும்)

வசனம்

ஆனால் வாரும்பிள்ளாய் பரதேசிக்காவலனே சனியே சுவர பகவான் தொடர்ந்த காலங்களிலே சகல பொருள்களையும் தோத்து புத்திகளையும் பேதகம் பண்ணிப் போடுவான். ஆன தாலே இனிநாம் சில நாளைக்குள்ளே சரசுவதி கிருபையாலே தெய்வீகம் விளங்கப் போவுது. அப்போது நான் சொன்ன கதைப்பிரசங்கமெல்லாம் நன்றாய்த் தெரியவரும் பிள்ளாய் பரதேசி காவலனே, நான் ஆச்சிரமத்துக்குப் போய் வருகிறேன் பிள்ளாய்.

## 193

விருத்தம்

உம்பரச மாமுனிவர் மூன்று பேர்க்கும்
    உண்மையுடன் கதைவிபரம் உரைத்து நன்றாய்
தென்புதர ஆசீரு வாதம் செய்து
    சிகமகிமை காட்டியவர் சென்ற பின்பு
பண்புமன்னன் பூருவச்சக்கிர வர்த்தி கொடுமை
    பார்த்துமதி மயங்கிமனம் பரத வித்து
அன்புடனே ஆச்சிரமஞ் சென்ற பின்பு
    அரசன்பூர்வச் சக்கிரவர்த்தி அவர்சொல் வாரே.

வசனம்

அகோ தெப்படியென்றால் சரசுவதியம்மாள் பலகாரங் கொண்டுவந்து உபகாரஞ் செய்து சாதங் கொடுத்துப்போட்டு வருகிறபோது பூர்வச் சக்கிரவர்த்தி மகராசன் சொல்லுகுற விதம் எப்படியென்றால்.

## 194

### விருத்தம்

என்னுட தாயே கேளும்
இயம்புறேன் கொடுமை யிப்போ
மன்னரைப் போலே நானும்
மகுடமும் பூண்டிருந்தேன்
வின்னப்ப டாத மேனியென்
விதியினால் விசனப் பட்டு
கண்ணுக்கு நித்திரையில் லாதால்
கற்பினைக் கேது செய்வேன்

### வசனம்

ஆனால் வாரும் தாயே. நான் சதுர் வேதனைப் பட்டு மகா துயரத்தை யடைந்திருக்கிறேன் அல்லவா. என் கண்ணுக்கு நித்திரையும் வருகுற தில்லை. எனக்கு அனுகூலமாக நித்திரைக்கு ஏதுவும் செய்ய வேணும் தாயே.

ஆனால் வாருமப்பா மகனே பூர்வச் சக்கிரவர்த்தி. ஒன்றுக்கும் ஓசினை பண்ணாதேயென்று தன்கையிலே இருந்த ருத்திர வீணையைக் கொடுத்து உன் கண்ணுக்கு நித்திரை வரும் வரையிலும் யிந்த வீணையை வாத்தியஞ் செய்து கொண்டுயிருந்தால் உனக்கு அனுகூல மர்குமென்று கிருபை செய்துபோட்டு சரதியானவள் விருமலோகத்துக்கு எழுந்தருளினால் என்றவாறு.

## 195

### தருவு

வாத்தியம் செய்தாரே—பூர்வராசன்
வாத்தியம் செய்தாரே.

வாத்தியஞ் செய்தாரே.
நேத்தியாய் மகராசன்
சாத்தி யாய் நடுச்
சோத்தியந் தன்னிலே (வாத்தியம்)

மோகன ரம்பை உருவசி மேனகை
மொய் குழலாள் பச்சைக் கல்லுமு ருகும்படி

நாகரீ கத்துடன் ஏகவை போகமாய்
நாதம் அநேக சங்கீத விநோதமாய் (வாத்தியம்

மாதுநல் லாள்புஷ்ப ரஞ்சனி யான பெண்
மன்மத மோக மயக்கத்தி லேசிக்கி
பேதை இளங்குயில் போலே மயங்கியே
பித்துப் பயித்தியம் மெத்தப் பிடித்திட (வாத்தியம்)

கண்டிடு மாதர் களைத்து மயங்கவும்
காம விகாரம் கவலை முழங்கவும்
அண்டர்கள் மோகினிப் பெண்கள் மயங்கவும்
அய்யன்பூர்வச் சக்கர வர்த்தி விளங்கவும்
(வாத்தியம்

**வசனம்**

இந்தப்படி பூர்வச்சக்கிரவர்த்தி மகாராசன் வீணை வாத்தியஞ் செய்ததை புஷ்பரஞ்சினையானவள் கேட்டு அதிக மோகவிகாரம் தலைமேல் கொண்டு நெத்தியிலிருந்த பச்சைக் கல்லுருகி விழும்படி பாடினது கண்டு இவரே நமக்கு நாயகனாக வேணுமென்று உறுதிகொண்டு பாங்கி மார்களைப் பார்த்துச் சொல்லுகிறாள் என்றவாறு.

## 196

**விருத்தம்**

அன்னமே தேனே எந்தன்
அன்புள்ள பாங்கி மாரே
என்னமோ தெரிய வில்லை
இடதுகண் துடிக்கு தம்மா
முன்னமே அயனார் செய்கை
முடிந்திடுங் கோலந் தானோ
கன்னமா மதன பாணம்
கருத்தையும் உருக்கு தென்றாள்

## 197

**தருவு**

கேட்டுவாடி பாங்கிமாரே
சீக்கிரம் சென்று இந்த

கிண்ணார வாத்தியம்
செய்யும் மன்னன் யாரென்று (கேட்டுவாடி)

நெத்தியி லிருந்தபச்சைக்
கல்லுருகியே இப்போ
நிலத்தில் விழுந்ததென்ன
சொல்லு றுதியே

பத்தினியாள் எனைக்கலியாணம்
செய்வதாரோ நல்ல
பாக்கிமாரே என்னுடைய
பாக்கியந் தானோ (கேட்டுவாடி)

கன்னியர் விரதம்பூண்டு
நானிருந்ததும்—இப்போ
காமனார் விரதம்பூண்டு
சாமி வந்தாரோ

அன்னமேயென் மன்னனை நான்
கண்ணில் காணேனோ—இந்த
ஆசை வலையில் சிக்கி
மோச மானேனோ (கேட்டுவாடி)

சந்தனம்பன் னீருந்தீயாய்
வெந்துகாய்ந்துதே—இந்த
சந்திகண்ட புலியைப்போலே
வந்துபாயுதே

முந்தவேதன் இந்த விதமும்
செய்தகோலமே—இந்த
மோசமதை நானறியேன்
ஆதிமூலமே.

**வசனம்**

ஆனால் வாரும் பாங்கிமார்களே இந்த நடுச்சாமவேளை சோத்தியத்துலே மகா நேர்த்தியுடனே கிண்ணார வாத்தியம் செய்கிறவர் தேவனோ முனிவனோ அவர் எந்த இடத்திலே இருந்து வாத்தியஞ் செய்குறாரென்று சீக்கிரம் பார்த்து வாருங்கள் பாங்கிமார்களே.

## 198

### விருத்தம்

பூரண மதிபோ லொத்த
புஷ்பரஞ் சினையே தாயே
காரண மேதோ உந்தன்
கருத்துவே றான தென்ன
தாரணி தனிலே உன்னைச்
சகலரும் நகைத்தி டாரோ
தூருவ தூர மாகச்
சொல்வருக் கிடம்வைத் தாயே.

### வசனம்

ஆனால் வாருமம்மா புஷ்பரஞ்சினையே. செயசேகர மகா ராசன் வயற்றிலே பிறந்து அஞ்சு வயது முதல் பனிரெண்டு வயது பரியந்தமும் கன்னிகர் மடங்கட்டிக் கொண்டு அழியாத பத்தினியாய் இருந்தாயல்லவா? இப்போது கற்பு நிலைக்கு விரோதமாய் நீதி மார்க்கந்தப்பிப் பேசுகிறது நியாயமல்ல. இது என்ன காரணமோ எங்களுக்குத் தெரியும் படியாய்ச் சொல்ல வேணும் தாயே.

## 199

### விருத்தம்

சொல்லுகிறேன் என்னருமைப் பாங்கி மாரே
சுந்தரஞ்சேர் நெத்தியிலே துலங்கும் பச்சைக்
கல்லுருகி வீழ்ந்தவுடன் எனக்கே அந்த
காவலனு மேல்காம விகாரம் கொண்டேன்
நல்லதென்றே நீங்களும்போய் எனக்கு வாய்த்த
நாயகனைக் கண்டுறுதி எனக்குச் சொல்லும்
இல்லையென்றால் என்னுயிரை மாய்ப்பேன் கண்டாய்
இச்சணமே நீங்கள்சென் றேகு வீரே.

### வசனம்

ஆனல் வாருங்கள் பாங்கிமார்களே. என்னுடைய சொல் லுக்கு விரோதமாய் நீங்கள் மேலோசினை சொன்னது இருக்

கட்டும் அதி சீக்கிரத்திலே போய் அவர் எந்த இடத்திலே இருந்து வீணை வாசிலைன செய்கிறாரோ என்று பார்த்து வாருங்கள் தாதிமார்களே.

## 200

### விருத்தம்

மங்கையர்சொல் தட்டாமல் பாங்கி மார்கள்
வல்விருளக் கடந்துசென்று மனைகள் தோறும்
சங்கையுடன் நாடிநின்று கேள்க்கும் போது
சகலசுதி இலக்கணத் தாளத் தோடு
எங்கை சென்றால் இலங்கையெல்லாம் வீணை வாத்தியம்
இங்கிதமாய் இதுபுதுமை ஏதோ வென்று
பங்கயம்போல் முகமலர்ந்து வணிகர் வீதி
பரதேசி காவலன்தன் பதிசென் றாரே.

### வசனம்

அந்நேரமே அந்தப் பாங்கிமார்கள் வீதிகள்தோறும் தேடிப் பார்த்துக் கொண்டு வருகுறபோது பரதேசிச் செட்டி வீட்டிலே இருந்து திருடனாகின முடவன் கிண்ணார வாத்தியம் செய்கிறதை முகக்குறியினாலே அறிந்து நம் ராசாவின் மகள் புஷ்பரஞ்சினைக்கு இப்படியோ நாயகன் வாய்க்கவேணு மென்று அதிக விசாரத்துடனே ஓடிவந்து புஷ்பரஞ்சினையைப் பார்த்து பாங்கிமார்கள் சொல்லியவிதம் எப்படியென்றால்.

## 201

### தருவு

### குறவஞ்சி

இச்சைகொண்டாய் முடவனுக்கு
ஏச்சலவோ தாயே
இந்தவிதி யுனைத்துடந்து
வந்ததைச்சொல் வாயே

அச்சமில்லா துனையொருவர்
மச்சினனைப் பார்த்து

அன்னமேயுன் மதிகுலைந்த
தென்னவிதி தானோ
மெச்சுபுகழ் தேசமெங்கும்
வெக்குயிருக் கையிலே
வெட்டுப்பட்ட முடவனுக்கு
விரகங்கொண்டாய் மயிலே. (இச்சை)

பஞ்சணையில் கிளிமொழியை
கொஞ்சிவளர்த்தே எடுத்தோம்
பாவியிந்தத் திருடனுக்குச்
சீதனமாய்க் கொடுத்தோம்
மிஞ்சியவன் மேலுனக்கு
விரகங்கொள்ள லாச்சே
வேண்டியுனை வளர்த்ததெல்லாம்
வீண்பலனாகப் போச்சே. (இச்சை)

பத்தினியாய் நீயிருந்து
பதிவிருதையைக் கெடுத்தாய்
பார்த்தவரெல் லாஞ்சிரித்துப்
பழிக்கஉடம் பெடுத்தாய்
எத்தினைசொன் னாலுமுனக்
கெள்ளளவு மில்லை
ஈன்றெடுத்த இராசனுக்கு
ஏதுசொல்வோம் சொல்லே

வசனம்

ஆனால் வாருமம்மா புஷ்பரஞ்சினையே நீ பதிவிரதைப் பாகமா யிருந்ததுஞ்சரி. இந்தத் திருடனுக்கு ஆசை கொண்டதுஞ் சரி (பளா பளாய்) இது வெகு நேத்தி நீ செய்த யோசனை நன்றாயிருக்குது. இப்பவும் இராசனிடத்தில் போய் என்னென்று சொல்லுகுறதம்மா தாயே.

ஆனால் வாருங்கள் பாங்கி மார்களே இந்தச் சனமே போய் என் தகப்பனாகிய இராசனிடத்துலே எனக்கு விவாகம் முடியும்படி ஒரு அவதூறும் வராமல் சினேகித பச்சம் விடாமல் சொல்ல வேணும் பாங்கிமார்களே.

## 202

### விருத்தம்

பாங்கிமார் அரசனைக்கண் டுகந்து போற்றி
பார்வேந்தே கேளுமென்றே பணிந்து சொல்வாள்
மாங்குயிலாள் புஷ்பரஞ் சினிக்கு மாலை
மங்கிலியந் தரிப்பதற்கு மனமுண் டாச்சு
நாங்களெல்லாம் இகழ்ச்சியாகும் வேண்டா மென்றோம்
நாயகியும் கேளாமல் மதிம யங்கி
தேங்காமல் அன்பத்தார்தே சத்து ராசர்
சீக்கிரமாய் வரும்படிக்கிச் செப்பு வீரே.

### வசனம்

ஆனால் வாருங்களய்யா சுவாமி எங்கள் தாயாகிய புஷ்பரஞ்சினையம்மாள் விவாக முடிக்க வேணுமென்று மெத்தக் காமவிகாரத்தோடுங் கூடி மாலை சூட்ட வேணுமென்று என்னிடத்தில் தனித்து உத்தாரஞ் சொல்லியிருக்குறதய்யா சுவாமி.

அங்நேரமே செயசேகர மகாராசன் தன்மகள் புஷ்பரஞ் சினிக்கு வியாழதிசை வந்திருப்பதினாலே நல்ல வசனம் பிரிந் திருக்குதென்று மகாசந்தோஷத்துடனே அன்பத்தாறு தேசத்து ராசர்களை வரும்படியாய் ஓலையெழுதிக் கலியாண மண்டபம் செய்கிற விதம் எப்படியென்றால்.

## 203

### தருவு

தேசம் புகழ்ந்திடவே — மன்னன்
செயசேகரன் தான்மகிழ்ந்து
வாசம் புகழ்ந்திடவே — சுய(ம்)பிர
மண்டபம் செய்தாரே

ஆணிப்பொன் தூணிருத்திப் — பசுந்
தங்கத்தால் வளைபரப்பி
மாணிக்கத் தால்கொடுங்கை — வைத்து
மரகதப் பச்சையிலே

வச்சிர மிட்டழுத்தி — சிங்கார
மணவறைப் போதிகையும்
உச்சித மாய்ப்பதுமை — தூணுக்குத்தூண்
ஒன்றுபத் தாய்விளங்க

கண்ணாடி மேல்கட்டியும் — சூரியப்பிர
காசமாய் நின்றிலங்க
விண்ணாண மாகவுமே — அலங்கிரதம்
வேடிக்கை செய்கிறாரரம்

பார்மன்னர் வந்திருக்க — நன்றாக
பளிங்குமா மண்டபமும்
சீருட னுண்டுபண்ணி — விடுதி
சிங்காரங் கள்செய்தாரே

ஆனை பெருந்தளமும் — குதிரைக்கும்
அப்படி யேவிடுதி
சேனைக்குங் காவலர்க்கும் — விலாசமாய்
செய்தாரே மண்டபமும்

## 204

### விருத்தம்

மங்கை (நல்லாள் மாது) புஷ்ப ரஞ்சி னிக்கு
மணமாலை யென்றெழுதும் வாச கத்தைச்
சங்கையுடன் அரசரெல்லாம் பார்வை யிட்டு
சந்தோஷ மாயவர்கள் தளங்க ளோடும்
இங்கிதமாய்ச் சங்கீத மேள வாத்யம்
இடிமுழங்க மன்மதம ராச ரெல்லாம்
பொங்குகடல் போல்முழங்கி அன்பத் தாறு
'புவனமன்னர் எல்லோரும் புறப்பட் டாரே.

### வசனம்

அகோ தெப்படியென்றால் செயசேகர மகாராசாவினுடைய சுயம்பிர மண்டபத்திலே சகல தேசாதிபதிகளும் வந்து அவரவர் விடுதியிலே இருக்குறார்கள் என்றவாறு.

## 205

### விருத்தம்

பார்த்திபர் இராச ராசர்
பகிர்ந்திடும் மொழியைக் கேட்டு
கீர்த்திசேர் மந்திரி யப்போ
கெவுடமா நகர மெங்கும்
தூத்தியே முரசு கொட்டும்
தோட்டியை அழைக்கச் சொல்லி
கால்த்திர மான கட்டியக்
காரனுக் குரைசெய் தாரே

### வசனம்

அகோ வாரும் பிள்ளாய் கட்டியக்காரா. நம்முடைய இராசாவின் மகளான புஷ்பரஞ்சினிக்கு நாளை உதைய காலத்துலே சுயம்பிர மண்டபத்துக்கு வரும்படியாய் தோட்டி யாகிய வகுறச் சாம்பானை பாரி போடச் சொல்லும் பிள்ளாய்.

### விருத்தம்

பார்புகழும் அரசன் மகள் ஆன செல்வி
பாங்குயிர மாது புஷ்ப ரஞ்சி னிக்கு
சீர்புகழும் மணமாலை சூட்ட வென்று
தேசமன்னர் வந்திருக்கச் சேதி கேட்டு
பேர்புகழும் கிடிமுடியுங் கையில் கொண்டு
பிரபலமாய்த் தமுக்கடிக்கும் பெரிய சாம்பான்
தார்புகழும் சபைநடுவே வகுறத் தோட்டி
சங்கையுடன் முரசுகொட்டித் தான்வந் தானே.

## 206

### தருவு

—தெந்தி னாத்தின தின்னா தின்னா—

முந்தி யேபறை யடிக்கும்சாம்புகன்
மூர்க்கமு டன்வந்து தோன்றினானே
அந்தியும் சந்தியும் போய் ஊருக்குள்
அலைந்து கஞ்சிக்குக் கையேந்தி

மர்தை யில்மா டெடுக்கும் தோட்டி
வகுற னும்வந்து தோன்றினானே.
கிடுமு டிதான் எடுத்துக் கண்டது
கேட்ட துவிளம் பரமாயடித்து
மடிகட் டியெலும் பெடுக்கும்தோட்டி
வகுற னும்வந்து தோன்றினானே.
சாதிக்கும் மேல் மிச்ச மாய் வெகுவெகு
தலையெ டுப்பா கவே பேசிக்கொண்டு
வீதிக்கு வீதி நின்று பறைகொட்டும்
வெட்டி யானும்வந்து தோன்றினானே.

வசனம்

அகோ சரணஞ் சரணமய்யா சுவாமி.

ஆனால் வாரும்பிள்ளாய் வகுறச் சாம்பானே நாளை அருண உதையத்துக்குச் சகல பேர்களும் சுயம்பிரமண்டபத்துக்கு வரும்படியாய் விளம்பரஞ் செய்யும் பிள்ளாய்.

அப்படியே நல்ல பாக்கியமாச்சுதய்யா சுவாமி

அகோ வாருங்களய்யா அன்பத்தாறு தேசத்திலுள்ள ராசாக்களும் அண்ணாக்கயர் கட்டி முதல் கொண்டு அனவோரும் நாளை உதையத்துக்கு சுயம்பிரமண்டபத்துக்கு வந்து சேருங்கோ ..துடிந்துடி...

## 207

விருத்தம்

விளம்பரங்கள் செய்தவகை விபரம் எல்லாம்
வேந்தன்பூர்வச் சக்கிரவர்த்தி விபரங் கேட்டு
பழங்கதையோ யிதுபுதுமை ஏதோ காணேன்
பரதேசிக் காவலனே பகருமென்றே
தொழுங்கருணை மாதுபுஷ்ப ரஞ்சி னிக்கு
சுயம்பிரமென் றரசரெல்லாம் சூழ்ந்திட் டாராம்
யெழுந்தருளும் ராசமன்னா நாம ளும்போய்
இதையறிந்து வருவோமென் றியம்பி னார்ரே.

வசனம்

ஆனால் வாருங்கள் பரதேசிக் காவலனே. நம்முடைய இராச்சியமெல்லாம் இழந்து பெண்சாதி பிள்ளையுமிழந்து திருடனென்று பேராகி கள்ளனென்றும் கட்டுப்பட்டு அந்தமுஞ் சந்தமுங் குறைந்து இவ்வேசங் கொண்டிருக்கிற போது நமக்கு வேடிக்கை பார்க்கவேணுமா பரதேசிக் காவலனே.

## 208

### விருத்தம்

சுந்திரஞ்சேர் மன்னவரே உமக்குத் தானோ
துடந்தவிதிப் பயனுமொரு சூது தானோ
இந்திரனுங் கேடு கெட்டான் அகிலி யாலே
ஈஷ்பரனும் பிச்சையெடுத் திரந்து தின்றான்
முந்திஅரிச் சந்திரனும் பெண்ணை வித்து
மூர்க்கமுடன் சுடலைவாக் கரிசி தின்றான்
இந்தவிதம் அனுபோகம் கண்ட பேர்கள்
இருந்தரசு ஆளுலையோ யெழுந்தி றாயே.

வசனம்

ஆனால் வாருங்களய்யா சுவாமி. வெல்வதும் தோற்பதும் விதி வசம். தேவர் இராசாக்கள் அலைந்து திரிந்து அபகடப் பட்டு அரசு செலுத்தவில்லையோ. நீர் கிலேசப்பட வேண்டாம் என்று ஒரு மனதைத் தேத்தி இரண்டு பேர்களும் பல்லாக் கேறிக் கொண்டு சுயம்பிரமண்டபத்திலே ஒரு பக்கமாய் வந்து இருந்தார்கள் என்றவாறு.

## 209

### விருத்தம்

மாதுபுஷ்ப ரஞ்சினியும் மாலை சூட்ட
மஞ்சள்நீ ராட்டி மணக் கோலங் காட்டி
கோதுகுழல் வகுப்பெடுத்து மலர்கள் சூட்டி
குங்குமம்பன் னீர்ததும்பிக் குழைத்துப் பூசி
சீதளமாம் கரிக்குருவி வாலுப் போல
சிலவிழிக்கு மையெழுதித் திலதந் தீட்டி
காதலுடன் சிலம்புஆ பரணம் பூட்டி
கன்னியர்கள் திட்டியது கழித்திட் டாரே.

### வசனம்

இந்தப்படி புஷ்ப்ப ரஞ்சினியானவளை திருமணக் கோலத்துடனே பாங்கிமார் இருபுறமும் சூழ்ந்து வர அப்போது இராசசன்னி சபையை நோக்கி வருகுறவிதம் எப்படியென்றால்.

## 210

### தருவு

*சங்கீத ராகம்*

வந்தாள் திருச்சபையில்
புஷ்ப்பரஞ்சினி
வந்தாள் திருச்சபையில்.

வந்தாள் சிறந்தமலர்
செந்தா மரைமுகத்தாள்
சந்தோஷ மாய்ப்பூலோக
சிந்தா மணியெனவே (வந்தாள்)

குறித்த மன்னனைத்தேடி
பொறுத்த மிகக்கொண்டாடி
பெருத்த சபைக்கு நடுவே
சிரித்துச் சிரித்துமெல்ல (வந்தாள்)

## 211

### விருத்தம்

கண்டவர்கள் மனதுடைந்து நொந்து புண்ணாய்
கருத்தறிந்து ஒருத்தர்முகம் பார்த்து மப்போ
கொண்டவனே மலர்வேதன் திஷ்டி தானோ
குவலயத்துப் பெண்ணிவளோ கூர்ந்து பார்த்தால்

விண்டலத்தை விட்டு வந்த சகிப்பெண் ணாளோ
மேனகையோ உருவசியோ விரும்பித் தேடி
பண்டுவைத்த திரவியமோ எவர்க்கு வாய்த்த
பாக்கியமோ என்றரசர் பகர்ந் திட்டாரே!

### வசனம்

இராச சபையிலே வந்த புஷ்ப்பரஞ்சினை கையிலே செய சேகர மகாராசன் பூமாலையைக் கொடுத்து 'தாயே புஷ்ப்ப

ரஞ்சினையே இந்தப் பூலோகத்து இராசர்களிலே உமக்கு எந்த மாப்பிள்ளை பிரியமோ அவரை மனதில் குறித்து மாலையைப் போடுந்தாயே' என்று இராசன் சொல்ல புஷ்பரஞ்சினை மாலை போடுகுற விதம் எப்படியென்றால்.

## 212

### தருவு

### ஆனந்தக் களிப்பு

மணமாலை தன்கரத்தில் வாங்கி—மக
இராசனைக் கண்டு மனம் தேங்கி
தனதாக மனதருமை கொண்டாள்—வெகு
சமஸ்தானம் அனவோர்க்கும் நமஸ்காரம் என்றே

கனமான மன்னர்முகம் பார்த்தாள்—விதித்த
கண்வனாரோ மையல் பெருகியே பார்த்தாள்
நினைவிலுயிர் சரசுவதியைப் பணிந்தாள்—நல்ல
நெறிமுறமை தவிறாமல் மாலையிடத் துணிந்தாள்.

### வசனம்

அந்த இராச சபையிலே நின்று சரசுவதிதேவியைத் தியாணம் பண்ணி தாயே லோக நாயகியே நான் போடுகுற பூமாலை யாவது எனக்குக் கற்பித்தருளிய நாயகன் கழுத்தில் விழவேணு மென்று மனதில் தியானித்து மாலையை ஆகாசம் விட்டெறிந் தாள். அந்த மாலையானது பூர்வச்சக்கிரவர்த்தி கழுத்தில் விழுந்ததென்றவாறு.

## 213

### விருத்தம்

மோசடியாய் நம்மையெல்லாம் கண்ணைக் கட்டி
முடவனுக்கு மாலையிட்டு முறைமை கொண்டாள்
நேசமுடன் நாமிவளைக் குறித்து வந்து
நிலவரமாய்க் கதையாச்சு நீதி யில்லை
வாசமிகு பூங்குழலாள்க் காசை வைத்து
வந்தமன்ன ரெல்லோரும் வழியைக் கட்டி
ஆசைகொண்ட பயித்தியமும் விட்டு நீங்கி
அனைவோரும் சபையைவிட்டு யெழுந்திட் டாரே.

வசனம்

சுயம்பிர மண்டபத்தில் வந்திருந்த தேசாதிபதிகளெல்லாம் மூடவனுக்கு மாலையிட்டாளென்று ஆயாசத்துடனே அவரவர் தேசங்கள் சென்றாரென்றவாறு.

## 214

விருத்தம்

மன்னவர்கள் போனபின்பு திமிர்த வல்லி
மங்கையரும் மன்னவனும் மனம்புண் ணாகி
கன்னிபுஷ்ப ரஞ்சினிக்கு முன்னா ளந்த
கமலக்கண்ண னிப்படியோ கற்பித் தானோ
வின்னமில்லா நம்மனுக்குத் தீங்கு மாச்சு
மேதினியோர் இகழ்ச்சிபேச விதியுண்டாச்சு
என்னசெய்வோம் என்றவர்கள் மெலிந்து வாடி
இடிந்திட்டார் மனதுபுண்ணா உடைந்திட் டாரே.

வசனம்

அகோ தெப்படியென்றால் அந்நேரம் பெரியோர்கள் ஏது சொல்குறார்கள்.

ஆனால் வாருமப்பா செயசேகர மகாராசனே இராசகுல வம்சத்திலே குழந்தைகள் பிறந்தால் தர்ம சாஸ்திரப்படிக்கு ஆண் பிள்ளை நீதி தப்பி நடந்தால் உடனே சித்திரவதை செய்குற தென்றும் பெண்ணானவள் நீதி தப்பி நடந்தால் பல்லாக்கில் வைத்து ஆருண்ணியமான வனவாசத்திலே விட்டு வரவேணும் பிள்ளாய் செயசேகர மகாராசனே.

## 215

விருத்தம்

சூழ்ந்திடும் சபையோர் கூடி
சொல்லிய வசனந் தன்னை
வேந்தனும் காதில் கேட்டு
விதிவசம் இதுவோ என்று
மாந்துளி ரிலங்க மேனி
மகளையும் வரவ ழைத்து
சாந்தமாய் உனக்கு வந்த
சதியெனக் குரைசெய் வாயே

வசனம்

ஆனால் வாருமம்மா தாயே புஷ்ப்ப ரஞ்சினி, கன்னிமடங் கட்டி இனிமேல் வாலசன்னியாசியாய் ஒருவரையும் மாலையிடு குற தில்லை என்று பிரதிக்கிணை பண்ணிக்கொண்டிருந்து இப்ப வும் இராசநீதி தப்பி சுயம்பிர மண்டபத்திலே சகல தேசாதிபதி களும் அறிய முடவனுக்கு மாலையிட்ட காரணத்தைச் சொல்ல வேணுமம்மா தாயே.

ஆனால் வாருங்களய்யா சுவாமி. இனிமேல் பல பல விதங் களான யோசனை செய்யவேண்டியதில்லை. நான் நீதி தப்பி நடந்தேனேயானால் எனக்குள் பிறக்கிற கெதியை இன்னங் கொஞ்ச நாளையிலே கண்ணாலே பார்க்கலாம். இப்போது என்னையும் என் கணவனையும் பாங்கியர்களுடனே தங்கப் பல்லக்கிலே வைத்து ஆருண்ணியமான வனவாசத்திலே விட்டு வாருங்களய்யா சுவாமி.

## 216

விருத்தம்

மாதுபுஷ்ப்ப ரஞ்சினியிவ் வாறு சொல்ல
  மங்கையெனும் திமிர்தவல்லி மாது கேட்டு
காதிலிரு கையைவைத்துச் சிவனே என்று
  கதறியிரு கண்வழியே கண்ணீர் சிந்தி
வேதினையாய் மெய்சோர்ந்து பரத வித்து
  மெல்லியரும் பலவிதமாய் வெறுமை கொண்டு
சோதனையோ எவர்செய்த சூதோ என்று
  சுரணை தப்பி மதிமயங்கிச் சொல்லு வாளே.

## 217

தருவு

அய்யய்யோ மகளே உன்னை
  அமைத்த படியிதுவோ
அங்கம் பதறுதடி கண்மணியே

கையும் காலும் அறுபட்ட
  முடவனுக்குப் பெண்டாக
கர்த்தன் விதித்தானோ கண்மணியே

தெய்வச் சகாயம் போச்சோ
திருவுளம் பகையாச்சே
திருடனுக்கு ஆசைகொண்டாய் பெண்மயிலே

வையகத் தோறும் பழிக்க
வசையும் தேடிக்கொண்டாய்
வனவாசம் போகலாமோ கண்மணியே

பெற்ற வயிறெனக்குப்
பற்றி யெறியுதடி
பெருவனம் போகலாச்சே கண்மணியே

உற்ற சனமிருக்க
உறவின் முறையிருக்க
உன்தலை விதியோதாயே கண்மணியே

பத்தினி யாகஇருந்து
பதிகுலைந்தே வனப்
பரதேசி யானதென்ன கண்மணியே

வெத்திசே ருஞ்சபையில்
வேந்தர் இருக்கையிலே
மெய்கெட்டு மயக்கமாச்சே கண்மணியே

மெத்தத் தவமிருந்து
கர்த்தன் உனைப்படைத்தான்
மேன்மையாய் வளர்த்தேனே கண்மணியே

உன்னை வனத்தில்விட்டு
உயிரைவைத் திருப்பேனோ
உலகத்தி லேசுவாரே கண்மணியே

பன்னக சாலைவிட்டு
பளிங்குமண் டபம்போயி
பாழ்வனம் வாழ்வாச்சுதோ கண்மணியே

கன்னி மடங்கட்டியே
கற்பினி யாயிருந்து
கார்வன மென்றுகாண்பேன் கண்மணியே

## 218

### விருத்தம்

மங்களஞ்சேர் கலியாண மண்ட பத்தில்
மாலையிட்டு நாங்கள்மனம் மகிழ்ந்தி டாமல்
பங்கமழிந் தெங்களையோட் டாண்டி யாக்கிப்
பார்வனம் போகஅயன் படைத்தா னுன்னை

எங்கையுன்னைக் காண்பனடி மகளே யென்று
எண்ணாது எண்ணிமனம் புண்ணாய் நொந்து
சங்கமாய்க் கண்ணீரை வடித்துக் கொண்டு
தையலாள் திமிர்தவல்லி தான்சென் றாளே

### வசனம்

ஆனால் வாரும்பிள்ளாய் மந்திரி, திருடனாகிய முடவனையும் புஷ்பரஞ்சினியையும் பாங்கிமார்களுடனே பல்லாக்கிலே வைத்து வனவாசத்தில் விட்டுவாரும் பிள்ளாய்.

அப்படியே மகா பாக்கியமாச்சுதையா சுவாமி

## 219

### தருவு

வனத்துக் கொழுந்தருளினாள்—புஷ்பரஞ்சினி
வனத்துக் கெழுந்தருளினாள்.

குனித்த சிலைவிழியாள்
இனித்த கனிமொழியாள்
தனித்து மன்னன்பூர்வ
சக்கிர வர்த்தியுடன் (வனத்து)

அருணன் உதையம் போல
அழகு சொரியும் வாலை
தரும நெறியி னாலே
தங்கப் பல்லாக்கு மேல (வனத்து)

காம மண்டபங் கட்டி
கன்னியர் மலரும் சூட்டி
சோமன் உதையம் போலே
சொர்னக் கிளிமொழி யாளே (வனத்து)

சிங்கா ரமலர் சூட்டி
வங்கா ரப்பணி பூட்டி
மங்கை யர்கண் ணாட்டி
மதன ராசி மாட்டி (வனத்து)

## 220

### விருத்தம்

அன்னநடை இளங்குயிலே வனிதை மாதே
ஆசையுள்ள கண்மணியே அன்புள் ளாளே
மின்னரசே புஷ்பரஞ்சி னியபெண் ணாளே
வேந்தனுடன் கானகத்தில் விடவும் வந்தோம்
வர்ணமலர்ப் பூங்காவில் வரவு மாச்சே
வாடைபன்னீர் சுகந்தமலர் மகிழ்ச்சி கொண்டார்
தண்மையுடன் மன்னனுக்குக் கிருபை செய்ய
தயவுடனே மலர்மாது தான்வந் தாளே.

## 221

### தருவு

அன்னை சரசுவதி வந்தாள்
வனத்தில் கிருபை செய்ய
அன்னை சரசுவதி வந்தாள்

சுந்தர வாலை மனோமணி போலே
தொங்கிய மேனி யிலங்கி அசைந்திட
விந்தை நடனம் புரிந்தது சதாசமாய்
மெய்யன்பு கொண்ட செங்கை வல்லியுமாகவே
(அன்னை சரசுவதி)

மன்னன் பூர்வச் சக்ரவர்த்திக் கனுகூலம்
மாகவே லோக மாதாவென்று தோன்றியே
என்னும் படியேயப் படியே யிருந்தவர்
எத்திசை யும்புகழ் பெற்றர சாண்டிட
(அன்னை சரசுவதி)

சூரியன் மைந்தன் சனிபக வான்தொட்ட
தோசத்தி னால்வெகு மோசத்துக் குள்ளதை

காரிய மாக விலக்கிச் சுகம்பெற
காட்சி யருள ர சாட்சி கொடுத்திட
(அன்னை சரசுவதி)

துந்துமி வீணை சரமண் டலங்கொண்டு
துந்தமி யாற்பிர சித்தியர் மின்னாலே
அந்திர மாகவே வந்துசக் கிரவர்த்தி
அய்யனைக் காத்திட தெய்வம் வந்தாப் போலே
(அன்னை சரசுவதி)

வசனம்

ஆனால் வாருமப்பா பூர்வச் சக்கிரவர்த்தி உனக்கு அனுகூல காலம் பிறந்திருக்குது நீ யோசனை செய்ய வேண்டா மப்பா மகனே.

ஆனால் ஒரு 'விண்ணப்பம் சொல்கிறேன் கேளுமம்மா தாயே.

## 222

விருத்தம்

அன்னையெனும் சரசுவதித் தாயே கேளும்
ஆதிசிவன் கற்பினையோ அமைந்த தம்மா
மன்னர்பணி அரசுபுரி நகரந் தோற்று
மனைவிமக்கள் தனையிழந்து வறுமையானேன்
முன்னவர் செய் பழவினையோ கர்மந் தானோ
முடவனென்று எனக்குவிதி முடிந்த கோலம்
என்னையொரு மனிதரென்று தொடர்ந்து வந்தாள்
என்தலையில் இப்படியும் எழுதினாரோ

வசனம்

அகோ வாருமம்மா தாயே லோகமாதாவே. நான், சகல பொருளுந் தோற்று அந்தமும் சந்தமுங் குறைந்து காலம் போன கட்சியிலெப்படியும் நடக்க வேணுமென்று என் தலையில் யெழுதினாரம்மா தாயே.

## 223

### விருத்தம்

அப்பனேயென் கண்மணியே சொல்லக் கேளாய்
அருமையுடன் ஓதுகுறேன் அரனார் செய்த
கற்பினையை எவராலும் தள்ளப் போமோ
காலச்சனி விபரமுந்தான் கண்டா யப்பா
செப்புகிறேன் அனுபோகந் துலைத்து விட்டாய்
திருவுளமுன் பங்காகச் சேர்ந்து திப்போ
புஷ்பரஞ் சினியையமண மாலை சூட்டி
புவனமெங்கும் ஒருகுடையில் போற்று வாயே

### வசனம்

ஆனால் வாருமப்பா மகனே பூர்வச்சக்கிரவர்த்தி. சனியனான பாதகன் விலகிக் கொள்குறதிற்கு நாளாச்சுது. இப்பவும் உமக்கு தெய்வீகபுரமென்று ஒரு பட்டண முண்டு பண்ணி வைக்குறேன். அதுலே இருந்துகொண்டு வாசம் பண்ணுமப்பா மகனே.

அப்படியே நல்ல பாக்கியமாச்சு தம்மா தாயே.

## 224

### தருவு

### ஆனந்தக் களிப்பு

மறுமலர் வனமது விலாசம் — நல்ல
வைபோக மாகவொரு தெய்வீக வாசம்
தருமநெறி மகிமையது னாலே — தாயார்
சரசுவதி தேவி கிருபைசெய் தானே
அருமையுடன் முரசுபரஞ் சாட்டி — மகா
அதிசயமாய் இராசனுட புகழைநிலை நாட்டி
திருமக விருந்துவிளை யாடி — தெய்வ
சிம்மாச னம்விசுவ கர்மாவு னாலே
பெருமையொரு பிரபலமாக — பிர்ம்ம
கர்மங்களோடு பிரதிஷ்ட்டையாக

(இந்த இடத்தில் 8 வரிகள் எழுத வேண்டிய இடம் எழுதாமல் விடப்பட்டுள்ளது.)

வசனம்

மகா ஆவலோடுங் கூடிக் கொலு முகத்திலே சென்று ராசாவைக் கண்டறிந்து சாஷ்ட்டாங்கமாக விழுந்து தெண்டம் பண்ணி பரதரசகனைச் சொல்லுகுற விதம் எப்படியென்றால்

## 225

### தருவு

—குறவஞ்சி—

தேசமெங்கும் திரிந்தலைந்து தேடிச்சென்றேன் சாமி
திருவடிகளாகவந்து சேர்ந்துகொண்டேன் சாமி
ஈசனுட செயலிதுவோ இந்தவினைக் கோலம்
இங்கேவந்து காணவென்று யென்னதிஷ்ட்ட காலம்
ஆசையுடன் பெத்தெடுத்த அன்னைதந்தை குறையோ
ஆதிசிவன் சோதினையை அயன்விதித்த விதியோ
இராசர்கள்சி காமணியே நாயகமே சாமி
நானடியேன் நீதிதப்பி நடந்ததுண்டோ சாமி
தேசமன்னர் எல்லோரும் தீங்குசெய்தார் சாமி
திருவுளமே என்று மனம் உருகிவந்தேன் சாமி

வசனம்

இந்தவிதமாகப் பூர்வச்சக்கிரவர்த்தி மகாராசன் தெரிசினை செய்துகொண்டு பரதரசகனை பூர்வச்சக்கிரவர்த்தி மகாராசன் கண்டு பலபல விதங்களாகப் பேதித்து மந்திரியைக் கட்டி ஆலிங்கனம் பண்ணிக் கொண்டு சொல்லுகுற விதம் எப்படியென்றால்.

## 226

### விருத்தம்

வாடிநின்ற பரதர சகனைக் கண்டு
மந்திரிபூ ரணமாயும் மகிழ்ந்து என்னை
தேடிவந்த காரணமே தப்பா மந்திரி
சிகதரச காபுரத்தின் சேதி என்ன
நாடிழந்து வனவாசம் வந்த பின்பு
நடந்தகதை விபரமெல்லாம் நமக்குச் சொல்லும்
ஏடலரும் தின்புயனே என்று ராசன்
ஏங்கினார் பெருமூச்சு வாங்கினாரே.

—பின்னும்

சுந்திரஞ்சேர் பதியிழந்து சனியன் செய்த
சோதினையால் வனவாசம் துணிந்து நீங்கள்
வந்தபின்பு மனவெறுமை யாலே நானும்
மதிகுலைந்து அறிவழிந்து வனங்கள் தோறும்
அந்திரமாய்த் திரிந்தலைந்து தேடித் தேடி
அகுதிபர தேசிகன்போல் ஆன பின்பு
சிந்தையெல்லாம் நொந்துருகி யிங்கே வந்து
தெய்வீக புரத்திலும்மைத் தெரிசித் தேனே.

வசனம்

ஆகோ வாருங்களய்யா சுவாமி. தேவரீர் வனவாசம் வந்ததின் பின்பு அடியேனும் மனவெறுமையாக காயாசங் தரித்துக்கொண்டு சுவாமி வரக்காணாமல் லோகாதி லோகங் களெல்லாம் தேடி அன்று போனவன் இன்று வந்தபடியினாலே பட்டணத்துச் சமாச்சாரந் தெரியாதய்யா சுவாமி.

(இந்தப் பிரகாரமாக இவர் இரண்டுபேரும் பேசிக்கொண் டிருக்கும் வேளையிலே சித்தூருப் பட்டணத்திலே விளங்கப் படாநின்ற சுரபி சுரதாபி யென்ற இராசகுமாரர்கள் தெய்வீகம் விளங்குற சேதிகேட்டு இடச்சியாகிய செங்கமலையிடத்திலே விடைபெற்றுக் கொண்டு வருகுற விதம் எப்படியென்றால்.)

## 227

தருவு

மைந்தர்கள் புறப்பட்டாரே — தெய்வீகம் தேடி
மைந்தர்கள் புறப்பட்டாரே.
சுந்தரத் திலகம் தீட்டி
சொர்னமாய்ப் பணிகள் பூட்டி
மந்திரி பூர்வ சக்கிரவர்த்தி
மன்னன் இடந்தேடி (மைந்தர்கள்)

சித்தூர் நகரம் விட்டு
செங்கமலத்தைக் கும்பிட்டு
கத்திகே டயம்வா ளுடன்
கைதனில் அம்புங் கொண்டு (மைந்தர்கள்)

## 228

### விருத்தம்

உம்பரச மாமுனிவன் கதைப்பிர சங்கம்
ஓதிவைத்து மெய்யறிவை உண்மை கொண்டு
சம்பரமுடன் மனதுசந் தோச மாகி
சரசுவதியாள் தெய்வீகந் தனிலே வந்து
அம்புடனே தலமகிமை எல்லாம் பார்த்து
ஆச்சரிய மாக அதி செயந்தா னென்று
பம்புடைய சரசுபதி நதியைக் கண்டு
பணிந்திட்டார் பாலர்மனம் துணிந்திட் டாரே

### வசனம்

ஆனால் வாடா தம்பி சுரபி, இந்தச் சரசுவதி நதியிலே இருக்கப்படாநின்ற அதிசயம் நான் எங்கும் பார்த்ததில்லை. முவ்வேழிருபத் தொரு நதிக்கும் இந்த நதி விசேசம் பொருந்தி யிருப்பதுனாலே இந்தச் சரஷ்பதி நதியிலே ஸ்தானம் பண்ணு வோம் வாராய் தம்பி சுரபி.

அப்படியே நல்ல பாக்கிய மாச்சுதண்ணா

## 229

### தருவு

சரசுவதி நதியில்பாலர்
ஷ்தானம் செய்தாரே
அரகரா சிவனேயென்று
அருள் செய் வாரே
சுரதாபி இருவரும்
தோத்திரஞ் செய்தாரே (சரஷ்பதி)

ஆதி மூலமே
அரிநாரா யணாவென்று
நீதியாக வேஅப்போ
நின்று தொழுதார். (சரஷ்பதி)

அஞ்செழுத் தையும்மனத்
தறிவை யூட்டியே
நெஞ்சத்தி லேயவர்
நேசம்மதாய் (சரஷ்பதி)

ஆறெழுத் தையும் உரு
மாறி ஓதியே
ஓரெழுத் தையும்கண்டு
உண்மையாகவே (சரஷ்பதி)

வசனம்

இந்தப்படிச் சகல பாவங்களும் தீரும்படியாக சரசுவதி கதியிலே இராசகுமாரர்கள் ஷ்த்தானம் பண்ணி அஷ்ட்ட கிருபை யெல்லா முடித்துக் கொண்டு இராசாவினுடைய சமுகத்திலே வந்து மகாராசனைக் கண்டு தெண்டஞ் செய்கிறார்கள் என்றவாறு.

## 230

விருத்தம்

வந்துநின்ற பாலகனை அரசன் கண்டு
மதிமுகத்தைப் பார்த்துமனம் மயங்கி அப்போ
சிந்தைதனில் எண்ணாது எண்ணிப் புண்ணாய்
தேங்கியே அரசனப்போ செப்புகின்றான்
அந்தமுள்ள பாலகரே தம்பி மாரே
அப்பனே எந்தூரு எங்கே வந்தீர்
விந்தையுள்ள பாலகரே எனக்கு இப்போ
விபரமாய் நீங்களுமே விளம்பு வீரே.

வசனம்

ஆனால் வாருங்களப்பா பாலகர்களே நீங்கள் ஒரு (ராச) குமாரர்கள் போல தோற்றுகிறது. இனம் பிரிந்த மான்போல் காணுகுது. இப்பவும் நீங்கள் தனித்து வரவேண்டிய காரணம் என்ன உங்கள் ஊரும்பேரும் தாய்தந்தை. இன்னாரென்று வகை விபரமாகச் சொல்ல வேணுந் தம்பிமார்களே.

அப்படியே மகாபாக்கியமாச்சுதய்யா சுவாமி.

## 231

தருவு

எந்தநகர் என்றுசொல்வேன் அய்யாவே
எங்களையும் கேள்க்கவந்தீர் அய்யாவே

எந்தஊரு என்றுசொல்வேன் அய்யாவே
ஏக்கமுடன் சொல்லுகுறேன் அய்யாவே
தந்தையின்னார் என்றறியோம் அய்யாவே நாங்கள்
தாயாரையும் கண்டறியோம் அய்யாவே
அந்திரமாய் நின்றலைந்து அய்யாவே
ஆத்தருகே தட்டழிந்தோம் அய்யாவே

கண்டிடச்சி செங்கமலம் அய்யாவே
கரந்தனில் இருவரையும் அய்யாவே
தெண்டனிட்டுக் கொண்டெடுத்து அய்யாவே
சித்தூருப் பட்டணம்சென்றோம் அய்யாவே
பண்டுகுழல் இடச்சி வீட்டில் அய்யாவே
பால்குடித்து அங்கேவாழ்ந்தோம் அய்யாவே.
தெண்டுகமண் டலங்கொண்டு அய்யாவே
தெரிசனங் கொடுக்கவென்று அய்யாவே.

உம்பரசர் அங்கேவந்தார் அய்யாவே
உண்மையுள்ள கதைகள்சொன்னார் அய்யாவே
சம்பிரமுடன் கேட்டுக்கொண்டு அய்யாவே
தான் பணிந்து போற்றிநின்றோம் அய்யாவே
தெம்புசரசு வதியாள் அய்யாவே
தெய்வீகம் விளங்குமென்றார் அய்யாவே
சரசுவதி நதியைப் பார்க்க அய்யாவே — இப்போ
தனித்துவந்தோம் உங்களிடம் அய்யாவே

இருவருந்தான் இங்கேவந்தோம் அய்யாவே
எங்களையும் காக்கவேணும் அய்யாவே
அன்புடனே உங்களுக்கு அய்யாவே
அடிமைவேலை செய்துறோம் அய்யாவே
நம்பிவந்தோம் உங்களையும் அய்யாவே
நன்மையுடன் காக்கவேணும் அய்யாவே
சம்பளங் கொடுத்தீரென்றால் அய்யாவே — உங்கள்
சமூகத்திலே காத்திருப்போம் அய்யாவே

உமபரசர் சொல்லிவிட்டார் அய்யாவே
உங்களையும் தேடிவந்தோம் அய்யாவே
செங்கமலம் அனுப்பிவைத்தாள் அய்யாவே
சேவுகத்துக் கிங்கே வந்தோம் அய்யாவே

### வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி. இந்தவிதமாக நாங்கள் [illegible]த்தூர்பட்டணத்திலே மாதாவாகிய செங்கமல இடச்சி வீட்டிலே வளர்கிறபோது எங்களுடைய சரித்திரங்களையெல்லாம் அந்தச் செங்கமல இடச்சி சொல்லத் தெரியவரும். எங்களுடைய தாய் தந்தை இன்னாரென்று தெரியவராது. தெய்வீகம் விளங்குகிற சேதி உப்பரச மாமுனிவர் எங்களுக்குக் கதைப்பிரசங்கமாய் அறிவித்தபடியினாலே உங்களிடமாக வந்தோமய்யா சுவாமி.

## 232

### விருத்தம்

மைந்தர்கள்வந் துரைத்தசொல்லை அரசன் கேட்டு
மதிமயங்கிப் பின்னுமவர் மனத்தைத் தேத்தி
சிந்தையெல்லாம் பலவிதமாய் உருகி நொந்து
தேக்கிலைநீர் அதுபோல தியங்கி வாடி
மந்திரியும் இராசனும்யோ சனையே செய்து
வண்மையுடன் ஆசார வாசல் தன்னில்
விந்தையுள்ள பாலர்களே நீங்கள் வந்து
மேன்மையுள்ள சேவகத்தை விரும்பு வீரே.

### வசனம்

ஆனால் வாருங்கள் பாலர்களே. நீங்கள் வந்தபடியினாலே நம்முடைய அரண்மனையிலே போசனம் செய்துகொண்டு மாத மொன்றுக்கு ஆயிரம்பொன் சம்பளம் வாங்கிக்கொண்டு பட்டணத் திலே யாதொரு கலகம் இல்லாமல் காத்து உத்திரவாதம் பண்ணும் பிள்ளாய் பாலர்களே.

அப்படியே நல்ல பாக்கியமய்யா சுவாமி.

## 233

### விருத்தம்

இப்படியுஞ் சிலநாளாய் தெய்வீ கத்தில்
இருந்தரசு புரிந்துமகிழ்ந் திருக்கும்போது
நற்புடைய அந்தமான் றேவு காக்கும்
நவகோடி வணிகன்செட்டி நலமாய்க்கேட்டு

செப்பமுடன் தெய்வீகம் செல்வோ மென்று
சிந்தையெல்லாம் நொந்துருகித் திகைத்து வாடி
கற்புடைய மாதிருக்கும் பொட்டி தன்னை
கனவண்டி மீதில்வைத்துக் கட்டி னானே.

வசனம்

இந்தப்படிக்கி நவகோடி நாராயணன் தெய்வீகபுரத்தை நோக்கி இரவு பகலுமாய் வண்டியை நடத்திக்கொண்டு சரஷ்பதி நதிக்கரையிலே வந்து இறங்கினான் என்றவாறு.

## 234

விருத்தம்

வண்டியிலே பழையபீத்தப் பொட்டி தன்னை
வைந்து நன்றாய் வரிந்துகட்டி வணிகன் அங்கே
கொண்டுவந்தான் சரசுவதி நதியோ ரத்தில்
குலைகாரச் செட்டிமகன் கொடிய பாவி
பண்டுவிதிப் படியாலே பிரமை சூழ்ந்து
பைத்தியங்கொண் டவர்போலப் பார்த்து நின்றான்
கண்டவர்கள் என்னகா ரணமோ சுவாமி
கரைநதியில் வர்த்தகன்போல் காணு தென்றான்

வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி. யாரோ ஒரு வர்த்தகன்போல் காணுகுது. வண்டியின்பேரில் ஒரு பழைய பீத்தாளம் பொட்டியை வைத்து வரிந்து கட்டிக்கொண்டு வந்திருக்குறாரைய்யா சுவாமி.

அகோ தெப்படியென்றால் அந்நேரமே அந்த இராசகுமாரர்கள் திடீரென்று ஓடிவந்து சரசுவதி நதிக்கரையிலேவந்து வண்டியைச் சுற்றிப் பார்த்து அந்த நவகோடி நாராயணன் செட்டியிடத்திலே ராசகுமாரர்கள் சொல்லுகுறவிதம் எப்படியென்றால்

## 235

விருத்தம்

எவ்வூர் எந்தத்தேசம் (என்ன உன்பேர்
எவ்வழியாய்) எங்கிருந்து இங்கே வந்தாய்
வந்தவகை விபரமெல்லாம் அறியச் சொல்லும்
வண்டியின்மேல் பொட்டிவந்த வரலா றென்ன

விந்தையிது வென்றுரைக்கத் திடுக்கிட் டேங்கி
மெய்பதறிக் கைபதறி விபரஞ் சொல்வான்
முந்துவிதி இப்படியோ யெனக்கு வந்து
மூண்டுதென்று செட்டிமகன் மொழிந்திட் டானே

**வசனம்**

அகோ வாருங்களய்யா இராசகுமாரர்களே. நானோ பெரிய வர்த்தகன். அந்தப் பெருந்துறை நாட்டில் என்னை நவகோடி நாராயணஞ் செட்டி என்று சொல்லுவார்கள். இந்தப்பொட்டி யானது எங்கள் முன்னோர்கள் வைத்திருந்தது. நானும் இந்தப் பொட்டியைப் பார்வையிடலாமென்று ஒருநாள் சோதிக்கும் பொழுது அந்தப் பொட்டி தூக்கப்படாமல் இரும்பு உருக்கு ஆயு தங்களாலும் அசையவில்லை. இது என்ன காரணமோ என்று அந்தப் பொட்டியை தூக்கி வண்டியின் பேரிலே வைத்துக் கொண்டு அந்தமான் றேவுதுறையிலே கொண்டுபோய் வெகு நாளாய் வைத்துக்கொண்டு பயித்தியம் பிடித்தவன் போலே முன்னும் பின்னும் தோற்றாமல் காத்துக்கொண்டிருந்தேன். இப்போது தெய்வீகம் விளங்குகிற சேதியைக் கேட்டு இங்கே கொண்டு வந்திருக்கிறேனய்யா சுவாமி.

## 236

**விருத்தம்**

பாலர்களும் இதையறிந்து ஓடிவந்து
பரதரசக னிடத்தில் பண்பாய்ச் சொல்ல
சீலமுள்ள ராசனுக்குத் தெரியச் செய்து
தெண்டனிட்டு விண்ணப்பம் செப்ப லுற்றார்
கோலமெல்லாங் கண்ணாலே பார்ப்போமென்று
கொற்றவனும் மந்திரியும் குறித்துக் கொண்டு
சீலமுடன் வந்துரைத்த மைந்தர்க் கன்பாய்
தேற்றுவார் மனக்கவலை யாற்று வாரே.

**வசனம்**

ஆனால் வாருங்கள் பாலர்களே, நீங்கள் இக்கணமே போய் அந்தச் செட்டியை இடம்வலம் பிசகாமல் காவல்படுத்தி அந்தப்

பொட்டியும் வண்டியும் சூதானமாய்க் காற்றுக் கொண்டிரும் பிள்ளாய் பாலர்களே.

## 237

### விருத்தம்

சீர்பொருந்தும் புஷ்பரஞ் சினிப்பெண் ணாளே
திருடனென்ற முடவனுக்குத் தேவி யாகி
பார்பொருந்தும் மணமாலை சூட்டி வைத்து
பாரவனம் போறதையும் பார்ப்போ மென்று
வாரார்கள் செயசேகரன் மனைவி யோடு
மகள்புஷ்ப ரஞ்சினியைப் பார்வை யிட
பேர்பொருந்தும் தெய்வீக புரத்தை நோக்கி
புறப்பட்டார் மனதுகந்து புறப்பட் டாரே.

## 238

### தருவு

கருமேக மேனியனார் — மலர்க்
கண்ணன் கருங்கடல் வண்ணனெனும்
திருமாலும் பதம்பணியும் — செய
சேகர னுங்கரு ணாகரமாம்

துரைராசர் சூழ்ந்துவர — ரண
துங்கான கணங்கள் சிங்கமென
வரைசேருங் காவனத்தில் — சேனை
மன்னவ ருய்மனை யாளுடனே

நிரையாக வேகடந்தார் — வெகு
நேச முடன்வன வாசமதில்
பெரிதான சோலையிலே — கிள்ளை
பேசுற துந்தென்றல் வீசுறதும்

பரிவாய் மனமகிழ்ந்து — குயில்
பாடுற துய்மயி லாடுறதும்
வருளுற பொய்கையெங்கும் — நல்ல
மாமர முங்கன பூமரமும்

திருவாச்சி கொன்னைகளும் — மலர்
தேன்கமு கும் இள பூங்கமுகும்
சரியாய் நிழல்பொருந்தி — தண்ணீர்
தாவுக ளும்மலர்க் காவுகளும்

சிங்கார மாய்விளங்கும் — நல்ல
தெய்வீக மும்அந்த வைபோகமும்
கங்கா நதியழகும் — அதில்
காரண ரும்பரி பூரணமும்

எங்குமத போதனரும் — முனி
ஈஷ்வர ரும்வேத பூசுரரும்
சங்கம் புகழ்ந்திடவே — தெய்வ
தானங்க ளும்சிவ ஞானங்களும்

கண்கொண் டடங்காத — நல்ல
காட்சிக ளும்அர சாட்சிகளும்
விண்கொண்ட கோபுரமும் — சித்திர
மேடைக ளும்புன லோடைகளும்

சங்கேந்துங் கோபாலர் — வளர்
சன்னதி யுந்தெய்வ ஸன்னதியும்
மங்காத செங்கோலும் — புவி
மன்னவ ரும்புகழ் தென்னவரும்

இந்திர பதிபோல - தலை
எங்கும் இலங்குது தெய் வீகநகர்
சிந்தை மனமகிழ்ந்து — வந்து
சேர்ந்தா னேசெய சேகரனும்.

### வசனம்

இந்தப்படிக்கு செயசேகர மகாராசரானவர் அந்த ஆருண்ணியமான வனவாசத்தில் தெய்வீகம் விளங்கப்படாநின்ற காரண மகிமைகளெல்லாம் கண்ணாலே பார்த்து ஆனந்த சந்தோசத்தை அடைந்து நம்முடைய மகள் புஷ்பரஞ்சினி யானவள் செய்த யோகமே யோகமென்று மகாசந்தோசத்துடனே தன்னுடைய மருமகனைப் பார்க்கவென்று மகா பயங்கரத்துடனே இராசாவினுடைய அரண்மனை வாசலிலே வந்து நின்றார் என்றவாறு.

## விருத்தம்

ஆரு காண் மன்னவனே என்று மந்திரி
அன்புடனே கேட்கவமற் றரசன் சொல்வார்
சீருடைய கெவுட நகர் சன்னில் வாழும்
செய சேகரன் என்பேரு செப்பு வார்கள்
பார்வனத்தில் விளங்குகின்ற செய்வீ கத்தில்
பலன்கொடுக்கும் அதிசயத்தைப் பார்க்க வந்தேன்
வேறேயேதும் ஒன்றுமில்லை அய்யா மந்திரி
விதிவசத்தை எவராலும் வெல்லொண் ணாதே.

## வசனம்

ஆனால் வாரும்பிள்ளாய் மந்திரி. நாமிருக்கப்படாகின்ற தேசம் கெவுடமாநகரம். என்பேர் செயசேகரன. என் மகள் புஷ்பரஞ்சினிக்கு சுயம்பிரமென்று அன்பத்தாறு தேசத்து இராசர்களை தருவித்து மணமாலை சூட்டினதின் பிறகு சகல தேசத்து இராசாக்களும் போய் விட்டார்கள். அந்நேரமே நான் மகாவிசனத்துடனே செகமண்டலாதிபதியாகிய இராசசிகாமணி யென்று அறியாமல் மெத்தவும் அபச்சாரம் செய்து விட்டேன். என்பேரில் இப்போது மனம் பொறுத்து ரெட்சிக்க வேணுமய்யா மந்திரியாகிய பரதரசகனே. இராசா விடத்தில் போய் சொல்லும் பிள்ளாய் மந்திரி.

அகோ வாருங்களய்யா சுவாமி செவுடதேசம் ஆளப்படா கின்ற. செயசேகர மகாராசரானவர் வந்திருக்கிறாரய்யா சுவாமி.

ஆனால் வாரும் பிள்ளாய் பரத ரசகனே அவரை நம்முடைய சமூகத்துக்கு அழைத்து வாரும்பிள்ளாய்.

அப்படியே நல்ல பாக்கியமய்யா சுவாமி

அகோ தெப்படியென்றால் செயசேகர மகாராசன் தன் மருமகனைக் காண வருகுற விதம் எப்படியென்றால்.

## 240

### தருவு

செயசேகரனும் அந்த மகராசனுந்
தெரிசித்துக் கொண்டாரே.
நயமங் களமதாக முகமறைந் திருபேரும்
இராச வரிசைகொண்டு பேசிக் கலந்து நின்று
இரசனை பொருந்திய வசன மிகுந்திடும்
புயபெலச் சந்திர விசையல் துரந்தர
விருது கட்டியங் கூற நாதர்கள் புடை சூழ
மெய்யான சக்ரவர்த்தி அய்யன் சமூகந்தன்னில்
நிருதர் த்ரையளக்க பரதநாட் டியஞ்செய்ய
நேசன்செய சேகர இராசனுங் கூடினார்.

## 241

### விருத்தம்

இராசரா சர்வரிசை யாக வேதான்
இரத்தினசிம் மாசனத்தில் மகிழ்ந்து கூடி
தேசரா சர்பணிய இருவ ரொன்றாய்
சிந்தைகளி கூர்ந்துமிகச் செழிப்ப தாக
வாசனையாய் மன்னன் பூர்வச் சக்ர வர்த்தி
யாமனார் செயசேகரரு மொன்றாய்
யோசனையாய் இருக்குமந்த வேளை தன்னில்
உண்மையுடன் நடக்குமதை உணரு வோமே.

### வசனம்

அகோ தெப்படியென்றால் செயசேகர மகாராசனும் மருமகனாகிய பூர்வச்சக்கிரவர்த்தி மகாராசனும் இருவரும் இராச வரிசையாக இரத்தின சிம்மாசனத்திலிருக்கும் போது நடக்கிற விதம் எப்படியென்றால்.

## 242

### விருத்தம்

சரசுவதிகங் கைநதிக் கரையில் வந்த
சண்டாள வணிகன்மகன் தானு மப்போ

நிறையுடைய பதந்தனையாள் வழுறு முக்குய
நேசமுள்ள பொட்டி தன்னை நிமிசந் தன்னில்
கரைபுரள நீர்ததும்பத் தடாகந் தன்னில்
காரணமாய்த் தள்ளி விட்டுக் கடக்க நின்றான்
சுரபிரை தாபிகளும் கண்டா ரந்த
துஷ்ட்டனைப் பார்த் தேதுமொழி சொல்லுவாரே.

வசனம்

அக்கேரமே சுரபி சுரதாபி என்குற இராசகுமாரர்கள் உருவின கத்தியுடனே வந்து யாரடா துன்பாதகனே இந்தப் பொட்டியை பொய்கையிலே தள்ளவேண்டிய காரணம் என்ன சொல்லும் பிள்ளாய்.

## 243

விருத்தம்

வாளுருவி வெட்ட வந்த தம்பி மாரே
மன்னவனே சொல்லுகிறேன் வகையைக் கேளும்
ஏழரைநாட் டுச்சனியன் பிடித்தாப் போலே
என்னையுமே மதிமயக்கு திந்த வேளை
கோளுறையும் பொட்டி நமக் காகா தென்று
குற்றமாத் தள்ளிவிட்டேன் குறைதா னுண்டோ
தாளுமென்றே செட்டி மகன் தருகி வைத்து
சங்கையுடன் ஏதுமொழி சாற்று வானே,

வசனம்

ஆனால் வாருங்கள் இராசகுமாரர்களே. நான் இந்தப் பொட்டியை கையினால் தொட்ட நாள் முதல் கொண்டு மண்ணாசை மனையாசை பொன்னாசை பொருளாசையுமில் லாமல் இது ஒரு பிரமையாகப் பிடித்துக் கொண்டு யென்னையும் மெத்த துன்பப்படுத்திக் கொண்டு தல்லவா நம்மள் குடிக்குக் கோளாக வந்து விட்டுதென்று நதியிலே தள்ளி விட்டேன் பிள்ளாய் பாலர்களே.

ஆனால் வாரும் தம்பி வர்த்தகனான செட்டியுடைய வாக்கி யத்தைப் பார்க்கிறபோது எனக்குச் சந்தேகமாய்த் தோற்றுகுது-

அது எப்படியென்றால் பெருந்துறை நாட்டிலிருந்து வந்து இப்பவும் பகலெல்லாம் யோசனை செய்து சூரிய பகவான் அஸ்த்த மனமானதின் பிறகு இரண்டாஞ் சாமத்தில் சரசுவதி நதியில் தள்ளி விட்டானல்லவா. இதே ஒரு சமுசயமாய்த் தோற்றுது. இந்தச் செட்டியையும் விடாமல் இந்தப் பொட்டியை இராத்திரி முப்பது நாழிகையும் இங்கே முழிப்பாக இருந்து காலமே சூரிய உதையத்துக்குப் பரிசோதனை பார்க்க வேணும் தம்பி சுரதாபி.

ஆனால் அப்படியே காத்துக்கொண்டிருக்கலாம் அண்ணா எனக்கு நித்திரை வராமல் ஒரு கதைப் பிரசங்கம் சொல்ல வேணுமண்ணா.

ஆனால் வாரும் தம்பி. நாமள் சித்தூர் பட்டணத்தி லிருக்கும் போது நமக்கு உம்பரச மாமுனிவர் சொன்ன கதையைச் சொல்லுகிறேன் கேளும் தம்பி.

ஆனாலப்படியே சொல்லு மண்ணே.

## 244

### கதை

### ஆசிரிய விருத்தம்

திருமகிமை காட்டியே முனிவனுரை சொன்ன கதை
 செப்புவேன் தம்பி கேளாய்
சிகதரச நகரமும் சீமையர சாட்சியாய்
 செங்கோல் கரத்தி லேந்தி
செகமண்ட லாதிபதி மகராச ராச
 சிகாமணி எனவி ளங்கும்
சிம்மாச னாதிபதி கம்மிகரு ணாகரன்.
 சிகபூர்வ சக்ர வர்த்தி

திக்கரசர் பணிவாரும் சர்க்குண விவேகமாய்
 தேசமதை ஆளும் நாளில்
செந்ததிர்ப் புதல்வன் சனி பகவா னானவர்
 தீதுற்ற மகிமை யாலே

செல்வமும் கனபவுசும் நாடுநக ரம்விட்டு
திக்கில்லா அகதி போலே
செயல் மொழிக் தறிந்திது பரதரச் சகனையும்
தேசசன் னாசி யாக்கி

அருமைதரும் மைந்தரும் மனைவியுட னேகியே
அருங்கா னகம்பு குந்து
அந்தண னிடத்துலே மைந்தர்களை யும்தந்து
அலைமோதி யேத வித்து
அகதிபர தேசிபோல் ஏழைக்கு ஏழையாய்
அவ்வனத் தில்தி ரிந்து
ஆனந்த னைக்கண்டு கூலிக் கணக்கெழுதி
அங்கேசில நாள் இ ருந்து

அங்கடம தாகஒரு செட்டியிட மாகவே
அம்மாளைத் தோத்து விட்டு
அந்ததுன் பாதகன் தந்திரம தாய்க்கொண்டு
அந்ததமான் றேவு சென்றான்
அங்கம் படபடத் தரசனும் மைந்தர்களை
அன்பாக வேசு மந்து
அரகரா சிவசிவா தெய்வமே என்றுருகி
அங்கம்புண் ணாகி நொந்து

வருகுற வழியிலொரு வரட்டாறு பொங்கியெதிர்
வருவதைக் கண்டு மன்னன்
வாடியொரு மைந்தனையும் அக்கரையி லேவிட்டு
மற்றுமொரு மைந்தர் தனையும்
மன்னன் எடுத்து அவதிகளுட னே அவர்
வரட்டாத்தில் தானி றங்கி
வாரினீர் தாண்டியே அக்கரையி லேசென்று
மைந்தனை யிறக்கி விட்டு

வுகைமோச மென்றுமவர் சற்றுமறி யாமலே
மதலையைக் கட்டி வைத்து
மறுபடியும் ஓருகுழந்தை அக்கரையில் இருக்குதென்று
வட்டாரத்தில் தானிறங்கி

வருகையிலே வெள்ளமது கிறுகிறென்று சுத்தியே
    மன்னனைக் கொண்டு செல்ல
அருமையுள்ள கோனாரும் ஆத்திலொரு வெள்ளாட்டை
    அதட்டியே, மேய்த்து வந்தார்

அந்நேரந் தன்னிலே மன்னனைக் கண்டெடுத்து
    ஆதரித் தடிமை யாக்கினார்
பெருமையுடன் மைந்தரும் இடச்சிமனை தனிலே
    பிரியமாய் வளரு கின்றார்
பின்னுமொரு மாய்கையாய் சனிபனொரு சூதாக
    பெரிய தூராக்க வென்று
கன்னந்துளைத் தானிவன் கள்ளனென் நேசிக்கி
    கையும்காலும் வாங்கி விட்டார்

பேருலகெல் லாம் அறிய மாறுகால் வாங்கிட
    பித்தனைப் போலி ருந்தார்
பேசாமல் அங்கந் துடித்துப் பதறவே
    பெற்றதொரு தாய்போ லவும்
பிள்ளைக் கிரங்கிமனம் மலர்மாது சரஷ்பதி
    பிரியமாய் ஓடி வந்து
பிசகாமல் அரசனையும் நேசமுடன் காத்திருந்து
    பெரியகதை மகிமை யிதுவே

## 245

### விருத்தம்

சீலமுள்ள மைந்தர்களிவ் வசன மாக
    திருக்கதையை விருப்பமுடன் செப்பக் கேட்டு
கோலவிழி மாதுநல்லாள் கண்மு ழித்துக்
    கொண்டிருந்து வெளியே றிக் குலவை யிட்டு
பாலர்களும் நம்மைந்தர் என் று எண்ணி
    பரதவித்து அங்கமெல்லாம் நொந்து புண்ணாய்
மேலேகுபீ றென்றெழுந்து மிதங்கி அப்போ
    விந்தைபொட்டிக் குள்ளிருந்து விளம்பு வாளே

### வசனம்

அகோ வாருங்களே பாலர்கள் பாலர்களே நீங்கள் சொன்ன கதைப்பிரசங்கமெல்லாம் கண்குளிரப் பார்த்துக் கேட்டேன்.

அது எவருமில்லை. இந்த துன்பாதகனான செட்டி என்னை அப்கடமாகப் பொட்டியுடனே கொண்டு போய் அந்தயான் றேவு துறையிலே வைத்திருக்கிறபோது உம்பரசமாமுனிவர் வந்து எனக்குச் சொன்ன கதைப் பிரசங்கத்தை உங்களுக்கும் அறிவித் திருப்பதினாலே நீங்கள் என்னுடைய மைந்தர்களுக்குச் சந்தேக மில்லையப்பா பாலர்களே.

ஆனால் வாருந்தம்பி சுரதாபி. நம்ம இராசாவிடத்திலே போய் தெரியப்படுத்துவோம் வாருந்தம்பி.

அகோ சரணஞ் சரணமய்யா சுவாமி. உங்களுடைய வாக்குப்படிக்கு நாங்கள் போய் பார்த்திருந்து கொண்டிருக்கும் போது அந்தச் செட்டி மனிதன் சரஷ்பதி நதிக்கெங்கையில் பொட்டியை விட்டெறிந்தான். நாங்கள் அதைப் பார்த்து யோசிக்கும்போது ஏதோ ஒரு கபடமாகத் தோற்றுதென்று இரு வரும் காலமே பரிசோதனைபார்க்கலாமென்று நாங்கள் ஒருவருக் கொருவர் கதைப்பிரசங்கம் சொல்லுகுறபோது அந்தப் பொட்டி யானது எங்களுடனே அநேக துயரங்களைச் சொல்லிப்பரிதாபப் பட்டு இருக்குதய்யா சுவாமி.

ஆனால் வாரும் பிள்ளாய் பரதரசகனே. நாம் அந்த பரி சோதனை பார்ப்போம் வாரும் பிள்ளாய்.

அகோ தெப்படியென்றால் அந்தப் பாலகர் வாக்கியத்தைக் கேட்டு பூர்வச் சக்கிரவர்த்தி மகாராசனும் பரதரசகனும் மற்று மூண்டான பரிசனங்களும் சரசுவதி நதிக்கரையிலே வந்திருக்கும் போது நவகோடி நாராயணஞ் செட்டி இராசனைக் கண்டு சொல்லுகுற விதம் எப்படியென்றால்.

## 246

### விருத்தம்

அப்போது செட்டிமகன் எழுந்திருந்து
அங்கமெல்லாம் நடுநடுங்கி அவனும் சொல்வான்
கற்புடைய மங்கையர்என் றறிந்தி டாமல்
கர்மவினைக் காளானேன் சஷ்ட்ட காலம்
கெற்பினையாய் என்னையுங்கள் வாளினாலே
சங்காரம் செய்குவதே தர்ம மையா
கொப்பெனவே என்று செட்டி அரசன் முன்பாய்க்
கும்பிட்டு அந்நேரங் கூறு வானே. (இன்னம்)

அப்படிக்குச் செட்டிமகன் சொல்லும் போது
அன்புடைய பாலர்களும் செவியில் கேட்டு
நற்புடைய வாளினால் இவனை வெட்டி
நதிக்கரையில் நரகபதி கொடுப்போமென்று
செப்பமுடன் இருவருந்தான் கோபங் கொண்டு
திறத்துடனே அவன்சிரசை அறுப்போமென்று
மெய்ப்புடனே வாளினால் ஓங்கும் போது
விந்தையுள்ள பரதரச்சன் வெண்டாமென்றார்

வசனம்

ஆனால் வாருமப்பா பாலர்களே வெல்வதும் தோற்பதும் விதிவசமென்று சொல்லிக்கொள்கிறார் அல்லவா. அப்படிப்போல அனுயோக விதியானது ஆரை விட்டது. அதுவுமல்லாத படிக்குச் சரணமென்ற பேரைக் குலைவாதை செய்தால் மகா துரோகமப்பா பாலர்களே.

## 247

விருத்தம்

பர்தரச் சகனே மந்திரி
வரவரபாங்குடன் சொல்லைக் கேளும்
அறிவோம் இன்னும்
வருகுற யோகம் எல்லாம்
விரசுடன் கெங்கை நீரில்
மிதந்திடும் பொட்டி தன்னை
சரசுவதி நதியை விட்டு
தான்கொண்டு வாரும் என்றான்

வசனம்

ஆனால் வாரும் பிள்ளாய் பரதரசகனே. சரசுவதி நதியிலே மிதந்து கொண்டிருக்குற பொட்டியை எடுத்துக் கொண்டு வாரும் பிள்ளாய். மந்திரி

அப்படியே நல்ல பாக்கியமாச்சுதய்யா சுவாமி.

அகோதெப்படியென்றால் அந்நேரமே பொட்டியை எடுத்துக் கொண்டு வந்து இராசாவின் முன்னே வைத்தார். அப்போது

இராசாவும் மகா சந்தோசத் துடனே தேவதைகளைத் தியானிதது அந்தப் பொட்டியைத் தொடவும் அந்தப் பூட்டானது படீரென்று திறந்து அந்நேரம் பொட்டியிலிருந்த மங்கையானவள் ஏழரை வருசம் அன்னம் ஆகாரம் இல்லாதபடியினாலே திரேகம் மெலிந்து பொட்டியை விட்டு வெளியேற தன்னுடைய நாயகன் பாதத்தில் வீழ்ந்து புலம்புகிற விதம் எப்படியென்றால்.

## 248

### தருவு

அய்யனே என் சாமிநாதா—இது
ஆருசெய்த தீவினையோ
பையரவை மெய்யில் வைத்த
பரமசிவன் சோதனையோ
கையுங்கால் இழக்காவென்று
கற்பித்தானோ பிரமதேவன்
வைகுண்ட ஃமவியநீலன்
வண்ணன் செய்த கோலந்தானோ

கன்றுக்குப்பால் ஊட்டாமலே
கறந்துநாங்கள் புசித்ததுண்டோ
மன்றிலிருந்து நாங்கள்
வழக்கோரம சொன்னதுண்டோ
அண்டி வந்த ஆகதிகளை
அநியாயம் செய்ததுண்டோ
குண்டணியும் கோளும் பேசி
குலைகளவும் செய்ததுண்டோ

தந்தை அன்னை சொன்ன பேச்சை
தப்பியே நடந்ததுண்டோ
வந்தவருக் கன்னங்கொடாமல்
வஞ்சனைகள் செய்ததுண்டோ
அந்தமுள்ள மேனியிலே
அசடுவந்த காரணத்தை
எந்தவிதம் என்றறியேன்
ஏழைபங்கில் திருவுளமே
சிந்தையெல்லாம் நொந்துருகித்
திருவடியைத் தெண்டனிட்டார்.

## 249

### விருத்தம்

தெண்டனிட்ட மனையாளைக் கண்டு வேந்தன்
செவ்வரிகண் ணீர்கலங்கத் தேம்பித் தேம்பி
கொண்டமன வெறுமைகளை மனதுள் கொண்டு
கோதையரே இவ்விதிக்கு ஏது செய்வோம்
வண்டணியுங் குழலாளை மடியில் வைத்து
மாதுபது மாபதியே மானே என்று
விண்டரசன் மதிமயங்கி ஏக்கம் பூண்டு
விளம்பினான் மனதுபுண்ணாய் தளம்பினானே

—பின்னும்—

தந்தையன்னை என்றறிந்து மைந்தர் வந்து
தன்மையுடன் தாயாரைச் சரணஞ் செய்து
விந்தைமலர் அடிபணிந்து திடுக்கிட் டேங்கி
மெல்லிநல்லாள் தன்னுடைய விதியை நொந்து
அந்தமுள்ள மைந்தர்களைக் கையால் வாரி
ஆவலுடன் முத்தமிட்டு ஆவல் தீர்ந்து
சிந்தை நொந்து மாதுபதி மாப திப்பெண்
தியங்கினாள் கவலைகொண்டு மயங்கினாளே

### வசனம்

அந்நேரமே புஷ்பரஞ்சினியானவள் தாதிமாருடனே ஓடி வந்து பதுமா பதியம்மாள் பாதத்திலே வீழ்ந்து நமஸ்காரம் செய்தாள் அப்போது பதுமா பதியானவள் தன்னுடைய நாயகனைப் பார்த்து இந்தப் பெண் யாரென்று கேட்டாள். அப்போது பூர்வச் சக்கிரவர்த்தி சொல்லுகிறது.

ஆனால் வாரும் பெண்ணே பதுமாபதியே. இந்தப் பெண் உனக்குத் தங்கையாக வேணும் பெண்ணே.

## 250

### விருத்தம்

சந்திரசே கரன்ஈன்ற செல்வி மாது
தய்யலரைப் பார்த்துமனச் சந்தோஷ மாகி

வந்து நமஸ் காரமென்று பணிந்து நின்ற
மாதுபுஷ்ப ரஞ்சினியை மடியில் வைத்து
விந்தையுள்ள கண்மணியே நமக்கு வாய்த்த
வேந்தனுக்கு மாலையிட்டு மேன்மை பெற்றாய்
எந்தனுட தங்கைநீ ஆச்சு தம்மா
என்றுபது மாபதியும் இயம்பினாளே

வசனம்

அகோதெப்படியென்றால் அந்த புஷ்ப ரஞ்சினியும்: பதுமா பதியும் இருவர் இரண்டு பேரும் தணைமையாயிருக்குறபோது இராசன் கண்டு மெத்தச் சந்தோஷத்துடனே பாலகருடனே சிரித்து விளையாடிக் கொண்டிருக்கும்போது தெய்வீகத்தைத் தேடி தேவர்கள் வருகிற விதம் எப்படி யென்றால்

## 251

விருத்தம்

கர்த்தன் எனும் புண்ணியபூர்வச் சக்கிர வர்த்தி
கருணைபுரிந்து வரமுதவக் காலம் என்று
பத்தர்களும் சித்தர்களும் அனந்தங் கோடி
பரமரிஷி முனிவர்களும் பார்ப்போமென்று
அத்தரசு கைலாசம் பதி யிருந்து
அன்புடனே பார்வதியும் மனமிலங்கி.
சுத்தவெள்ளை விடைமீதில் ஏறிக் கொண்டு
சந்திரதெய் வீகத்தில் தோன்றி னாரே

## 252

ஆனந்தக் களிப்பு

தருவு

ஆதிபர மேஸ்பரரும் வந்தார்
அன்புடன் தெய்வீகம் தேடினார்
சோதிமணி வெள்ளைவிடை ஆட—நித்திய
சுபமங்கள மான பார்வதியுங்கூட

சங்குமணி ஆபரண மாட—ருத்திராட்சத்
தாவடமும் வெண்ணீறும் சோபிதங்கள் ஆட
பொங்குமதி அம்புலித்தோல் ஆட—கண
பூதர்களும் நாதர்களும் வாதுபுரிந் தாட (ஆதி)

மான்மழுவும் சதுர்புயமும் ஆட—கொண்டல்
மயிலிறகு ஒயிலாக மார்பி லிருந் தாட
கானல்வரி வேங்கையுரி ஆட—அந்த
கையில்திரு வோடும் கானகமும் ஆட (ஆதி)

மணிமகர குண்டலமும் ஆட—காளி
வாதாடி வாதாடி வந்துமுன் ஆட
தொணிகொண்ட சேகண்டி ஆட—வச்சிர
சூலாயு தம்சங்கு தோளிலசைந் தாட (ஆதி)

திருமாலும் நான்முகனும் ஆட—நல்ல
தேவர்களும் முனிவர்களும் சித்துவிளை யாட
குருவான கோசிகனும் ஆட—நல்ல
கோலமறை நாரதரும் சீலமுடன் ஆட
சித்திவித்தி யாதருமம் ஆட—நல்ல
தெய்வீகம் உள்ளவர்கள் சிறந்து விளையாட (ஆதி)

## 253

### விருத்தம்

தேவர்களும் முனிவரும்மற் றுள்ள பேரும்
சிறப்புடனே தெய்வீகம் தன்னில் வந்து
மேவர்கள் புகழ்ந்துபணி விடைகள் செய்து
விருப்பமுட னேயவரும் விரும்பிப் போற்ற
ஆவலாய் பூர்வச்சக்ர வர்த்தி மன்னன்
அன்புள்ள பதுமாபதியும் அடிவ ணங்க
காவலாள் மைந்தர்மந் திரிக ளெல்லாம்
கண்டவர்கள் ஈசுவரரைத் தெண்ட னிட்டார்

## 254

### தருவு

சரணஞ் செய்தாரே—ஈசுவரரைச்
சரணஞ் செய்தாரே

சரணஞ்செய் தாரந்தச் சாமியை அனைவரும்
தற்காத்து இரெட்சியும் சண்முக நாதா (சரணஞ்)

மூவரே ஆதிமால் முனிவரைப் போற்றியே
தேவர்கள் தெரிசனஞ் செகமதி லேகண்டோம்.
அண்டர்கள் முனிவர்கள் மண்டலந் தனில் வந்து
அய்யன் பூர்வச் சக்ரவர்த்தி மகராசன் (சரணஞ்)

மாது வல்லியும் மைந்தர் இருவரும்
மந்திரி பரத ரச்சக னுங்கூட (சரணஞ்)

### வசனம்

ஆனால் வாருமப்பா, பூர்வச் சக்கரவர்த்தி மகா ராசனே, உங்களைப் பிடித்த காலச் சனியன் விலகுறதற்கு நாளாச்சப்பா மகனே, நீ யொன்றுக்கும் பயப்படாதே. உன்னைப் பிடித்த சனிபகவான் விலகினதின் பேரில் மகராசனாக இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு இருமப்பா மகனே.

## 255

### விருத்தம்

மன்னனைப்பின் தொடர்ந்தசூரிய குமாரன் மைந்தன்
வந்தவன்ஏ ழரைவருசம் வாசம் செய்தான்
இன்னுமவர் இடந்தனிலே இருப்போமென்றால்
இடுக்கண்களும் மெத்தவுண்டு என்று எண்ணி
கன்னியந்த மாதுபதி மாபதிப்பெண்
கற்புநிலை தனைலாகக் காய்ச்சி விடும்
எண்ணியே சனிப்சவான் காக மேறினே
இயலுடனே தெய்வீகந் தனில்வந் தா

## 256

### தருவு

இருண்ட மேகம் போலே கறுத்த
சுருண்ட மயிரும் பரட்டையாய்
விரித்த தலையும் பெருத்த வயிறும்
மேகம் போலே மேனியார்

கருத்த முகத்து 'றிரத்து டனே
காலச் சனியன் தோன்றினான்
கண்ட கண்டவர் மிரண்டு ஓடிடக்
கண்களில் பொறிப றக்கவும்
சண்டா ளன்எனும் கோபத் துடனே
தாவிக் குதித்துத் தாண்டியே
எங்கும் மயங்கக் கறுத்த மேனியாய்
இருப்புத் தடியைச் சுருட்டியே
ஏகச் சயன மாகக் காகம்
ஏறிச் சனியன் தோன்றினான்

**வசனம்**

அகோதெப்படியென்றால் சூரியன் குமாரன் சனியேசுவர பகவானானவர் பூர்வச்சக்கிரவர்த்தி மகாராசனை இளமையிலே தொடர்ந்து ஏழரை வருசமாச்சுதென்று மன்னனைக் கண்டு ஒரு வாக்குத் தத்துவம் கொடுத்து வருவோமென்று தெய்வீகத்தைத் தேடி வந்து சேர்ந்தான் என்றவாறு.

அகோ'தெப்படியென்றால் பூர்வச் சக்கரவர்த்தி மகாராசன் தேவாதிகளுடைய பாதத்திலே வீழ்ந்து நமஷ்காரம் செய்து வாக்கு வரம் பெற்றுக் கொள்கிறவிதம் எப்படியென்றால்.

## 257

**விருத்தம்**

மண்ணுறவாய் விண்ணுருவாய்ப் பாய்ந்து தேடி
மாலயனுக் கெட்டாமல் வளர்ந்த சோதி
எண்ணரிய முனிவர்களும் தேவர் சூழ
இருஷிகளும் ஆகவருந் தேவர் கூட
கண்ணெதிரப் பார்வதிதெய் வீகந் தன்னில்
கண்டுதெரி சினஞ்செய்வோம் என்ற ரசன்
பொன்னடிதந் தெனையாளும் கருணை வாழ்வே
போற்றினேன் என்விருமை ஆற்று வாயே

## 258

**தருவு**

ஆதி பூரு வான லிங்கமே சிவசிவ
அன்பர் பங்கில் உகந்த லிங்கமே சிவசிவ

நீதி யாகிய ஞான லிங்கமே அரகரா
நீல விடத்தை உண்ட லிங்கமே
கோதில் லாத வெள்ளை லிங்கமே—மன்மிளகி
கூட வாழும் சொக்க லிங்கமே
பாத கமலம் தந்த லிங்கமே—மார்க்கண்டனுக்குப்
பதவி கொடுத்துக் காத்த லிங்கமே

அன்பர் பயத்தைத் தீர்த்த லிங்கமே — செகமெல்லாம்புகழ்
அருண கிரியில் உகந்த லிங்கமே
கண்டந் தன்னில் கருத்த லிங்கமே வரமருள்புரி
கயிலை வளரும் காசி லிங்கமே
கண்டன் மனைக் கொண்ட லிங்கமே—சிவகெதி தரும்
சதுர கிரியில் வளர்ந்த லிங்கமே
கொன்றை மாலை அணிந்த லிங்கமே—எனக்கு மோட்சம்
கொடுத்துக் காக்க வந்த லிங்கமே

வசனம்

அகோ சரணஞ் சரணம் அய்யா சுவாமி. அடியேனுக்கு தேவரீர் ரொம்பவும் மனம் வைத்து உத்தாரங்கள் கொடுக்க வேணுங்களய்யா சுவாமி.

## 259

### விருத்தம்

சகலஉல கங்களெல்லாம் புகழ்ந்து போற்றும்
சதிர்விளங்கும் புண்ணியபூர்வச் சக்கிர வர்த்தி
பகலவன் குமாரன் உனைத் தொட்ட தோசம்
பனியெனவே பஞ்சுபஞ்சாய்ப் பறந்து போச்சு
செகமதிலே விளையாடி ஆண்டிருந்த
சிகதரசக புரநகரம் செங்கோல் நீதி
சுகமுடனே வாழ்ந்திருக்கக் கடவதென்று
சுந்தரன் மனமகிழ்ந்து துணைசெய் தாரே.

வசனம்

ஆனால் வாருமப்பா மகனே. உன்னைப் பிடித்த காலச் சனியன் இந்த நாழிகையிலே விலகிப் போகப் போகுது மகா ராசனாக இராச்சியம் பரிபாலனம் பண்ணிக்கொண்டு இருமப்பா. இந்தாரும் விபூதி பஞ்சாட்சரமென்று கொடுத்தார். அருள் செய்தார் என்றவாறு.

ஆனால் வாரும் பிள்ளாய் பூர்வச்சக்கிரவர்த்தி மகாராசனே நான் உன்னிடத்தில் இளமையிலே வந்து துயர்ந்தேனல்லவா இப்போது ஏழரை வருசம் சரியாச்சுது. இனிமேல் உன்னிடத்தில் இருக்கிறது நமக்கு நியாயமல்ல. அது எப்படியென்றால் உன்னுடைய மனைவியாகிய பதுமாபதியுடைய கற்புத்தீயானது அக்கினிப் பிரவேசமாகப் பத்தி எரியுது. இனிமேல் நான் என்னுடைய இருப்பிடத்துக்கு போகவேணும். உமக்கு வேண்டிய வரம் கேளும். அட்டியில்லாமல் குடுக்கிறேன் பிள்ளாய்.

ஆனால் வாருமய்யா சுவாமி. ஆதியிலே பிராமண சொரூப மாக வந்து என்னைத் துயர்ந்த நாளிது பரியந்திரம் தாயோட பிள்ளை சேராமல் பிள்ளையோட தாய் சேராமல் மனையாள் மந்திரி முதலாகிய பரிசனங்களுமிழந்து மறுப்படா மேனி மறுப் பட்டதின்பிறகு நான் என்ன வரம் கேள்க்கிறது. நமக்கு உன்னுட வரம் வேண்டாம். தேவரீருடைய கிருபை கடாட்சமே பரிபூரண மாச்சுதையா சுவாமி.

## 260

### விருத்தம்

மன்னவனே பொறுத்தருளும் அரசர் கோவே
மண்டலமெல் லாம்புகழும் மகுட வேந்தா
உன்னுடைய மனதில்ஆ யாசம் வேண்டாம்
உன்மனதுக் கேற்றவரம் தாரேன் இப்போ
என்னுடைய சேதியிந்த லோகந் தன்னில்
யீரேழு புவனமதில் எங்கும் சொல்வார்
வின்னமில்லா துனைக்காப்போம் சக்கிர வர்த்தி
வேண்டிய வரங்கேளு மென்று ரைத்தார்.

### வசனம்

ஆனால் வாருங்களய்யா சுவாமி, சனிபகவானே. தேவரீ ருடைய மனதுபோலாகட்டும். இப்பவும் அடியேனுடைய கையும் காலும் வளர்கிறதற்குக் கிருபை செய்யவேணுமய்யா சுவாமி.

அப்போது சனிபகவான் திடீரென்று ஓடி வந்து பூர்வச் சக்கிரவர்த்தி இராசனை வாரி எடுத்து மடிமீதில் வைத்து தம் முடைய கரங்களினாலே இராசாவினுடைய காலும் கையும் தடவிக் கொடுத்த உடனே ஆலம் விழுதுபோல் காலும் கையும் வளர்ந்தது.

அப்பால்—

ஆனால் வாருமப்பா பூர்வச் சக்கிரவர்த்தி. இனிமேல் உனக்கு வேண்டிய வரங்கேட்டுக் கொள்ளுமப்பா.

## 261

### விருத்தம்

செங்கமல மலர்சிறந்த கர்மந் தீர்ந்து
செழுங்கதிர்போல் முளைத்தெழுந்த திரேகம் எல்லாம்
தங்கநிற மானபூர்வச் சக்கிர வர்த்தி
சனிபகவான் பாதமதில் சரணஞ் செய்து
எங்களைநீர் துயர்ந்தபலன் பெற்றுக் கொண்டோம்
எனதடியார் தமைத்தொடுவ தில்லை என்று
சங்கர சிவன்அறியச் சொல்ல வேணும்
சத்தியமென் றேஅரசன் சாற்றி னாரே.

### வசனம்

அகோ வாருங்களய்யா சுவாமி, சனிபகவானே. உம்முடைய கிருபையினாலே அடியேனுக்குக் காலும் கையும் வளர்ந்த தல்லவா. ஆனால் ஒருவரம் கட்டளையிட வேணுமையா சுவாமி. அது எப்படி என்றால் இந்தப் பூமியின்கண்ணில் மனுவிசயத்தில் சகல சீவார்த்தினைகளுக்கும் உம்முடைய சூதினால் இடுக்கண் வந்து நேரிடுங் காலத்தில் யாதாமொருவர் பூர்வச் சக்கரவர்த்தி யென்று நினைத்தாலும் என்னுடைய சரித்திரங்களை யார் எழுதிப் படித்தாலும் என்னுடைய பேர்களைப் பத்தி விசுவாசத் துடனே காதினால் கேள்க்கிற பேர்களிடத்திலும் அவர்களை என்றைக்கும் சேர்கிறதில்லையென்று அவர்கள் இருக்கிற திசையை நோக்கிக் கண்ணினால் பார்க்கிறதில்லையென்று இந்த சாட்சாதி பகவானாகிய சதாசிவன் பேரில் ஆணையிட்டுத்தர வேணுமய்யா சுவாமி.

ஆனால் அப்படியே தருகிறேன் பிள்ளாய்.

## 262

### விருத்தம்

பண்புடைய புண்ணியபூர்வச் சக்ர வர்த்தி
பார்த்திபனே சொல்லுகுறேன் பகரக் கேளாய்
அம்புவியில் உனது திரு நாமந் தன்னை
ஆர்புகழ்ந்து சொன்னாரோ அவர்கள் தன்னை

சம்புசதா சிவன்அறியத் தொடுவ தில்லை
சத்தியந்தான் இந்தமொழி சாத்தி னேன்நான்.
இன்பமுடன் உனக்குவரம் தந்தேன் இப்போ
எந்நாளும் சுகமதாய் இருந்தி டீரே.

**வசனம்**

ஆனால் வாரும் பிள்ளாய் பூர்வச்சக்கிரவர்த்தி இந்தப் பூலோகத்தில் யாருக்கும் ஒரு இடுக்கண் வந்த வேளையிலே உம்மைப் புகழ்ந்து தோத்திரஞ் செய்தவர்களை நான் கண்ணினாலே பார்க்கவில்லை. நீ எப்போதும் போல செகதரசகா புரத்தில் இராச்சிய பரிபாலனம் செய்து கொண்டு என்றைக்கும் சுகமே இரும்பிள்ளாய். இந்தாரும் பஞ்சாட்சரம் விபூதி வாங்கிக்கொள்ளும் பிள்ளாய் என்று தெய்வலோகத்துக்கு எழுந்தருளினார் என்றவாறு.

அகோதெப்படியென்றால் அந்நேரமே பிரமா விஷ்ணு உருத்திரன் முதலாகிய சத்ரிஷிகளும் சகல தேவர்களும் கூடி பூர்வச் சக்கிரவர்த்தி மகாராசனுக்கும் புஷ்ப்ப ரஞ்சினிக்கும் திருக்கலியாணம் செய்குறதற்குச் சரசுவதி நதியிலே திருமஞ்சனம் ஆடி கலியாண மண்டபம் சிங்காரித்துச் சகல வாத்தியங்களும் முழங்க தெய்வீக புரத்தில் புஷ்ப்ப ரஞ்சினைக்கும் பூர்வச் சக்கிர வர்த்திக்கும் திருக்கலியகணம் செய்து சிரஞ்சீவியாய் இருக்கக் கடவதென்று அனுக்கிரகம் செய்து தேவாதிகளுடனே பரமேசுவரன் கைலாசத்துக்கு எழுந்தருளினாள் என்றவாறு.

## 263

**விருத்தம்**

மாதுபுஷ்ப்ப ரஞ்சினையை விவாகம் செய்து
மன்னவனும் கலியாண மாலை சூட்டித்
தீதில்லாத் தெய்வீகந் தனிலி ருந்து
தேவிசரசு வதியாளைத் தெண்ட னிட்டு
நீதமுள்ள பரதர சகனைப் பார்த்து
நெறிசிறந்த செகதரச புரியை நன்றாய்
ஆதவன் போல் ஒளிமுழங்க முன்னே சென்று
அலங்காரம் செய்யுமென்று அருள்செய் தாரே.

வசனம்

ஆனால் வாரும்பிள்ளாய் பரதரசகனே. நீரும் சிறிது சேனைகளுடனே செகதரசகபுரம் சென்று பட்டணமெல்லாம் மகர தோரணங் கட்டி நன்றாக அலங்கரியும் பிள்ளாய்.

அப்படியே நல்ல பாக்கிய மாச்சுதய்யா சுவாமி.

## 264

### விருத்தம்

வாலையெனும் சரசுவதியாள் தெய்வீ கத்தில்
மகிமையர சாட்சிநன்றாய் விளங்கச் செய்து
சீலமுள்ள மனைவியர் களுடனே இரண்டு
செல்வர்களும் திக்கடங்காச் சேனை யோடும்
மாலிணையை மறவாத சத்திய வந்தன்
மன்னன்பூர்வச் சக்கரவர்த்தி மகிழ்ச்சி பொங்கி
சீலமுள்ள செகதரச புரத்தில் செல்லத்
திறப்பட்டார் மனமகிழ்ந்து புறப்பட் டாரே.

வசனம்

இந்த விதமாகப் பூர்வச் சக்கரவர்த்தி மகராசனும் செய சேகரன் முதலாகிய அன்பத்தாறு தேசத்து இராசாக்கள் சூழ்ந்து வர தேவர்கள் புஷ்பமாரி பொழிய தேவதுந்துமி முழங்க முப்பத்து இரண்டு வகை மேளதாளத்துடனே சத்தம் முழக்கிக் கொண்டு வருகுறபோது பரதரசகனைக் கேட்டு நடன நாடக சங்கீதத் துடனே வந்து எதிர் கொண்டு அழைத்துப்போய் ஆனந்த பிரியத்துடனே பூர்வச் சக்கரவர்த்தி மகாராசன் செக தரசகபுரியில் மகாமணி மண்டபமாகிய சிம்மாசனக் கொலுவில் வீற்றிருந்தார் என்றவாறு.

## 265

### தருவு

பட்டாபி சேகம் கொண்டாரே—இராசாதிராசன்
பட்டாபி சேகம் கொண்டாரே,
பட்டாபி சேகம் கொண்டார்
அட்டகா சூரியமுடன்
இரத்தினசிம் மாசனத்தில்
அட்டமு டன் இருந்து (பட்டாபி)

தேசாதி தேசர்களும்
இராசமன்னன் மகாராசன்
ஆசார மாய்க் கொலுவில்
அய்யன் பூர்வச் சக்கரவர்த்தி (பட்டாபி)

தும்புரு நாரதர்பாட
இரம்பையர் நடனமாட
அன்புடன்சிம் மாசனத்தில்
அரசன் பூர்வச் சக்கரவர்த்தி (பட்டாபி)

வச்சிரப் பதக்கம் மின்ன
மதனரிச் சந்திரன் என்ன
தச்சரூப மாக வந்து
சரசுவதி கொடுக்க வாங்கி (பட்டாபி)

சங்கிருத மேழுமுழங்க
தர்மதா னம்விளங்க
துங்கம் பூர்வச் சக்கரவர்த்தி
சுகிர்தமங் களமாக (பட்டாபி)

## 266

### விருத்தம்

சுந்தரம்சேர் நவமணிபோல் ஈன்றெடுத்த
சுரபிசுர தாபியுடன் சுபிட்ச மோங்கி
சந்திரசே கரன் ஈன்ற கருணை மாது
தையல்பது மாபதியுந் தங்கை யானாள்
விந்தையுறு புஷ்பரஞ் சினிப்பெண் ணாளும்
வேந்தனுட கிளைகோத்திரம் மிகவே ஓங்கி
இந்திரனும் இந்திராணி போலே கூடி
எந்நாளும் நீடூழி வாழி தானே.

## 267

### மங்களம்

மங்களம்—செயசுப—மங்களம்.
இராசாதி ராசனுக்கு மங்களம்—எங்க.
இராச்சிய சிகாமணிக்கே மங்களம்
தேசாதி தேசம் புதழ் செகதரசக நகரம்
வாசம் பூர்வ சக்கரவர்த்தி மன்மத சிகாமணிக்கும்
(மங்களம்)

மங்கைபது மாவதிக்கும் மாதுபுஷ்ப்ப ரஞ்சினைக்கும்
துங்கசங் கீதவிலாச சுரபிகர தாபியர்க்கும்
(மங்களம்,

ரெங்கநாத சுவாமிக்கு மங்களம்—எங்கள்
நாடாளும் ஈசுவரர்க்குச் செயமங்களம்
துங்கமயில் வாகனர்க்கும் சொகுசான தெய்வானைக்கும்
இங்கிதம் சேர் கண்ணனுக்கும் மங்களம்—எங்கள்
ஈசுவரி முத்துத் தாய்க்குச் செய மங்களம்
அங்காள ஈசுவரிக்கும் அம்மை சரசுவதிக்கும்
எங்கள் சக்கா தேவியர்க்கும் மங்களம்—எனை ஈன்ற
ஈசுவரி எறம்மாளுக்குச் செயமங்களம்

சங்கரனார் பாலருக்கும் சத்திவினா யகருக்கும்
துங்கமத யானைக்கும் மங்களம்—எங்கள்
சொக்கலிங்க நாதருக்குச் செயமங்களம்
வங்காரப் பேந்திரர்க்கும் மகராசி அம்மாமார்க்கும்
துங்கமுள்ள ஈசுவரிக்கும் மங்களம்—எங்கள்
சொர்னநர சிங்கருக்குச் செயமங்களம்
மங்களம் செயமங்களம் செய மங்களம்—நித்திய
சுபமங்களம் மங்களம்.

குருவே துணை—கடவுள் துணை
சரசுவதி முன்னிற்கவும்.

**பரிதாபி வருடம் ஆனி மாதம் 7 ஆம் தேதி வியாழக் கிழமை பூர்வபட்சம் திதி சஷ்டி மக நட்சத்திரம் அமிர்த யோகம் இந்தச் சுபதினத்தில் பலக்கனூத்துக் கிராமம் ஒண்டி வாட நாயக்கன் ஊருலே இருக்கும் சூரப்ப நாயக்கனுக்கும் இராமசாமி நாயக்கனுக்கும் மேற்படி கிராமம் கம்பிளி நாயக்கன் பட்டியிலே இருக்கும் வாத்தியார் குருமூர்த்தி செட்டியார் இந்த ஏடு எழுதி முகிந்தது. முற்றும் குருவே துணை. சரசுவதி துணே. எறம்மா துணை. முத்துத் தாயி துணை செய்யவும், சக்கம்மா துணை.**